# மனமே மனமே - இறகுபோடு

ஆசிரியர்
**காமராஜ்**

# மதிப்புரை

வாழ்வியலின் தத்துவங்களை நண்பர் திரு. காமராஜ் அவர்கள் தன்னுடைய மற்றும் நண்பர்களின் அனுபவ வாயிலாக பல ஆண்டுகளாக ஆராய்ந்து, அறிந்து, சிந்தித்து சிந்திய முத்துக்களைத் தொகுத்து தனது படைப்பில் வெளிக் கொணர்ந்துள்ளார். நண்பரை கடந்த 45 ஆண்டுகளாக நெருங்கி அறிவேன். எந்த ஒரு விடயத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் தனது பகுத்தறிவு கொண்டு அலசிப் பார்த்து முடிவு செய்யும் ஒரு அசல் சிந்தனையாளர்.

விதி, மதி, மனம் போன்ற மனிதனின் நுண்ணிய கூறுகளை மிகத் தெளிவாக பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் தனக்கே உரிய எளிய பாணியில் விளக்கியுள்ளார். ஒரு சராசரி குடும்பஸ்தன் அன்றாடம் சந்திக்கும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கு இந்த படைப்பு ஒரு கலங்கரை விளக்காகும். மனோ இயல் மற்றும் உலக இயல் ஆய்வாளர்களுக்கு இந்த நூல் ஒரு தூண்டுகோல் பெட்டகமாக அமைந்துள்ளது.

பொருளை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்ற இந்த நவீன உலகில் வாழும் மெய்யன்பர்களே எனது நண்பரின் அரிய படைப்பைப் படித்துப் பாருங்கள். உங்களையும் உங்களைச் சுற்றியுள்ளோரையும் இந்த நூல் ஒரு மாயக்கண்ணாடி போல தெளிவாகக் காட்டும். வாழ்க்கையை புரிந்து ருசித்து வாழ வழிபிறக்கும். “மனமே மனமே - இறகு போடு’’ என்ற இந்த படைப்பு ஒரு சாமானியனின் அனுபவ வெளிப்பாடாகும்.

அன்புடன்

# முகவுரை

இறைவன் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டவன். அவரை நேரம், காலம் போவது தெரியாது சிந்தித்துக் கொண்டேயிருக்கலாம். சிந்திக்க சிந்திக்க அவரைப் பற்றிய உண்மை, அவர் படைத்த இந்த பிரபஞ்சம், இந்த உலகம், அதில் வாழும் மக்கள் எல்லாவற்றையும் பற்றிய அவரது படைப்பு இரகசியங்களை ஒவ்வொன்றாக நமக்கு அவரே தெரியப்படுத்துகிறார். அதைத் தன் மூளை கண்டுபிடித்ததாக மனிதன் சொல்லிக் கொள்கிறான். ஆனால் எல்லாம் அவரே. அற்புதங்கள் நிகழ்த்துவதும் அவரே, அக்கிரமங்கள் செய்வதும் அவரே.

எப்பொழுதோ செய்தித்தாள்களில் வாசித்த செய்திகள் இரண்டை இங்கு எடுத்துக்காட்டாகத் தருகிறேன். வாசகர்களும் அதைப் படித்திருக்கலாம். வடமாநிலம் ஒன்றில் தன் நிறைமாத கர்ப்பிணி மனைவியை பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு ரயிலில் ஒருவர் அழைத்துச் செல்கிறார். அந்தப் பெண்ணிற்கு இயற்கை உபாதைபோல் இருந்திருக்கிறது. கணவனிடம் சொல்லிவிட்டு அந்த ரெயில் பெட்டியில் உள்ள கழிவறைக்கு சென்றிருக்கிறார். அங்கே போய் அமர்ந்ததும் குழந்தை பிறந்து கழிவுத் துவாரம் வழியாக ரயில் தண்டவாளத்திலும் விழுந்து விட்டது. அந்தத் தாய் பதறிப்போய் எழுந்து ஓடிவந்து கதவைத் திறந்து ஓடும் ரயிலிலிருந்து குதித்து விட்டாள் பிள்ளையை எடுக்க. நேரமோ இரவு நேரம். இந்தப் பெண் ரயிலிலிருந்து கீழே குதித்துவிட்டதைப் பார்த்த சகபயணிகள் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்தி இருக்கிறார்கள். வண்டி ஒரு கி.மீ. தொலைவு சென்று தான் முற்றிலும் நின்றிருக்கிறது. பயணிகள், ரயிலை நடத்துனர், ஓட்டுநர் எல்லோரும் ரயிலைவிட்டு இறங்கி தங்களிடமிருந்த விளக்கு, டார்ச் லைட் முதலானவற்றின் உதவியுடன் அந்தப் பெண் விழுந்த இடம் நோக்கி ஓடியிருக்கிறார்கள். அந்தப் பெண்ணின் கணவரும் கழிவறையில் பார்த்துவிட்டு அங்கு

அந்தப் பெண் இல்லாததைக் கண்டு ஓடியிருக்கிறார்.

என்ன விந்தை, ரயில் பாதையை விட்டு ஒதுங்கி நடைபாதையில் அந்தப் பெண் பிறந்த குழந்தையையும் கையில் வைத்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருந்தாளாம். குழந்தைக்கு எந்தக் காயமும் இல்லை. தாயின் மடியில் குழந்தை அழுது கொண்டிருந்திருக்கிறது. இந்தப் பெண்ணிற்கு முழங்கையில் மட்டும் சிறிய சிராய்ப்புக் காயம், வேறொன்றுமில்லை. நடந்த விபரத்தைக் கேட்டு எல்லாரும் வியப்படைந்து தாயையும் சேயையும் ரயிலில் ஏற்றி அடுத்த நிறுத்தத்தில் வண்டியை நிறுத்தி அந்த நிலைய அதிகாரி மூலம் அந்த ஊர் மருத்துவமனையில் சேர்த்து தாய்க்கும் சேய்க்கும் முதலுதவி செய்திருக்கிறார்கள்.

இன்னொரு நிகழ்வு. அது நம் தமிழ்நாட்டில் நடந்தது. தலைபிரசவத்திற்காக ஒரு பெண்ணை காரில் கிராமத்திலிருந்து அழைத்துக் கொண்டு பக்கத்து ஊர் மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். செல்லும் வழியில் ஒரு பிள்ளையார் கோயில் இருந்திருக்கிறது. அந்தப் பிள்ளையாரை வணங்கி விட்டுச் செல்லலாம் என்று அந்த கர்ப்பிணிப் பெண் சொல்லியிருக்கிறார். அதனால் காரை நிறுத்தி அந்தப் பிள்ளையாரை வணங்கியிருக்கிறார்கள். பிறகு அந்தப் பெண் ஒரு பத்து ரூபாய் தாளை எடுத்து அங்கிருந்த உண்டியலுக்குள் கையை விட்டு உள்ளே போட்டிருக்கிறாள். அப்பொழுது அவள் கையில் வெடுக்கென்று ஏதோ கடித்தது போல் இருந்திருக்கிறது. அலறிக்கொண்டே கையை உதறி வெளியில் எடுத்திருக்கிறாள். அவளது புறங்கையில் ஏதோ காயம் இருந்திருக்கிறது. அந்தப் பெண்ணும் மயங்கிவிட்டாள். விரைவாக மருத்துவமனை சென்றிருக்கிறார்கள். போகும் வழியிலேயே அந்தப் பெண்ணும் அவள் வயிற்றிலிருந்த சிசுவும் இறந்து போனார்கள். காரணம் சொல்லியிருக்கிறார்கள், வேறொன்றுமில்லை. அது நல்ல குளிர்காலம். நேரமும் இரவு நேரம். ஒரு நாகம் குளிருக்காக உண்டியலுக்குள் போய்

தஞ்சம் புகுந்திருக்கிறது. இவள் கையை உள்ளே விடவும் தீண்டிவிட்டது.

அங்கே அவ்வளவு பெரிய விபத்திலிருந்து அந்தத் தாயையும் சேயையும் காப்பாற்றியது இறைவனே. இங்கே எந்த விபத்தும் இல்லாது அரவத்தை தீண்ட வைத்து அதுவும் அவரை வணங்கிய பொழுது இருவரையும் கொன்றதும் அதே இறைவனே. கருணாமூர்த்தியும் அவரே, கல்நெஞ்சக்காரரும் அவரே.

நான் ஆன்மிகவாதியில்லை, ஞானியில்லை, எழுத்தாளனில்லை, பெரிய சிந்தனையாளன் இல்லை, பெரிய படிப்பாளியுமில்லை. இதற்கு என்ன காரணம் என்று என்னால் சொல்ல முடியாத போதும் ஆன்மிகப் பெரியவர்கள், ஞானிகள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் பெரிய பெரிய படிப்பாளிகள் விளக்கம் சொல்லட்டும். வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும்.

என் சிந்தனைக்கு எட்டிய கருத்துக்களை இங்கே ‘‘மனமே மனமே - இறகுபோடு’’ என்ற தலைப்பில் வாசகர்களுக்கு தருகிறேன். இவை பலவற்றை பலபேர் தங்கள் தங்கள் வாழ்க்கையில் உணர்ந்திருக்கலாம். சிந்தனையாளர்கள், பெரியவர்கள் கருத்தில் வேறுபடலாம். பாராட்டுக்களும், கண்டனங்களும் எப்பொழுதுமே வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாக நான் என் வாழ்நாளில் இதுவரை கண்டறிந்த உண்மைகள் இவை. அவ்வளவுதான்.

நன்றி. வணக்கம்.

ஆசிரியர்

**காமராஜ்**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| *1.* | இறைவன் | - | *9* |
| *2.* | ஆன்மா, உயிர், உடல் | - | *38* |
| *3.* | விதி, மனம், மதி | - | *42* |
| *4.* | குடும்பம், பணம் | - | *85* |
| *5.* | உலகவியல் | - | *101* |
| *6.* | மனசாந்தி | - | *149* |

# ஸ்ரீகாயத்ரி

ஓம் பூர்ப்புவஸ்ஸுவ :

தத்ஸ விதுர்வரேண்யம் !

பர்க்கோ தேவஸ்ய தீமஹீ

தியோ யோநஃ ப்ரசோதயாத்!!

# 1. இறைவன்

பள்ளிகளில், கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் ஒருவனுக்கு பொய் சொல்ல, திருட, கொள்ளையடிக்க, கொலை செய்யக் கற்றுக் கொடுப்பதில்லை. இதெல்லாம் கூடாது என்றுதான் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனாலும் இந்தக் குற்றங்கள் செய்யும் எத்தனையோ பேர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள். அது ஏன்? அவர்களைப் படைக்கும் பொழுதே இறைவன் இதெல்லாம் செய் என்று சொல்லி அனுப்பிவிடுகிறார். அதனால் செய்கிறார்கள். நாம் சொல்லிக் கொடுக்காவிட்டாலும் இறைவன் சொல்லியதை அவர்கள் செய்வது ஞாயம்தானே. அப்படியென்றால் இவர்களைப் படைத்த இறைவன் தானே குற்றவாளி. சிந்தித்துப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது.

நாம் வாழ்வில் நேர்மையுடனும் நியாயத்துடனும் இருந்து தவறுகள் செய்யாது இருந்தால் நம் தேவைகளை இறைவன் பார்த்துக் கொள்கிறார்.

எல்லாவற்றிற்கும் அளவு என்று ஒன்று உண்டு. சொல்லப் போனால் இந்த பிரபஞ்சத்திற்குக் கூட இறைவன் ஏதாவது அளவு வைத்திருப்பார். ஆனால் மனிதனின் ஆசைக்கு மட்டும் அளவு என்பதே கிடையாது. நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவை என்று எதுவுமே மனிதனின் ஆசைக்கு முன்னால் தோற்றுப்போகும். மனிதனை இப்படிப் படைத்தது இறைவனின் குற்றமே. இது படைப்புக் குற்றம்.

இறைவன் நம்மைக் கூப்பிடும்பொழுதுதான் கூப்பிட்டுக் கொள்வார். அதுவரை, இங்கேயே சுற்றிக்கொண்டு இருடா என்று விட்டுவிடுவார்.

மிக அரிதாக நமது ஆசையும் இறைவனின் ஆணையும் ஒன்றாக இருக்கிறது. மற்ற நேரங்களில் எல்லாம் வெவ்வேறாகத்தான் இருக்கிறது. நம் கட்டுப்பாட்டில் எதுவுமே இல்லை. எல்லாம் இறைசக்தியின் ஆணைப்படி நடக்கிறது. இதை விரைவில் புரிந்து கொள்கிறவன் ஞானியாகிறான். மற்றவன் சாதாரண மனிதனாக இருக்கிறான்.

ஒரு விவரம் உனக்கும் இறைவனுக்கும் மட்டும் தெரிந்திருந்தால் தான் அது இரகசியம். இரண்டாவது நபர் யாருக்குத் தெரிய வந்தாலும் அது இரகசியமில்லை.

இறைவனுக்கு மனிதர்கள் பாவங்கள் செய்வது பிடிக்காது. எனவே நீ யாருக்கும் தெரியாமல் பாவங்கள் செய்தால் இறைவன் எப்படியாவது அதை அடுத்தவர்க்குத் தெரிய வைத்து வெளிக்கொணர்ந்து விடுவார்.

நாம் எதையும் முழுதாகப் புரிந்து கொள்ள முடியாது. எதையும் முழுதாகப் புரிந்து கொள்பவர் எல்லாவற்றையும் படைத்து இயக்கிக் கொண்டிருக்கும் இறைவன் ஒருவர் தான்.

வாழ்க்கையில் முன்னேற நீ எடுத்துக் கொள்ளும் நேர்மையான முயற்சிகளுக்கு இறைவன் உதவவில்லையென்றால் நீ எடுத்துக் கொள்ளும் நேர்மையற்ற முயற்சிகளுக்கு கண்டிப்பாக உதவமாட்டார்.

மனிதனின் மூளை ஓய்வுதான் எடுக்குமே தவிர இரவிலும் கூட உறங்காது. நாம் உறங்கிக் கொண்டிருக்கும் போது கூட அது கற்பனை செய்கிறது. அவ்வாறு நாம் உறங்கும் போது அது செய்யும் கற்பனைதான் கனவு. சில நேரங்களில் கனவின் மூலம் தெய்வம் நமக்கு எதையாவது சுட்டிக்காட்டவும் செய்யும். அதை மனிதன் அலட்சியப்படுத்தக்கூடாது.

சொர்க்கம் என்பது வேறொன்றுமில்லை. நம் ஆன்மாவும் இறை என்னும் பேரான்மாவும் இரண்டறக் கலப்பதுதான் சொர்க்கம். அதற்கு வழிவகுப்பதும் இந்த ஆன்மாவும் பேரான்மாவும் தான்.

முறியடிக்கப்பட முடியாதவர்களை எதிரிகள் சதியின் மூலம் தான் முறியடிப்பார்கள். எதிரிகளின் சதியையும் முறியடித்து வெற்றி கொள்பவன் மாவீரன். அவனுக்கு இறைவனின் அருள் இருக்கிறது என்று பொருள்.

நம் வாழ்நாளில் பல ஆண்டுகளுக்குப் பின்னால் நடக்கப் போகும் நிகழ்வுகளைக் கூட முன்கூட்டியே நம் வாக்குமூலமாவது அல்லது பிறர் வாக்குமூலமாவது இறைவன் நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

இறைவன் உதவி செய்யாதபொழுது கவலைப்படாது இருக்க மனிதன் தெரிந்திருக்க வேண்டும். பெரும்பாலும் மனிதர்கள் தாம் மட்டும்தான் வாழ்க்கையில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம், பிறர் எல்லோரும் நன்றாக இருப்பார்கள் என்றுதான் நினைக்கின்றனர். அது மாயை, உண்மையில்லை. எல்லோருமே வாழ்க்கையில் ஏதாவது ஒரு வகையில் சிரமப்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். அதுதான் உண்மை.

மன விரக்தியில் தெய்வக் குற்றமே செய்தாலும் கூட தெய்வம் மன்னித்து விடுகிறது.

பெரும்பாலும் துக்க உணர்வுடன் இருக்கும்பொழுதுதான் இறைவன் இந்த உலகில் மறைந்து கிடக்கும் மனிதர்கள் தொடர்பான உண்மைகளை புரிய வைக்கிறார்.

நமக்கு நல்லது ஒன்று நடக்க வேண்டும் என்று தெய்வத்திடம் என்னதான் மன்றாடிக் கேட்டுக் கொண்டாலும் அது நடக்க வேண்டிய காலம் வரும் வரை தெய்வம் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. சில நேரங்களில் இறைவன் நம்மை கேலி செய்வார். அதை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

ஞாயமாக ஆசைப்படுகிறவனை இறைவன் தண்டிப்பதில்லை. அதற்கு அவன் தகுதியானவன் என்றால் அவனது ஆசையை இறைவன் நிறைவேற்றுகிறார். ஆனால் பேராசைப்பட்டு, தான் ஆசைப்பட்டதை அடைய தர்ம வழியிலிருந்தும் விலகிச் செல்பவனை இறைவன் தண்டிக்கிறார். நமது ஞாயமான ஆசைகளுக்கு இன்றில்லாவிட்டாலும் என்றாவது இறைவன் உதவி செய்து அதை நிறைவேற்றுவார்.

கண்டிப்பாக இறைவனிடத்தில் நமக்கு மூன்று உணர்வுகள் இருக்க வேண்டும். அவை பக்தி, நம்பிக்கை மற்றும் அச்சம். இந்த மூன்றில் எந்த ஒன்று இல்லாது போனாலும் இறைவனின் அருள் நமக்குக் கிடைக்காது.

இறைவனுக்கு வேண்டியவன், வேண்டாதவன் என்ற பாகுபாடு எதுவும் கிடையாது. அவருக்கு எல்லோரும் ஒன்றே. அதனால்

இறைவன் நமக்கு ஒரு நல்ல பலனைக் கொடுக்கும் பொழுது தெரிந்தும் அதை ஏற்றுக்கொள்ளாது உதாசீனப்படுத்தினால் பிறகு அதே நல்ல பலனை இறைவன் நமக்குத் திரும்பவும் கொடுக்கமாட்டார்.

என்றோ எழுதி வைக்கப்பட்ட இறைவனின் தீர்ப்புப்படி நமக்கு எல்லாம் நடக்கிறது. அவரது தீர்ப்பு மாற்றி எழுதப்படத் தக்கது இல்லை. தீர்ப்பு என்ன என்பது நமக்குத் தெரியாது. அது இறை இரகசியம். பொறுக்க முடியாத சிரம காலங்களில் அவரிடம் முறையிட்டால் நமக்கு எழுதி வைக்கப்பட்ட தீர்ப்பு என்ன என்பதை அவர் பரிசீலிக்கிறார். நமக்கு நிவாரணம் கொடுக்க ஏதாவது அந்தத் தீர்ப்புப்படி வழியிருந்தால் நிவாரணம் கொடுக்கிறார்.

நீ இப்படித்தான் வாழவேண்டும் என்ற விதி அமைப்பு இருந்தால் அதற்குண்டான அறிகுறியை ஆண்டவன் முன்கூட்டியே உனக்கு உணர்த்துகிறார். அதற்குண்டான அதை செயல்படுத்தும் மனிதர்களையும் உன்னிடத்தில் அனுப்பி வைக்கிறார்.

இந்தப் பூமிக்கோளம் முக்கால்பங்கு நீராலும் கால் பங்கு நிலத்தாலும் ஆனது என்று சொல்லப்படுகிறது. இந்த முக்கால் பங்கு நீரால் இந்தக் கால்பங்கு நிலத்தை கரைத்து ஏன் தன்னுள் அடக்கிக் கொள்ள முடியவில்லை? காரணம் எவ்வளவு நீரைக் கொட்டினாலும் அந்த நீரையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொள்ளும் தன்மையை இந்த நிலம் பெற்றுள்ளது. அதனால் தான் இந்த முக்கால்பங்கு நீரால் இந்தக் கால்பங்கு நிலத்தை கரைத்து அதை தன்னுள் அடக்கிக் கொள்ள முடியவில்லை. இது இறைவிஞ்ஞானியின் ஏற்பாடு.

தனக்கு விருப்பம் இல்லை என்றாலும் எதிலும் விதிப்படி தான் ஒருவனால் நடந்து கொள்ள முடியும். மதி அதற்கு ஒத்துழைக்கும். ஆன்மாவின் விருப்பம் எதுவோ அது செயல்படும். விதி அதற்கு ஒத்துழைக்கும். ஆன்மாவின் விருப்பம் என்பது இறைவனின் விருப்பம்.

இறைவன் நமக்குக் கொடுக்க வேண்டியதை தவறாது கொடுக்கிறார். சாமி இல்லை, பூதம் இல்லை என்று சொல்கிறவர்களுக்குக் கூட அவர் கொடுப்பதை நிறுத்துவதில்லை. ஆனால் நான் இருக்கிறேனப்பா என்பதை மட்டும் அவர்களுக்கு அவர் உணர்த்தாமல் விடுவதில்லை.

உனக்குத் திருட்டுப்புத்தி இல்லையென்றால் அதற்காக தினம் தினம் நீ இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிரு.

யார், யார் எங்கெங்கு, எப்படி எப்படி, எவ்வளவு காலம் வாழ வேண்டுமோ, அவரவர் அங்கங்கு, அப்படி அப்படி, அவ்வளவு காலம் வாழ்வர். இதில் எதுவும் நம் கையில் இல்லை. எல்லாம் இறைவன் செயல்.

நான்கு வயதில் புரிய வேண்டிய ஒரு உண்மை சிலருக்கு நாற்பது வயதில் புரியும். ஒன்றை புரிந்து கொள்ள நாற்பது வயதாவது ஆகும் என்ற நிலையிலுள்ள சில உண்மைகளை சிலர் நான்கு வயதிலேயே புரிந்து கொள்வர். ஒன்றை நான்கு வயதில் புரிந்து கொள்வதும் நாற்பது வயதில் புரிந்துகொள்வதும் அவரவர் மண்டைக்குள் உள்ள மூளையைப் பொறுத்தது அல்ல. நீ ஒன்றை எப்பொழுது புரிந்து கொள்ள வேண்டுமோ அப்பொழுதுதான் இறைவன் அதை புரிந்து கொள்ள வைக்கிறார். இதுதான் உண்மை. நீ புரிந்து

கொள்ளவே கூடாது என்றால் உன்னை புரிந்து கொள்ளச் செய்யாமலேயே இவ்வுலகை விட்டு அனுப்பி விடுகிறார்.

இறைவனை அவரது இல்லம் சென்று நீ காண வேண்டுமென்று ஆசைப்பட்டாலும் அவரது இல்லம் நீ இருக்கும் இடத்திற்கு அருகில் இருந்தாலும் அவரைக் காண அவர் எப்பொழுது அனுமதிக்கிறாரோ அப்பொழுதுதான் அவரை உன்னால் காண முடியும். அதுவரை முடியாது. இதுதான் இறை சக்தி.

எந்நேரமும் இறைவனை நினைத்துக் கொண்டிருந்தால் மனிதனுக்கு எந்த ஆச்சாரமும் தேவையில்லை.

எதற்காவது எப்பொழுதாவது மனிதர்கள் நம்மை கேலி செய்தால் ஏதாவது ஒரு காரணத்திற்காக அமைதியாக இருந்து விடுகிறோம். இறைவனே கேலி செய்யும் பொழுது மிகவும் அமைதியாக இருந்துவிடவேண்டும். இறைவன் கேலி செய்வது விதியின் கொக்கரிப்பு.

நம் வாழ்க்கையில் பெரும்பாலும் ஒரு முறைதான் யோக சந்தர்ப்பத்தை இறைவன் கொடுக்கிறார். ஒரு சிலருக்கு அரிதாக மறுமுறை கொடுக்கிறார். மிகவும் பாக்கியசாலிகளுக்கு மட்டுமே தொடர்ந்து அதைக் கொடுக்கிறார். அவர் கொடுக்கும் நல்ல யோக சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒருவன் வாழ்க்கையில் முன்னேறி இருக்கிறான் என்றால் அதற்கு அவனது புத்திசாலித்தனம் மட்டும் காரணமில்லை. அந்த முன்னேற்றத்தை அவன் அடைய இறைவன் அவனுக்கு பல வழிகளிலும் உதவியதும் காரணம்.

ஒருவன் பிறர் யாராவது ஏதாவது ஒருவகையில் துன்பம் அடைவதைக் கண்டு உண்மையிலேயே இன்பம் கொண்டால், பின்னாளில் அதே போன்ற துன்பத்தை அவனுக்கு இறைவன் கொடுக்கிறார்.

நாமோ நம் முன்னோர்களோ எப்பொழுதாவது எந்த வகையிலாவது யாருக்காவது கடன்பட்டிருந்தால் அதை நம் மூலமோ நமது வாரிசு மூலமோ, அவருக்கோ அவர் வாரிசுக்கோ இப்பிறவியிலோ அல்லது இனிவரும் பிறவியிலோ எப்படியாவது இறைவன் திரும்பக் கொடுக்க வைத்து விடுகிறார். இது உண்மை.

எல்லா வியாபரத்தையும் போல் திருமணமும் ஒரு வியாபாரம். அதை ஏற்பாடு செய்வது இறைவன்.

விதி கெட்டால் மதி கெடும். மதி கெட்டால் விதி கெடும். ஆனால் விதியும் மதியும் ஒன்றே. காரணம் அது வல்லான் வகுத்த சட்டம். வல்லான் என்பவன் இறைவன்.

வாழ்க்கையை நிர்ணயிப்பது விதியும் மதியும். அதாவது விதி பாதி மதி பாதி. விதி ஆதரவாக இருக்கும் பொழுது மதி சரியாக வேலை செய்தால் நற்பலன் கூடும். இல்லையேல் நற்பலன் குறையும். விதி ஆதரவாக இல்லாத போது மதி சரியாக வேலைசெய்தால் கெடுபலன் குறையும். அப்படி இல்லையேல் கெடுபலன் கூடும். எப்படியிருந்தாலும் இறைவனிடம் சரணடைந்தால் நற்பலன் விளையும், நமக்குத் தகுதியிருந்தால். முடிவு எதுவாக இருந்தாலும் மனிதன் தான் எடுக்கிறான். அதற்குண்டான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பது இறைவன்.

உறக்கத்தில் நாம் காணும் கனவுகளுக்கும் நம் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது. அது என்ன என்றுதான் நமக்குப் புரிவதில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அவை எல்லாமே இறைவனின் ஆணைப்படியும் விருப்பப்படியும்தான் நடக்கிறது. எல்லாம் நல்லதாக இருந்தால் அதுவே போதுமானது. இறைவன் சித்தம்.

யாருக்கு அறிவை அதிகம் கொடுக்கிறாரோ அவர்க்கு இறைவன் அதிர்ஷ்டத்தை அதிகம் கொடுப்பது இல்லை. அறிவை குறைத்துக் கொடுக்கப்பட்டவர்க்கு இறைவன் அதிர்ஷ்டத்தை அதிகம் கொடுக்கிறார். அவன் அறிவைக் கொண்டு பிழைத்துக் கொள்வான். இவன் அதிர்ஷ்டத்தைக் கொண்டு பிழைத்துக் கொள்வான் என்பது இறைவனின் கணக்கு. இறைவனால் இரண்டும் குறைவில்லாது கொடுக்கப் பட்டவர்கள் மகா பாக்கியசாலிகள். இங்கே அறிவு என்பது முறையான கல்வி அறிவைக் குறிக்கும்.

நீடித்த ஆயுளுள்ள ஒரு குடும்பஸ்தனுக்கு இறைவன் அவனது வாழ்நாளில் எல்லா விதமான உணர்வுகளையும் உணர்த்துகிறார். இறைவனை பாசத்தோடு கோபித்துக் கொள்ளலாம். அதில் தவறில்லை. அவர் நம்மை கோபித்துக் கொள்ள மாட்டார். மாறாக புன்முறுவல் பூப்பார். நமக்கு விடுதலையும் கொடுப்பார். நீ யாருக்கும் கெடுதல் செய்யாமலும் யார் மீதும் பொறாமைப் படாமலும் இருந்தாலே போதுமானது. இறைவன் உன்மீது பாசமாக இருப்பார்.

இறைவன் நமது நேர்மையான செயல்களுக்குத் துணை நிற்கிறார். சில நேரங்களில் அவரே அதை முறியடிக்கிறார். சில நேரங்களில் மட்டுமல்லாது பல நேரங்களிலும் அப்படிச் செய்கிறார். சிலருக்கு அவரது செயல்கள் நேர்மையானதாக இருந்தாலும் கூட அதைத் தொடர்ந்து முறியடிக்கிறார். அதுதான் நம் பூர்வகர்மபலன். அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

நாம் எவ்வளவு யோக்கியமாக வாழ்ந்தாலும் நன்றாக இருந்தால் நாம் அயோக்கியத்தனம் செய்து சம்பாதித்து நன்றாக இருக்கிறோம் என்றுதான் இந்த உலகம் எண்ணிக் கொண்டிருக்கும். நம் மனத்தில் வஞ்சகம் இல்லையென்றால் இறைவன் நம்மை வஞ்சிக்க மாட்டார். மனிதர்களை மனிதன் யாரும் திருத்த முடியாது. இறைவனும் திருத்த மாட்டார். அவன் அப்படித்தான் இருக்க வேண்டுமென்பது அவரது கட்டளை. அதனால் அவர் திருத்த மாட்டார்.

நம் நிலைமை எப்படி இருந்தாலும் ஒருவருக்கு நன்றி கெட்டதனமாக மட்டும் இருக்கக்கூடாது. இறைவனிடம் அதற்கு மன்னிப்பு இல்லை.

விதியை மதியால் வெல்லலாம். ஆனால் விதியை மதி வெல்ல வேண்டும் என்ற விதியமைப்பு இருந்தால்தான் விதியை மதி வெல்ல முடியும். இல்லையேல் விதியை வெல்ல மதியால் முடியாது. காரணம் விதியை அமைப்பது இறைவன்.

தொடர்ந்து அக்கிரமம் செய்கிறவனை இறைவன் தண்டிக்கிறார். எப்படியெனில் முதலில் அவனை எளிதாகத் தண்டிக்கிறார்.

அவன் திருந்தாது போனால் தண்டனையை கடுமையாக்குகிறார். அப்பொழுதும் திருந்தாது போனால் அவன் பெண்டு பிள்ளைகள் மீது கை வைத்து அவனை செயலிழக்க வைக்கிறார். அப்பொழுதுதான் அவன் தன் தவறை உணர்கிறான்.

உன்னுடன் கபடமாக உறவாடுபவர்களை நீ உணராவிட்டாலும் என்றாவது ஒருநாள் இறைவன் காட்டிக் கொடுப்பார்.

நம் வாழ்க்கையில் பலர் பல சந்தர்ப்பங்களில் பல வழிகளில் எதற்காவது குறுக்கிடுகிறார்கள். அது இறைவனின் செயல். அவர்கள் எல்லாருமே கடைசிவரை நம்முடன் வருவது இல்லை. ஒருசிலர் மட்டுமே இறுதிவரை வருகிறார்கள். அவர்கள் நம்முடன் கடைசிவரை வர தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்.

சில நேரங்களில் நாம் நம் தலைவிதியை நொந்து கொள்கிறதுபோல் இருக்கும். இறைவன் அப்படி சோதிப்பார்.

மனிதனை மனிதன் ஏமாற்றுவது போல் இறைவனும் மனிதனை ஏமாற்றுவார். நீ யாரையும் உன் வாழ்க்கையில் ஏமாற்றவில்லை என்றால் இறைவன் உன்னை ஏமாற்ற மாட்டார்.

இறைவன் என்றாவது ஒருநாள் அடே கிருக்கன்களா நான் ஒருவன்தானடா உங்களுக்கு எல்லாம், வேறு யாரும் இல்லையடா என்ற உண்மையை மனிதர்களுக்கு உணர்த்துகிறார். அதனால் எந்நேரமும் இறைவனை நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்வில் உள்ள கோணல்கள் எல்லாம் தானாக நேராகி விடும்.

நமது சில ஆசைகளை இறைவன் பூர்த்தி செய்கிறார். நனவில் அல்லது கனவில் அல்லது கற்பனையில். இது உண்மை.

எதற்கும் சித்தமாக இருப்பவனை இறைவனைத் தவிர வேறு எவராலும் எதுவும் செய்ய முடியாது.

இறைவனிடம் போய் பலசரக்கு கடைப் பட்டியல் போல் கண்டதெல்லாம் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டால் அவர் ஏதாவது ஒருசிலவற்றைத்தான் கொடுப்பார். முக்கியமானதை விட்டுவிடலாம், இவன் என்ன என்னென்னவோ கேட்கிறான் என்று. எது கண்டிப்பாக வேண்டுமோ அதை மட்டும் கேட்க வேண்டும். உனக்கு தகுதியிருந்தால் நிச்சயம் அதைக் கொடுப்பார். தன்னை நம்பாதவர்களை இறைவன் நிறைய ஏமாற்றி பின் நம்ப வைக்கிறார். நாம் என்ன கேட்டாலும் இறைவன் நமக்கு கொடுக்க நினைத்ததைத்தான் கொடுக்கிறார்.

விஞ்ஞானிகளை இந்தப் பிரபஞ்ச இரகசியங்களை ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்க வைப்பதே இறைவன் தான். கண்ணுக்குத் தெரியாத ஆசானாக இருந்து இறைவன் அவைகளை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். எல்லாத் தேர்வுகளிலும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்குபவர் இறைவன் ஒருவனே. காரணம் அவருக்குத் தான் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தெரியும்.

மனிதன் பேயாக மாறலாம். இறைவனிடம் வரம் கேட்டும் அப்படி மாறலாம். வரம் கேட்காமலும் மாறலாம். ஆனால்

பேய் இறைவனிடம் வரம் கேட்டுத்தான் மனிதனாக மாற முடியும். நாம் யாரைப் புரிந்து கொண்டாலும், புரிந்து கொள்ளாவிட்டாலும் சிறிதளவாவது இறைவனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

விதிபாட்டுக்கு அதன் வேலையைச் செய்துகொண்டு போகும். உன்னைப் பற்றித் துளிகூடக் கவலைப்படாது. நீதான் இறைவனிடம் சரணாகதி அடைந்து அதன் தாக்கத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும். இறைவனிடம் சரணாகதி அடைந்துவிட்டால் நாம் காப்பாற்றப்படுகிறோம்.

இறைவன் குழந்தை பாக்கியத்தை கொடுக்கும் பொழுது மகிழ்வுடன் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது வேண்டாம் என்று கருவைக் கலைக்கத் துணியும் பெண்களுக்குப் பிறகு எப்போதுமே அந்த பாக்கியத்தை இறைவன் கொடுக்காது விட்டுவிடுவதும் உண்டு.

சில நேரங்களில் நாமே ஏன் கடவுளாக இருந்திருக்கக் கூடாது. யாரோ கடவுளாக இருந்து கொண்டு இல்லாத அக்கிரமங்கள் எல்லாம் செய்கிறாரே என்று கூட நமக்குத் தோன்றும். இது போன்ற எண்ணங்களை நம் மனத்தில் உண்டு பண்ணுகிறவரும் அதே கடவுள்தான்.

இறைவன் நமக்கு ஒன்றை உணர்த்த வேண்டுமென்றால் நம் மனத்திற்கு மட்டும் அல்லாது நம் நலனில் உண்மையான அக்கறை கொண்ட வேறு சிலர் மனத்திற்கும் உணர்த்துகிறார். இறைவன் விருப்பப்படி தான் அத்தனையும் நடக்கும். ஒன்று

கூட மாறி நடக்காது. இறைவன் தான் ஆசைப்பட்டதைச் செய்கிறார். அவைகளை நாம் ஏற்றுக் கொள்ள வைக்கிறார். இடர்கள் எப்பொழுது நம்மைவிட்டு விலக வேண்டுமோ அப்பொழுதுதான் அதற்குண்டான வழிகளையும் இறைவன் நமக்குப் புலப்பட வைக்கிறார். நாம் இழுக்கின்ற இழுவைக்கெல்லாம் மனிதன் வேண்டுமானால் வருவான். இறைவன் வரமாட்டார். எதுவாக இருந்தாலும் இறைவன் முடிவு செய்வதுதான் நமக்குக் கிடைக்கும்.

உனக்குப் புத்தி கொடுத்தவர் இறைவன். உனது புத்திசாலித் தனத்தினால் நீ இறைவனையோ, இறைவனின் தூதனையோ ஏமாற்றமுடியாது.

இறைவன் பலவிதமான மனிதர்களைப் படைக்கிறார். அவைகளில் கீழ்க்கண்ட வகைகள் மிக முக்கியமானது. ஒன்று அறிவும், யோகமும் நிறைந்த மனிதர்கள். இரண்டு அறிவு நிறைவாகவும் யோகம் குறைவாகவும் உள்ள மனிதர்கள். மூன்று யோகம் நிறைவாகவும் அறிவு குறைவாகவும் உள்ள மனிதர்கள், நான்கு அறிவு, யோகம் இரண்டும் குறைவாக உள்ள மனிதர்கள். நாம் எப்படிப்பட்ட மனிதர்களாய் பிறந்தாலும் இந்த நான்காவது வகை மனிதர்களாக மட்டும் பிறந்து விடக்கூடாது.

ஒரு பிறவியிலாவது மகிழ்வுடன் வாழ வைத்துப் பிறகு என்னை உன்னுடன் அழைத்துக் கொள் என்று இறைவனைக் கேட்கும் உரிமை நமக்கு இருக்கிறது. இறைவனும் அதற்கு இசைவார்.

இறைவனை நீ வணங்கினாலும் வணங்காவிட்டாலும் நீ எப்படி வாழவேண்டுமென்று அவர் விரும்பினாரோ அப்படி வாழ வைக்கிறார்.

புளி ஆயிரம் பொந்து ஆயிரம் என்பது வழக்கு. புளிய மரத்தின் ஆயுளைக் குறிக்கும் அடைமொழி. ஒரு நூலில் புளியமரத்தின் ஆயுள் இரண்டாயிரம் ஆண்டுகள் என்று சொல்லப்பட்டுள்ளது. புளிய மரத்திற்கு அவ்வளவு ஆயுளைக் கொடுத்த இறைவன் நல்லவேளை மனிதனுக்குக் கொடுக்கவில்லை. அதற்காகவே நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

தெய்வ இரகசியங்கள் திடீரென்று நம் மனத்திற்கு எப்பொழுதாவது புலப்படும். அதை அப்படி நம் மனதிற்கு உணரச் செய்வதே இறைவன்தான்.

இறைவனிடம் நாம் கேட்டது ஒன்று கிடைத்தால் அந்த இறைவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அதையும் நேரில் சென்று சொல்ல வேண்டும். முடியாது போனால் மானசீகமாகவாவது சொல்ல வேண்டும். இறைவன் மகிழ்வார். நம்மிடம் மேலும் அன்பு வைப்பார்.

இறைவனிடம் நாம் கேட்டது ஒருவேளை நமக்குக் கிடைக்காது போனால் அவரை கோபித்துக் கொள்ளக்கூடாது. தொடர்ந்து அவரிடம் பக்தியுடன் தான் இருக்க வேண்டும். ஒரு வேளை நமக்கு இன்னொரு பிறவியிருந்தால் அப்பிறவில் நாம் இப்பிறவியில் விரும்பியதைக் கொடுத்து அதை நாம் பரிபூரணமாக அனுபவிக்க வைக்கிறார்.

சில நேரங்களில் இறைவன் இருக்குமிடம் சென்று அவரைப் பார்த்து வந்த பிறகும் கூட நம் மனம் சாந்தி அடையாது. அதுவும் இறைவனின் செயல்தான்.

மனிதன் செய்யும் செயல்கள் எல்லாமே இறைவன் அவன் மனத்தினுள் புகுந்து செய்யச் சொல்லும் செயல்கள் தான்.

ஒரு மனிதனை இறைவன் ஆசையில்லாதவனாகப் படைத்திருந்தால் அவன் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இறைவன் செய்யும் அற்புதங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அளவு என்பதே கிடையாது.

மனமும் நம் ஆன்மாவும் ஒன்று கலக்கும்பொழுது இறைவன் நம் கூடவே இருக்கிறான்.

தெய்வம் என்ன நினைத்தாலும் அது நம் வாழ்க்கையில் நடந்தே தீரும். அதை ஏற்றுக்கொள்ள நாம் எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும். நம் அறிவிற்கு அங்கு சிறிது கூட இடமில்லை.

நம்முடன் அண்ணன், தம்பி, அக்காள், தங்கை என்று யாராவது பிறக்கிறார்கள். அதுபோல் நம் ஆன்மாவிற்கும் உடன் பிறப்புக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேறு யாரும் இல்லை. நம் மனம், மதி, உயிர், இந்த உடல், இவைகள் தான். ஆனால் நமது உடன்பிறப்புக்களான நம் அண்ணன், தம்பி, அக்காள், தங்கை எல்லாரும் ஒரே நேரத்தில் இந்த உலகை விட்டுச் செல்வதில்லை. நமது ஆன்மா மட்டும் தனது உடன் பிறப்புக்களான நம் மனம், மதி, உயிர், இந்த உடல்

எல்லாவற்றுடனும் ஒரே நேரத்தில் இந்த உலகை விட்டுச் சென்று விடுகிறது. இதுதான் இறைவனின் படைப்பு இரகசியம். இறைவன் இதற்கு ஒரு பதில் வைத்திருக்கிறார். அது வேறொன்றுமில்லை. நாம் நம் உடன்பிறப்புக்களுடன் ஒரே நேரத்தில் இந்த உலகிற்கு வருவதில்லை. வெவ்வேறு காலகட்டத்தில் வருகிறோம். அதனால் வெவ்வேறு காலகட்டத்தில் இவ்வுலகை விட்டுச் செல்கிறோம். ஆனால் நம் ஆன்மாவோ, தன் உடன்பிறப்புக்களுடன் ஒரே நேரத்தில் இவ்வுலகிற்கு வருகிறது, ஒரே நேரத்தில் இவ்வுலகைவிட்டு சென்று விடுகிறது.

கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்றில்லை. அவரை எந்நேரமும் நினைத்துக் கொண்டிருந்தால் அதுவே போதுமானது.

இறைவன் மனிதனுக்கு மூன்று மனம் படைத்திருக்க வேண்டும். கடந்த கால கெட்ட நிகழ்வுகளை மறந்து அமைதியாக வாழ ஒரு மனமும், கடந்த கால நல்ல நிகழ்வுகளை நினைத்து மகிழ்ந்து வாழ ஒரு மனமும், எதிர்காலத்தில் நல்லவற்றை கற்பனை செய்து ஆக்கபூர்வமாக வாழ ஒரு மனமும், ஆக மூன்று மனம் படைத்திருக்க வேண்டும். இறைவன் ஒரே ஒரு மனத்தைப் படைத்து அந்த ஒரு மனத்திற்குள்ளேயே எல்லாவற்றையும் புதைத்து விட்டதுதான் மனம் தொடர்பான நோய்களுக்கும் இன்னல்களுக்கும் காரணமாகப் போய்விட்டது.

நாம் விரும்புவது எதுவாக இருந்தாலும் நம் ஆழ்மனத்தின் மூலம் இறைவனிடம் தெரிவித்துவிட வேண்டும். நம் வெளிமனம் எங்கெல்லாமோ சுற்றித்திரியும். ஆனால் நம் ஆழ்மனம் நம்

விருப்பத்தைத் தொடர்ந்து இறைவனிடம் தெரிவித்துக் கொண்டே இருக்கும். தகுந்த காலம் வரும்பொழுது இறைவன் அதைச் செயல்படுத்துவார். இது சத்தியம். நமக்கு மட்டும் தகுதி இருக்க வேண்டும்.

மணிமேகலையின் அட்சயபாத்திரத்தில் அள்ள அள்ள உணவு வந்து கொண்டே இருக்குமாம். அதுபோல் நம் வாழ்நாள் முழுதும் தோண்டினாலும் இறை இரகசியங்கள் எங்கெங்கெல்லாமோ இருந்து வந்து கொண்டு இருக்கும். இறைவன் அவ்வளவு இரகசியங்களை எங்கெங்கெல்லாமோ புதைத்து வைத்திருக்கிறான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனைத் தவிர வேறு யாரும் துணையில்லை. மற்ற துணையெல்லாம் தற்காலிகமானதே.

நம் அருகிலேயே உள்ள சில உண்மைகளை கூட இறைவன் பலகாலம் கழித்து நமக்குப் புரிய வைக்கிறார்.

எவனொருவன் தன் வாழ்நாளில் அடுத்துவருக்குத் தீங்கு செய்யாது, தீங்கு செய்ய எண்ணாது இருக்கிறானோ அவனுக்கு இறைவன் அவனது பிற குற்றங்களை மன்னித்து சொர்க்கத்தைக் கொடுக்கிறார்.

இறைவன் நம் மனத்தில் எவ்வப்பொழுது என்னென்ன உணர்வுகளை உண்டு பண்ணுவார் என்பதை மட்டும் சொல்லவே முடியாது. நம் அறிவாலும் அதைக் கட்டுப்படுத்த முடியாது.

இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனை உண்மைகளை இறைவன் புதைத்து வைத்திருக்கிறார் என்பது மட்டும்

யாருக்குமே தெரியாது. இறைவன் ஒரு இரகசியச்சுரங்கம். இறைவனின் கணக்கு மட்டும் யாருக்கும் எப்பொழுதுமே புரியாது. அவர் கணக்கு எப்பொழுதுமே மர்மமானது. இறைவனின் லீலைகளும் அப்படித்தான். நாம் பாவம் செய்கிறோமோ புண்ணியம் செய்கிறோமோ, அப்பழுக்கில்லாத இறைபக்தியுடன் இருந்தால், இறைவன் நமக்கு மோட்சம் கொடுக்கிறார். காரணம், நாம் பாவம் செய்வதும், புண்ணியம் செய்வதும் அவரின் தூண்டுதலின் பேரில்தான். நமது வாழ்க்கை நிகழ்வுகள் எல்லாமே இறைவனால் முன் கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், நமக்குத்தான் என்னவென்று அது நடக்கும் வரை எதுவுமே தெரிய வருவதில்லை. நம் வாழ்க்கையில் எல்லாமே இறைவனின் சித்தப்படி நடக்கிறது. இது உண்மை.

நம் கதையை முடிக்க வேண்டுமென்றால் இறைவன் எப்படியாவது முடித்து விடுவார். நாம் தப்பிக்கவே முடியாது. அது ஒன்றுக்காவது நாம் பழி பாவத்திற்கு அஞ்சி நடக்க வேண்டும்.

நமது குடும்பக் கடமைகளை நாம் முடிப்பதற்கு முன்பே நம்மை இறைவன் அழைத்துக் கொண்டால், அக்கடமைகளை முடிக்க அவர் ஏதாவது மாற்று ஏற்பாடு வைத்திருக்கிறார்.

நம் மனம் என்னனென்னவெல்லாம் சொல்கிறதோ, அதெல்லாம் ஆன்மிகம். இது உண்மை. நம் மனம் சொல்வது எல்லாமே இறைவன் சொல்வதுதான். இதில் சந்தேகம் என்பதே கிடையாது. எனவே நம் மனம் என்னென்னவெல்லாம் சொல்கிறதோ அதெல்லாம் நாம் செய்யலாம். அதில் தவறில்லை. பிறருக்கு தொந்தரவுகள் இருக்கக்கூடாது. பாவச்

செயலோ புண்ணியச் செயலோ அச்செயல் நடக்க வேண்டுமென்றால் அதற்கு இறைவன் உதவி செய்கிறார்.

இறைவனடிக்கும் கூத்திற்கும் கும்மாளத்திற்கும் கணக்கு வழக்கு என்பதே கிடையாது. யார் வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம், இறைவனைக் கேள்வி கேட்க முடியாது.

இறைவன் ஆண்களுக்கு படைத்திருக்கும் குணங்கள் எல்லாமே பெண்களுக்கும் படைத்திருக்கிறான். எந்த எண்ணமாக இருந்தாலும் அந்த எண்ணத்தை நம் மனத்தில் உண்டு பண்ணுவது இறைவன் தான். அறிவிற்கு அங்கு இடமில்லை.

வாழ்க்கை எப்படித் திசைமாறிப் போனாலும் அதை ஏற்றுக் கொள்ள மட்டும் நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். காரணம் அது இறைவனின் விருப்பம். முட்டாளை அறிவாளியாக்குவதும் அறிவாளியை முட்டாள் ஆக்குவதும் இறைவனின் சித்தம். அவர் விருப்பப்படி எது வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கும்.

இந்த உலகம் உருண்டை. கோள்கள் அனைத்துமே உருண்டை. இதில் இறைவன் புதைத்து வைத்திருக்கும் இரகசியம் என்ன தெரியுமா? நாம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப வருவோம் என்பதுதான். இது சத்தியம்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். முடியாவிட்டால் எப்படி வேண்டுமானாலும் வாழலாம். அது இறைவன் விதித்த விதி.

இறைவன் எப்பொழுது இரண்டு பேரை பேச அனுமதிப்பாரோ அப்பொழுதுதான் நாம் பேச முடியம். அதற்குமுன் நாம் என்னதான் முயன்றாலும் முடியாது. இதுவும் இறைவன் விதித்த விதி தான். இது சத்தியம்.

மனிதன் நல்லவனாக வாழ வேண்டும் என்று விரும்பும் இறைவன், அவன் தாறுமாறாக நடந்து கொள்ளும் சூழ்நிலையை ஏன் உருவாக்க வேண்டும். இது இறைவன் செய்யும் அக்கிரமம் தானே. இறைவனே அக்கிரமம் செய்யும் பொழுது நாம் ஏன் செய்யக்கூடாது? இதற்குச் சரியான பதில் என்னவென்றால், இறைவன் உருவாக்கும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை இறைவன் வேடிக்கைப் பார்க்கிறார். அவர் உருவாக்கும் எந்தச் சூழலிலும் ஒருவன் நேர்மையாக நடந்து கொண்டால் அவனுக்குப் பிறவிப் பிணியிலிருந்து விடுதலை கொடுக்கிறார். மற்றவனுக்கு மீண்டும் பிறவியைக் கொடுத்து அதற்குண்டான தண்டனையையும் கொடுக்கிறார். இது தான் உண்மை.

நாம் என்ன திட்டம் தீட்டியிருந்தாலும் அத்திட்டத்திற்கு இறைவனின் ஆதரவு இருந்தால் தான் அதைச் செயல்படுத்த முடியும். இல்லையென்றால் முடியாது. இது சத்தியம்.

இறைவன் ஏற்படுத்திக் கொடுக்கும் சூழலை ஒருவன் ஏற்றுக் கொண்டால் அவனைக் காப்பாற்றும் பொறுப்பும் இறைவனைச் சேர்ந்ததே. இது சத்தியம். இதற்கு இறைவனே மறுப்புச் சொல்ல முடியாது.

இறைவனுடன் நாம் போராடக்கூடாது. மீறி செய்தால் நாம் தோற்று விடுவோம். இறைவன் யாருக்குச் சொந்தம் என்ற கேள்வியைக் கேட்டீர்கள் என்றால், அதற்குச் சரியான பதில், இறைவனே கதி என்று கிடப்பவர்களுக்குத்தான் இறைவன் மிகமிகச் சொந்தம், வேறுயாருக்கும் அவர் வெறும் சொந்தமே.

நாம் நினைப்பது எல்லாம் நடந்து கொண்டிருந்தால் இறைவனும் அதே கணக்கைப் போட்டிருக்கிறார் என்று பொருள்.

இறைவன் ஏன் உலகத்தை வட்ட வடிவமாகப் படைக்காமல் கோழி முட்டை வடிவத்தில் படைத்திருக்கிறார் தெரியுமா? அவரால் படைக்கப்பட்ட மனிதன், ஒழுங்கு முறையாக நடந்து கொள்ளாமல் கோணலும்மானலுமாக நடந்து கொள்வான் என்பதால் அவர் உலகத்தையே கோணலும் மாணலுமாகப் படைத்திருக்கிறார்.

வாழ்க்கையின் நிகழ்வுகள் எப்படி எப்படியெல்லாமோ இருக்கும். நம்மை எங்கெங்கோ கொண்டு செல்லும். எப்பொழுது என்ன நடக்கும், நம்மை எங்கு கொண்டு செல்லும் என்பதை மட்டும் யாராலும் உறுதியாகச் சொல்லமுடியாது. ஒன்று மட்டும் நிச்சயம். இவை எல்லாமே இறைவனின் கட்டளைப்படி நடப்பவைதான். இவையெல்லாம் இறைவனின் கட்டளை என்கிறபொழுது இந்த நிகழ்வுகளைப் பற்றி நாம் சிறிதும் கவலைகொள்ளத் தேவையில்லை. இறைவனின் விருப்பம் எதுவாக இருந்தாலும் என்றைக்காவது ஒருநாள் அது நடந்தே தீரும். இது சத்தியம். நமக்கு ஒன்று கிடைக்கிறது என்றால் அது வேறுயாரும் கொடுத்தது இல்லை. இறைவன் கொடுத்தது. அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அறிவாளி அறிவாளிதான். முட்டாள் முட்டாள்தான். எப்பொழுதாவது அரிதாக அறிவாளியை முட்டாளாகவும், முட்டாளை அறிவாளியாகவும் இறைவன் செயல்படச் செய்கிறார்.

இறைவனின் அன்பைப் பெற இறையுணர்வு, தார்மீக உணர்வு, சுய தர்ம உணர்வு, இவை மூன்றும் இருந்தாலே போதும் வேறு எந்த ஆச்சாரமும் தேவையில்லை.

நம் ஆசைகளையெல்லாம் நிறைவேற்றுவதே இறைவன் தான். எனவேதான் அவர் என்ன செய்தாலும் அவரை நாம் கோபித்துக் கொள்ளக் கூடாது. இறைவனை கோபித்துக் கொள்ள நமக்கு அதிகாரமே இல்லை. காரணம் நாம் இறைவனின் பிள்ளைகள்.

யார், யார் என்னென்ன பலனை யார் யார் மூலம் அடைய வேண்டுமோ அந்தப் பலனை அவர்கள் அடைந்த பிறகு தான் ஒரு மனிதனை இந்த உலகத்திலிருந்து இறைவன் கொண்டு செல்கிறார்.

ஒரு மனிதனுக்கு அளவிற்கு அதிகமான தண்டனையை இறைவன் கொடுக்கிறபொழுது அவர் குற்றவாளியாகிறார். நீதிபதியாக இருந்தாலும் அந்த நீதிபதி தன் வரம்பை மீறக்கூடாது. இந்த நியதி இறைவனுக்கும் பொருந்தும்.

இறைவன் தர்மமும் செய்வார், அக்கிரமமும் செய்வார். ஆனால் அவர் அக்கிரமம் செய்யும் பொழுது அது அக்கிர தர்மமாக திரிபடைந்து அவரது செயல்கள் எல்லாமே தர்மமாகி விடுகிறது.

மனிதனின் வாழ்க்கை மனிதனிடம் இல்லை. அவனது வாழ்க்கையே இறைவனின் கையில் இருக்கிறது. அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். இறைவனிடம் நாம் என்ன கேட்டாலும் அவர் கொடுப்பதைத் தான் கொடுக்கிறார். நாம் கேட்பது எல்லாம் கிடைக்கும் என்பது உறுதியில்லை.

நம் வாழ்க்கையில் நடப்பதை அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் நிம்மதியாகவும், ஓரளவிற்கு மகிழ்வாகவும் இருக்க முடியும். நம் ஆசைகள் எல்லாவற்றையும் தூர எறிந்து விட வேண்டும். உண்மையில் இறைவன் விரும்புவது இதைத்தான்.

இறைவன் மனிதர்களுக்குக் கொடுக்கும் துன்பங்களுக்கு அளவு என்பதே கிடையாது. அவரைத்தான் நாம் கருணாமூர்த்தி என்று சொல்கிறோம். அவர் அப்படி நம்மைச் சொல்ல வைக்கிறார். இதுவும் இறை இரகசியமே. இது சத்தியம். இறைவன் ஒரு மாயாஜாலக்காரன்.

எல்லா அறிவாளிகளும் வாழ்க்கையில் வெற்றி கொள்வதில்லை. ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெற கண்டிப்பாக இறைவனின் அருள் கிடைக்க வேண்டும். அதனால் வாழ்க்கையில் தோல்வியுற்றவன் எவனும் முட்டாள் இல்லை. அவனுக்கு ஏனோ இறையருள் இல்லை என்பதுதான் உண்மை.

ஆணுமில்லாமல் பெண்ணுமில்லாமல் அரவாணிகளைப் படைப்பாராம் இறைவன். அதையும் மனிதகுலம் பொறுத்துக் கொள்ள வேண்டுமாம். இறைவன் எவ்வளவு கொடுமைக்காரர் பார்த்தீர்களா? ஏன் இறைவன் இந்த அரவாணிகளை அர்த்த நாரீஸ்வரர்களாகப் படைத்திருக்கக்கூடாது. ஏன் தெரியுமா?

அது அவரது அம்சம். இறைவனுக்கு எவ்வளவு சுயநலம் என்பதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.

மனிதர்கள் இறைவனின் வாரிசுகள். காரணம், நாம் எல்லாரும் அவரது பிள்ளைகள் என்பதால்.

உலகிலுள்ள எல்லா நடப்புகளுக்கும் மூலகர்த்தா இறைவன் தான். மனம் ஒன்றை ஏன் சொல்கிறது, எதற்காகச் சொல்கிறது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இதுவும் இறை இரகசியங்களில் ஒன்று.

எதெல்லாம் ஒருவனின் மனோதர்மத்திற்கு உட்பட்டதோ அதையெல்லாம் இறைவன் அங்கீகரிக்கிறார். காரணம், மனோ தர்மம் என்பது அவரது விருப்பத்தைக் குறிக்கிறது.

இறைவன் மனிதனை குழப்புவார். அவர் அவ்வாறு செய்யும் பொழுது எப்பொழுது வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கும். நாம் தெளிவாக இருந்தும் பயனில்லை. எதற்காக இறைவன் குழப்புகிறாரோ அது நடந்தே தீரும். இது சத்தியம்.

பாவமும் பாவமும் சேர்ந்தால் புண்ணியம். இதற்கு விளக்கம் ஒருவன் பாவங்கள் செய்தாலும் இறைவன் அவனுக்கு இப்பிறவியிலேயே நற்பலன் கொடுக்கிறார். காரணம், இந்தப் பாவம் ஏதோவொரு புண்ணியத்திற்கு கருவாகிறது. அதனால் ஒருவன் பாவம் செய்தாலும் நற்பலனடைகிறான். ஆனால், அது எப்பொழுது புண்ணிய பலனை அனுபவிக்கும் அளவிற்குப் பரிணாமம் எடுக்கிறது என்றால் அந்தப் பாவச்செயல் ஏதோ ஒரு புண்ணியத்திற்கு வித்தாகவும்

அமைந்து இறைவனின் அங்கீகாரமும் கிடைக்கும் பொழுது அப்பாவச் செயல் புண்ணியச் செயலாகப் பரிணாமம் எடுக்கிறது. நஞ்சை மருந்தாகப் பயன்படுத்தலாம். ஆனால், சிறிது ஏமாந்தலும் நஞ்சு தன் குணத்தைக் காண்பித்து விடும். அதுபோல் எப்பொழுது அப்பாவச் செயல் இறைவனால் அங்கீகரிக்கப்படாது விட்டுவிடப்படுகிறதோ அப்போது அது பாவச் செயலாகவே இருந்து விடுகிறது. அதைச் செய்தவன் புண்ணிய பலனை அனுபவிக்க முடியாது.

இறைவன் நமக்குச் செய்ய நினைத்ததை எப்பொழுது செய்ய வேண்டுமோ அப்பொழுதுதான் செய்கிறார். ஒரு நொடிப் பொழுது கூட முன்பாகவோ தாமதமாகவோ செய்வதில்லை. எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவுதான் செய்கிறார். துளிகூட கூடுதலாகவோ குறைத்தோ செய்வதில்லை. அதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படித்தான் செய்கிறார். சிறிது கூட மாறுபட்டுச் செய்வதில்லை. அதையும் நாம் கேட்டாலும் கேட்காவிட்டாலும் செய்கிறார். இதுவும் ஒரு இறைஇரகசியம். இது சத்தியம்.

இறைவன், இவ்வுலகை விட்டு நம்மை எப்பொழுது,எங்கே, எப்படிக் கொண்டு போக வேண்டுமோ அப்பொழுது, அங்கே, அப்படிக் கொண்டு போவார். நாம் முயற்சி செய்தாலும் கூட நொடிப்பொழுது கூட முன்பாகவோ, தாமதமாகவோ கொண்டு செல்ல மாட்டார். சொர்க்கம் என்றால் சொர்க்கத்திற்கும், நரகம் என்றால் நரகத்திற்கும் கொண்டுசெல்வார். மாற்றிக் கொண்டு போக மாட்டார். உன் பாவங்களை மன்னிப்பதும், மன்னிக்காததும் அவர் விருப்பம். நீ நெருப்பால் அழிய வேண்டும் என்றால் நெருப்பால் அழிவாய். நீரால் அழிய வேண்டும் என்றால் நீரால் அழிவாய். மண்ணில் புதைந்து அழிய வேண்டுமென்றால் மண்ணில் புதைந்து அழிவாய்,

நஞ்சால் அழிய வேண்டுமென்றால் நஞ்சால் அழிவாய், ஆயுதத்தால் அழிய வேண்டுமென்றால் ஆயுதத்தால் அழிவாய், தூக்குப் போட்டு சாக வேண்டுமென்றால் துக்குப் போட்டு சாவாய். எதுவுமே மாறுபட்டு நடக்காது. ஆனால், எவனொருவன் நொடிப் பொழுதில் சிரமமில்லாது இவ்வுலகை விட்டுச் செல்கிறானோ அவன் புண்ணியவான். அவன் இறைவனின் அன்பிற்கு உரியவன்.

இறுதியாக நம்மனம் சொந்த பந்தங்கள், கட்டிய கணவன், மனைவி எல்லாரையும் விட்டுவிட்டு இறைவனிடம் மட்டும்தான் லயிக்கும். இதுவும் ஒரு இறை இரகசியம்.

இறைவன் ஒருவன் அறிந்தோ அறியாமலோ செய்யும் பாவங்களை மன்னிக்கிறார். ஆனால், வேண்டுமென்றே ஒருவன் இன்னொருவனுக்குச் செய்யும் பாவங்களை மன்னிப்பதே இல்லை.

அப்பா, உங்கள் வழிப்படி என்னால் நடக்க முடியாது, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் என் வழிப்படி நடந்து கொள்கிறேன். நல் வழிதான், என்னை வாழ்த்துங்கள், எனக்கு உதவி செய்யுங்கள், வழிகாட்டுங்கள் என்று ஒரு பிள்ளை நம்மைக் கேட்டான் என்றால் அவன் உத்தமன், நல்ல பிள்ளை. இறைவன் அவனுக்குத் துணை நிற்பார். அவனை நாம் மனதார வாழ்த்த வேண்டும். நல்லதே நடக்கும். இது சத்தியம்.

நினைக்காததையெல்லாம் நடத்திக் காட்டுபவர்தான் இறைவன். இறைவன் என்ன வேண்டுமானாலும் செய்வார். அதை நாம் தாங்கிக் கொள்ள வேண்டும். அதுதான் அவரது நீதி தெரிந்து கொள்ளுங்கள்.

நம் வாழ்க்கை விதியின் செயல் என்றாலும் நம் மனதிற்கும் அதில் பங்குண்டு. காரணம், மனம் ஆன்மாவின் பிரதிநிதி. ஆக, இறைவனின் ஈடுபாடு இல்லாது நம் வாழ்க்கையில் எதுவுமே நடக்காது. இந்த உலகத்தில் நமக்குத் துணை இறைவன் மட்டுமே. வேறு யாரும் இல்லை. இது சத்தியம்.

பிறரிடம் ஏதாவது பேசிக் கொண்டிருக்கும் பொழுது மறந்தும் எனது வாழ்க்கையில் இதுவரை இதுபோல் துயர நிகழ்வு எதுவும் நடக்கவில்லை என்று மட்டும் சொல்லி விடாதீர்கள். அப்படி சொன்னீர்களானால், நீங்கள் அப்படிச் சொன்னபிறகு கூடிய விரைவில் அதே துயர நிகழ்வு உங்கள் வாழ்க்கையில் நடக்கும். இறைவன் இதிலும் ஏதோ இரகசியத்தை புதைத்து வைத்திருக்கிறார்.

நாம் எப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று இறைவன் சொல்லவே மாட்டார். ஆனால் நம் மனத்தின் மூலம் உத்தரவுகள் போட்டுக் கொண்டேயிருப்பார். அதைத்தான் நம்மால் செய்ய முடியும், வேறு எதுவுமே செய்ய முடியாது.

வண்டிகள் சாலையில் பயணம் செய்யும், ரயில் வண்டி தண்டவாளத்தில் பயணம் செய்யும், விமானம் ஆகாயத்தில் பயணம் செய்யும், கப்பல் கடலில் பயணம் செய்யும். விதி நம் மனம் என்னும் மாயா வழியில் பயணம் செய்யும். எல்லா வழிகளுக்கும் ஆரம்பம், முடிவு என்று ஒன்று உண்டு. இந்த விதிக்கும் ஆரம்பமும் உண்டு, முடிவு என்றும் ஒன்று உண்டு. ஆரம்பிக்கும் இடம் பேரான்மா என்னும் இறைவன், முடியும் இடம் அதே இறைவன் தான்.

ஆச்சாரம் எதுவாக இருந்தாலும், அதை கடைப்பிடிக்க முடியாத போது விட்டுவிடலாம். அது தவறில்லை.

இந்தப் பிரபஞ்சத்தில் ஒழித்து வைத்திருக்கும் உண்மைகளை இறைவன் எல்லாருக்கும் உணர்த்துவதில்லை. அதே நேரத்தில், ஒரே ஒருவருக்கு மட்டும் உணர்த்துவதுமில்லை. ஆங்காங்கே, தேசம் வாரியாக பலருக்கு வேறுபட்ட நிலைகளில், வேறுபட்ட நேரங்களில், வெவ்வேறு வழிகளில் உணர்த்துகிறார். யார் இறைவன் அருளால், தான் உணர்ந்த உண்மையை தகுந்த பிறரிடம் எடுத்து விளக்கிக் கூறி, அவரையும் புரிய வைத்து, ஏற்றுக் கொள்ளச் செய்து, அங்கீகாரம் பெறுகின்றாரோ அவர் பேரும் புகழும் அடைகிறார்.

# 2. ஆன்மா, உயிர், உடல்

தகுந்த காரணத்திற்காக செய்ய வேண்டிய கடமை ஒன்றை செய்ய முடியாதபோது ஆன்மா உன்னை மன்னிக்கிறது.

ஆன்மாவிற்கு ஆன்மாவின் மீது சந்தேகம் ஏற்படும். அது மாயை. எப்போது நம் ஆன்மாவின் மீது நமக்கு சந்தேகம் உண்டாகிறதோ, அப்போது இறைவன் நமக்கு உதவத் தயங்குவதில்லை. நாம் தான் அவனது உதவியைப் பெற தகுதியுள்ளவராக இருக்க வேண்டும்.

பிறவிகள் ஆன்மாவின் தொடர்ச்சி, ஆன்மா இறைநிலை அடையும் வரை மனம் விரும்பினால் பிறவிகள் தொடரும். பிறவிகள் தொடரவும் நாம் விரும்பும் நிலை அடையவும் மனம் அனுமதித்தால் இறைவனிடம் வேண்டிக் கொள்ளலாம். மனம் தான் அதை விரும்ப வேண்டும். மனத்திடம் கேட்டால் அதுவே பதிலும் சொல்லும். இங்கே மனம் என்பது ஆன்மாவின் நிலையை அடைகிறது. எனவே, மனோசாந்தி என்பது ஆத்ம சாந்தியைக் கொடுக்கிறது. மனமும் ஆன்மாவும் சேர்ந்து இறைநிலையை அடைய விரும்பும்பொழுது நாம் இறைவனை அடைகிறோம்.

மனம் விரும்புவது எல்லாமே ஆன்மாவின் விருப்பம். ஆன்மாவின் விருப்பத்திற்கு மாற்றம் என்பது இல்லை. ஆசைகள் உள்ளவரை ஆன்மா சாந்தி அடையாது.

நம் கடமைகளில் மிக மிக முக்கியமான கடமை நாம் நம் ஆன்மாவிற்கு செய்ய வேண்டிய கடமைதான். நம் ஆன்மாவின் வேண்டல் நம் மனதின் மூலம் வெளிப்படுகிறது. அந்த

வேண்டல் எதுவாக இருந்தாலும் அதை நாம் செய்யலாம். அதில் தவறில்லை.

மனம் ஒன்றை எண்ணிவிட்டால் என்றாவது ஒரு நாள் அதை செயல்படுத்தும் தன்மையுள்ளது. அது எண்ணியதை செயல்படுத்திய பிறகுதான் அதற்கு சாந்தி கிடைக்கிறது. இது ஆழ்மனத்தின் வேட்கை. ஆழ்மனத்தின் வேட்கை ஆன்மாவின் வேட்கை. ஆன்மாவின் வேட்கைக்கு மறுப்பு என்பது இல்லை. இதுவும் சத்தியம்.

ஆன்மா ஒன்றை விரும்பும் பொழுது மனம் அதற்குத் துணை போகும். அறிவும் பின் தொடர்ந்து செல்லும். அது விதியின் விளையாட்டு, இறைவனின் கட்டளை. இதுவும் சத்தியம். அங்கே பொய்க்கு இடமில்லை.

நம் வாழ்க்கையில் மிக மிக முக்கியமானது ஆத்மசாந்தி அடைவது தான். நம் மனம் சாந்தி அடையும்பொழுது நம் ஆன்மாவும் சாந்தி அடைகிறது. அதனால் நம் மன சாந்திக்காக அது சொல்வதையெல்லாம் நாம் செய்யலாம். மனதிற்கு மனமே நீதிபதி.

சில நேரங்களில் நம் மனம் எதையுமே உணராமலும், நம் அறிவு எதையுமே சிந்திக்காமலும் இரண்டும் சூனியமாக இருக்கும். அப்பொழுது அவை இரண்டுமே நமக்குள் இருக்கும் ஆன்மாவுடன் பேசிக் கொண்டிருக்கும்.

ஆன்மா நாம் மகிழ்வை நோக்கிச் சென்றாலும் அழிவை நோக்கிச் சென்றாலும் அது மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். ஆனந்தத்திற்கும் அழிவிற்கும் ஆன்மாவிற்கு வேறுபாடு தெரியாது.

அறிவும் மனமும் சேர்ந்து உயிரை விட்டு விடு என்று சொன்னால் மனிதன் அதற்கு முயற்சிக்கிறான். ஆனால், உயிர் எப்பொழுது போக வேண்டும் என்று இறைவன் நிர்ணயித்திருக்கிறாரோ அப்பொழுதுதான் போகும்.

நம் விருப்பம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதைத் தூண்டுவது பேரான்மாவாகப்பட்ட இறைவன். அந்த பேரான்மாவின் துளியாகப்பட்ட நம்முள் இருக்கும் ஆன்மா, நம் மனம், நம் அறிவு, நம் உடல் இதில் எதை வேண்டுமானாலும் தூண்டலாம். ஆனால் கண்டிப்பாக இதில் நம் உயிருக்கு மட்டும் எந்தப் பங்கும் கிடையாது. அது நம் உடம்பினுள் இருக்கிறது. எப்பொழுது இந்த உடம்பை விட்டுப் போக வேண்டுமோ அப்பொழுது அது போய்விடும். அவ்வளவுதான் அதன் வேலை. ஆக இந்த உயிரைத் தவிர வேறு எது இறைவனால் தூண்டப்பட்டாலும் அது நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும் அதற்கு இறைவன் துணை போவார். நல்லதாக இருந்தால் நமக்கு உயர்வு, கெட்டதாக இருந்தால் நமக்குத் தாழ்வு. ஆனால் இந்த உயர்வு தாழ்வைப் பற்றி மனம் சிறிதும் கவலை கொள்ளாது. அதற்கு வேண்டியது அது விரும்பியது நடக்க வேண்டும். அவ்வளவுதான். சொல்லப்போனால் வாழ்க்கையின் தத்துவமே இதுதான்.

நாம் உறங்கும் பொழுது நம் மூளை உறங்குவதில்லை. அப்பொழுதும் அது வேலை செய்து கொண்டிருக்கிறது. அது முழுதாக இறக்கும்போது நாமும் இறக்கிறோம்.

அறிவுக்கே உத்தரவு போடக்கூடிய வல்லமை படைத்தது மனம். ஆனால் மனம்போடும் உத்தரவுகளை செயல்படுத்தும்படி அறிவு உடலுக்கு உத்தரவு போட்டாலும், உடல் ஒத்துழைக்கவில்லையென்றால் இந்த அறிவாலும் மனத்தாலும் எதுவும் செய்ய முடியாது.

உழைத்துக் கொண்டே இருக்கும் பொழுது ஓய்வெடுக்கச் சொல்லி நம் உடம்பு நம்மை எச்சரிக்கை செய்யும். உடம்பு எச்சரிக்கை செய்துவிட்டால் அதை மதிக்கத் தவறக்கூடாது. நம் உடம்பு ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுவிட்டால் நம் அறிவாலும் மனத்தாலும் எதுவும் செய்ய முடியாது.

மண்ணோடு மண்ணாகப் போகும் இந்த உடம்பு உயிருடன் இருக்கும் பொழுது அத்தனை சுகம் கேட்கிறது. அதற்கும் அந்த இறைவனே காரணம்.

# 3. விதி, மனம், மதி

நாம் யாரை வேண்டுமானாலும் நம்பலாம். இறைவனை நம்பலாம். ஆனால் இறைவன் விதித்த விதியை மட்டும் நம்ப முடியாது. காரணம் அதைப் புரிந்து கொள்ள முடிந்தால் தானே நம்ப முடியும். அதனால் விதியை முழுதாய் புரிந்து கொண்டவர் எவரும் இல்லை. ஓரளவுக்குத்தான் புரிந்து கொள்ள முடியும். விதி எல்லாருக்கும் ஒன்றுபோல் உதவாது.

வாழ்க்கையில் முன்னேற நேர்மையான வழிகளில் முயற்சிகள் எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். லாபம் இருந்தால் சரி. இல்லையென்றால் அது விதியின் செயல். தண்டனை எதுவும் பெரும்பாலும் இருக்காது. ஆனால், நேர்மையில்லாத வழிகளில் முயற்சிகள் எடுத்தால் பலன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தண்டனை என்பது மட்டும் உறுதி. அதிலிருந்து யாராலும் தப்பிக்க முடியது. அதுவும் விதிதான்.

வாய்மையே வெல்லும். எப்பொழுதாவது வாய்மை தோற்றால் அது விதி. பொய்மை வெல்லாது. எப்பொழுதாவது பொய்மை வென்றால் அதுவும் விதியே.

விதியை கடைசியாகத்தான் மனிதன் குறை சொல்ல வேண்டும். முதலிலேயே விதியின் மீது பழியைப் போடக்கூடாது. நீ அறிவைக் கொண்டு சரியாக செயல்பட்டு, வேண்டிய முயற்சிகள் எல்லாம் செய்து, சரியான வழியிலும் சென்று தோல்விகளை அடைந்தால் அதுதான் விதியின் செயல். எடுத்த எடுப்பில் விதியின் மீது பழி போடுவது சரியில்லை. அதைத்தான் கர்மப் பலன் என்று பெரியோர் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

நம் புத்தி ஒழுங்காக வேலை செய்தும் வாழ்வில் கெட்டுப் போனால் அது விதியின் செயல். இது வேறு. நம் புத்தியே ஒழுங்காக வேலை செய்யாததால் வாழ்வில் கெட்டுப் போவது வேறு. அதுவும் விதியின் செயல் தான்.

சரியான காரணத்திற்காக எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கைகள் எப்பொழுதும் சரியான காலகட்டத்தில் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நீ சாதாரண மனிதனாக இருந்தாலும் கூட அது தோல்வி அடைவது இல்லை. சரியான காரணம் இல்லாமலோ, சரியான காலமாக இல்லாமலோ இருந்தால் கடுமையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கக்கூடாது. அது தோல்வியில் முடியும். விதியும் உனக்கு உதவ வேண்டும். எதுவாக இருந்தாலும் மனிதன் வாழ்க்கையில் நடப்பதை ஏற்றுக் கொண்டு போகும் கட்டாயத்தில் இருக்கிறான். அது விதியின் வேலை.

மிகப்பெரிய மாவீரனையும் கூட விதி கோழையாக்கி விடும். பணத்திற்கும்கூட அந்த வலு உண்டு. ஆனால், சுத்த வீரனை பணம் அப்படிச் செய்ய முடியாது. இயற்கையில் சுத்த வீரன் எந்தச் சூழலிலும் கோழையாக மாட்டான். பணத்தால் அவனை எதுவும் செய்ய முடியாது.

விதி அதன் வழியே செல்லும். நாமும் நம் வழியே செல்லலாம். ஆனால் நாம் சரியான வழியில் சென்றால் விதியின் தாக்கம் நமக்கு அதிகம் இருக்காது. நீ எவ்வளவுதான் எச்சரிக்கையுடன் இருந்தாலும் எந்த வகையிலாவது விதி உன்னை வென்று விடும். விதியுடன் எதிர்த்து விளையாடுவதைவிட விதியுடன் சேர்ந்து விளையாடுவது நல்லது.

நீ வாழவேண்டும் என்றால் விதி உன்னை வாழ வைக்கும். இல்லை சாகத்தான் வேண்டுமென்றால் அது உன்னை சாவடித்து விடும். உன் எதிரி எப்படிப்பட்ட அசகாய சூரனாக இருந்தாலும் அவனிடமிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால், விதி உனக்கு எதிராகச் செயல்பட்டால் உன்னால் அதனிடமிருந்து தப்பிக்க முடியாது.

நீ இந்த உலகத்திலேயே மாபெரும் வீரனாக இருக்கலாம். ஆனால் விதி உனக்கு உதவ வில்லையென்றால் ஒரு எலிக்குஞ்சைக் கூட உன்னால் வெல்ல முடியாது.

நீ மிகுந்த இறைப்பற்று உள்ளவனாக இருக்கலாம், தர்மசிந்தனை உள்ளவனாக இருக்கலாம், பாவங்கள் செய்யாதவனாக இருக்கலாம், இறைவன் சந்நிதானத்தில் நின்று இறைவனை வழிபட்டுக் கொண்டு கூட இருக்கலாம். அப்பொழுதும் கூட உனக்கு ஏதாவது கெடுதல் நடக்கலாம். இதுவும் விதியின் விளையாட்டுதான்.

விதிப்படி நீ ஒன்றை அனுபவித்துதான் ஆக வேண்டும் என்றால் உனக்கு நல்லது எது கெட்டது எது என்று சொல்லக் கூடியவர்களைக் கூட அதைச் சொல்ல விடாமல் விதி தடுத்து விடும்.

ஆன்ம விசாரம் எல்லாருக்கும் ஏற்படுகிறது. மதி மயங்கி மனமும் தூண்டும்பொழுது ஆன்ம விசாரம் ஏற்படுகிறது. சந்தர்ப்பமும் சாதகமாகும் பொழுது குற்றங்கள் நடக்கிறது. அதுவும் விதிப் பயனே.

அறிவை தன் வழிக்குக் கொண்டுவர மனத்தால் முடியும். மனதை தன் வழிக்குக் கொண்டுவர விதியால் முடியும். விதி நமக்காக காத்திருக்காது. அது செய்வதை செய்து கொண்டு போய்க் கொண்டிருக்கும். நாமும் எதிர்நீச்சல் போடக்கூடாது. அதன் வழியில் கூடுமானவரை பாதுகாப்பாகச் சென்று வாழ்க்கையில் கரையேறிக் கொள்ள வேண்டும். விதி சரியில்லை என்றால் அது விரட்டி விரட்டிக் கெடுக்கும். உன்னால் தப்பிக்க முடியாது.

பல சந்தர்ப்பங்களில் மதி சொல்வதை மனம் கேட்காது. நான் சொல்வதைச் செய் என்று மதிக்கு மனம் உத்தரவு போட்டுவிடும். எனவே, ஒருவகையில் மதிக்கு மனத்தை பிடிக்காது. முடிவில் விதி விளையாடும்பொழுது மதி விதிக்கு ஒத்துழைக்கும். பிறகு இந்த மனம் வருத்தப்படும். மதி கெட்டுவிட்டது, அது வேலை செய்யவில்லை என்று மனம் மதியைக் குறைசொல்லும். இதுவும் விதியின் விளையாட்டுதான். காரணம் மதி, மனம் இரண்டிற்கும் விதி மேலானது.

மனம், மதி இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்துழைத்து கூட்டாக வேலை செய்யும் பொழுது விதி தன் வேலையை சற்று தள்ளிப் போடுகிறது. இல்லை தன் பலத்தை காண்பிக்கத்தான் வேண்டும் என்றால் விதி அதற்குத் தயங்குவதில்லை. அதன் பலத்தை எந்த வகையிலும் காண்பித்து விடுகிறது.

விதியின் விளையாட்டுகளுக்கு மனிதனை குறை சொல்லக் கூடாது. ஒருவனது கதையை முடிக்க வேண்டும் என்றால் விதி நொடிப் பொழுதில் முடித்துவிட்டுப் போய்விடும். அவனது புத்திசாலித்தனம் எதுவும் செயல்படாது. மனிதர்களை ஏமாற்றலாம். விதியை ஏமாற்ற முடியாது.

இந்தப் பிறவியில் நீ எதற்காக மிகுந்த சிரமங்களும் துக்கங்களும் அடைகிறாயோ, அது தொடர்பான காரியங்களில் நீ சென்ற பிறவியில் அக்கிரமங்கள் செய்திருப்பாய். அதுதான் விதி.

மனிதன் ஏமாற்றுவதை புரிந்து கொள்ளலாம். ஆனால் விதி ஏமாற்றுவதை புரிந்துகொள்ள பொதுவாக முடியாது. நீ ஆணவமாக இருக்கிறாய் என்றால் விதி இன்னும் உன்னிடம் விளையாடவில்லை என்று பொருள்.

வாழ்க்கையை மிக விரைவில் புரிந்து கொண்டு நம் முன்னேற்றத்திற்கு தொடர்ந்து அக்கறையுடனும், கருத்துடனும் முயற்சி செய்து செயலாக்கம் செய்ய வேண்டும். அதற்கும் மீறி நாம் வீழ்ந்தால் அது விதியின் விளையாட்டு. நாம் முட்டாள்கள் இல்லை. நம்மை முட்டாள் என்று நினைப்பவர்தான் அடிமுட்டாள்கள்.

மனிதன் சதி செய்தால் தப்பித்துக் கொள்ள வழி இருக்கும். விதியே சதி செய்தால் அதற்கு இடமிருக்காது. விதியை வென்றவர் மிக மிகச் சிலரே. அதற்கு இறைவனின் அருள் வேண்டும். மதிவேலை செய்யவில்லையென்றால் விதி விளையாடி விடும். மதியையும் மீறி விதி விளையாடினால் அது விதியின் வலிமை.

30 லட்சம் ரூபாய் பெருமானம் உள்ள ஒரு கார் 10 ரூபாய் நட்டு இல்லாமல் விபத்துக்கு உள்ளாவது போல், பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் ஒரு சிறு கருத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாததால் தோல்வியில் முடியும். அதுதான் விதி. கூடுமானவரை விதிக்கு இடம் கொடுக்கக்கூடாது.

ஒருவனது உழைப்பு வீணாகக் கூடாது. பெரும்பாலும் வீணாகாது. ஒருவேளை வீணானால் அது அவனது தலைவிதி. அதை அவன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

கல்வி கற்பதற்கும் ஒருவர் வாழ்க்கையில் வளமுடன் நன்றாக இருப்பதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. நாம் நன்றாக இருப்பதும், இல்லாதிருப்பதும் நம் பூர்வ கர்ம பலனைப் பொருத்தது. அதுதான் விதி. விதியாகப்பட்டது ஒரு ஞானியின் மூளையை கூட மழுங்கடித்து விடும்.

நம் ஆசைகள் வேறு, விதியின் கணிப்பு வேறு, அரிதாகத் தான் இரண்டும் ஒன்றாக இருக்கும். அது ஒன்றாக இல்லாத போது வாழ்வின் நிகழ்வுகளை அப்படியே ஏற்றுக் கொள்வதைத் தவிர மனிதனால் வேறு எதுவும் செய்ய முடியாது. எதுவாக இருந்தாலும் இறுதியாக பழி யார் மீது விழும் என்றால் விதி மீதுதான் விழும். அதுதான் உண்மையும் கூட. நாம் நினைக்காதது எல்லாம் நடக்கிறதே அதை நடத்துவது விதி.

சிறந்த அறிவாளிகளுக்கு கூட மூளை சில சமயம் நான் வேலை செய்ய மாட்டேன் என்று அடம்பிடிக்கும். மனதிற்கு அது கட்டுப்பட்டது என்றாலும் கூட இந்த மனம் என்ன கெஞ்சினாலும் அதன் வழிக்கு வராது. அது விதியின் செயல்.

அவ்வப்பொழுது உள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல மனம் என்ன சொல்கிறதோ அதுபோல் நடந்து கொள்வதுதான் வாழ்க்கை. ஆனால், இந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குவது விதி. விதியை வென்றவர் யாருமில்லை. ஆசைகள் எதுவுமின்றி இறைவனை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருந்தால் மட்டுமே அதை எதிர்கொள்ள முடியும். விதியை நிர்ணயிப்பது இறைவன்.

நல்லதும் கெட்டதும் நம்மை நாடி வரும். அதை உணர்ந்து நல்லதை அனுபவித்துக் கொள்ள வேண்டும். தவறினால் மீண்டும் அது வருவது அரிது. கெட்டது வருவதை உணர்ந்து அதிலிருந்து தப்பிக்க நாம் என்னதான் முயன்றாலும் அது நம்மை விடாது. விரட்டிவந்து எப்படியாவது நம்மை பிடித்துக் கொள்ளும். அதுதான் விதியும் அதன் சக்தியும்.

விதி சாதகமாக இருந்து நன்றாக வாழ்பவனை புத்திசாலி என்றும், விதி பாதகமாக இருந்து நன்றாக வாழ முடியாதவனை முட்டாள் என்றும் இந்த உலகம் சொல்கிறது. உண்மையில் புத்திசாலி, முட்டாள் என்று யாரும் இல்லை. மனிதனின் மண்டைக்குள் மூளை இருக்கிறது, அவ்வளவுதான். அது சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் வேலை செய்கிறது. மனம் பேதமை அடையாது இருக்க வேண்டும்.

நீ சுத்த மாவீரனாகவும், சிறந்த அறிவாளியாகவும் இருக்கலாம். ஆனால் நீ அசந்தால் இன்னொரு மனிதனால் உன்னைக் காலிபண்ண முடியும். விதி இருக்கிறதே விதி, அதனால் நீ அசந்தாலும் அசராவிட்டாலும் உன்னைக் காலி பண்ண முடியும். கெட்டிக்காரன் இழுக்கும் இழுவைக்கெல்லாம் மனிதன் வேண்டுமானால் வருவான். விதி வராது. விதி எப்பொழுதுமே ஒருவனுக்கு உதவிக் கொண்டிருக்காது. அது எப்பொழுது கவிழ்த்தும் என்றும் சொல்ல முடியாது. உன்னை புத்திசாலி ஆக்குவதும், முட்டாள் ஆக்குவதும் உன் மூளை இல்லை, உன்னுடைய விதி.

பின்னாளில் நடக்கப் போகும் ஒன்றை நம் வாக்கு மூலமோ அல்லது பிறர் வாக்குமூலமோ விதி முன்கூட்டியே சொல்ல வைக்கும்.

உன்னாலும், என்னாலும் அல்லது வேறு எவராலும் விதியின் போக்கை மாற்ற முடியாது. விதி என்ன வேண்டுமானாலும் செய்யும். அது எப்பொழுது என்ன செய்யும் என்பது மட்டும் யாருக்கும் தெரியாது. அவ்வளவு இரகசியமானது.

நம் செயல்பாடுகள் எல்லாம் மனம் சொல்கிறபடிதான் இருக்கும். நம் அறிவு என்ன சொன்னாலும் நம் மனம் சொல்வதைத்தான் நம்மால் செய்ய முயற்சிக்க முடியும். அந்த முயற்சியில் வெற்றி அடைவதும், வெற்றி அடைய முடியாது போவதும் நம் கையில் இல்லை. நடப்பது விதிப்படி நடக்கும்.

விதிக்கு ஒத்துழைத்துக் கொண்டே போனாயானால் ஒரு காலகட்டத்தில் ஒன்றுமில்லாமல் கூட இருக்கலாம், அல்லது கோடீஸ்வரனாகவும் இருக்கலாம். ஆனால், எப்படியோ வாழ்க்கை சுமுகமாக ஓடிவிடும்.

விதி பாட்டுக்கு அதன் வேலையைச் செய்து கொண்டிருக்கும். அது யாருக்கும் கட்டுப்படாது. ஆனால் அதன் போக்கை உணர்ந்து முன்னெச்சரிக்கையோடு நம் மூளைக்கு சிறிது வேலை கொடுத்தோமானால் அதன் தாக்கத்தை நம்மால் சமாளிக்க முடியும். மேலும், இறைவனிடம் நம்பிக்கையும் வேண்டும். விதிக்கு முன்னால் மனிதர்கள் எல்லாருமே முட்டாள்கள் அல்லது ஏமாளிகள். எவ்வளவோ முன்னெச்சரிக்கையாக வாழ்வில் இருந்தாலும் கூட ஏதாவது விரும்பத்தகாதது நம்மையும் மீறி நடக்கலாம்.

சாஸ்திரம் சம அந்தஸ்து உள்ள குடும்பத்தில் தான் திருமண சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்கிறது. முன் காலங்களில் குடும்ப பரம்பரை குணம் முதலியவற்றை சரியாக விசாரித்து அறிந்து பின்பு திருமண சம்பந்தம் செய்து கொள்வார்கள். இப்பொழுது அதற்கெல்லாம் வழியில்லாது போய்விட்டது. பாரம்பரியம் எங்கோ சென்று விட்டது. அந்த இடத்தைப் பணம் பற்றிக் கொண்டிருக்கிறது. இதுவும் விதியின் விளையாட்டுதான்.

நட்புக்கு இணையான உறவு வேறு எதுவும் இல்லை. ஆனால், இந்த நட்புறவையும் விதி கெடுக்கும் வல்லமை உடையது. நாம் நம் மூளையை நல்ல விதமாகப் பயன்படுத்தினாலும்

கூட விதி நம்மைக் கெடுக்கும் வல்லமை உடையது. நாம் நம் மூளையைப் பயன்படுத்தவில்லையென்றால் விதி நம்மை மிகவும் கெடுத்து விடும். நம் வாழ்க்கை பொருளற்றதாய்ப் போய்விடும். நமது வாழ்க்கை அப்படிப் போய்விடக்கூடாது. ஒருவனுக்கு யாருடைய உதவி கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் விதியினுடைய உதவி கிடைக்க வேண்டும்.

ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் முயற்சிகள் இருந்தாலும், விதி உதவவில்லையென்றால் அவனால் வாழ்க்கையில் மேலும் உயர முடிவதில்லை. அதுபோல், ஒருவன் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருந்தாலும் விதி உதவினால் சிறிது முயற்சி இருந்தால் அவனால் வாழ்க்கையில் உயர முடியும்.

விதி சரியாக இருந்து மதி சரியாக இல்லாவிட்டாலும், மதி சரியாக இருந்து விதி சரியாக இல்லாவிட்டாலும் வெற்றி கிடைக்காது. யாராக இருந்தாலும் முதலில் தன் விதியைப் புரிந்து கொள்ள வேண்டும் கூடுமானவரை. பிறகு தன் மதியை தான் புரிந்து கொண்ட விதிக்கு ஏற்றபடி செயல்படுத்த வேண்டும். வாழ்க்கையில் வெற்றியடையலாம். அதை விடுத்து மதியே எல்லாம் என்று செயல்படுவது மூடத்தனம். யாராலும் தன் தலைவிதியையோ, பிறர் தலைவிதியையோ அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியாது.

நம்மேல் சுமை ஏற்றுவதும் பின் அந்தச் சுமையை இறக்கி வைப்பதும் நம் அறிவு இல்லை. எல்லாமே விதியின் செயல். ஆக விதியின்படி ஒன்று நடக்க வேண்டுமென்றால் அது

நடந்தே தீரும். விரைவில் நடப்பதும் நாள்பட்டு நடப்பதும் விதியின் விருப்பம். அது நிர்ணயித்த நேரப்படி நடக்கும். இங்கே நம் அறிவுக்கு சிறிது கூட இடமில்லை.

சேரக்கூடாதவரை சேர்ப்பதும், சேர வேண்டியவரை சேர்க்காது இருப்பதும் விதியின் செயல்தான். அறிவு என்ன முயன்றாலும் அதைத் தவிர்க்க முடியாது. அறிவு, அறிவு என்று சொல்லிக் கொள்ளலாம் அவ்வளவுதான். ஆனால், எல்லாம் அறிவின் செயல் இல்லை. நீ எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் சரிதான், உன்னை வழி நடத்திச் செல்வது உன் விதி, அறிவு இல்லை. இது சத்தியம்.

விதி தன் வேலையைச் செய்து கொண்டே போகும். அதை மாற்றியமைக்கவோ திசை திருப்பவோ எந்த மனிதனாலும் முடியாது. வாழ்க்கை நிகழ்வுகள் எல்லாமே விதியின் கணக்குப்படிதான் நடக்கிறது. நம் அறிவின் பங்களிப்பு மிகமிகக் குறைவே. விதி விதி தான். மனம் மனம் தான். அறிவு அறிவு தான். விதியை மீறி நடக்க மனத்தால், அறிவால் முடியாது. விதி சொல்வதைத் தான் மனம் சொல்லும் மனம் சொல்வதைத்தான் மனிதனால் செய்ய முடியும்.

வாழ்க்கையில் நம்மையும் மீறி நடப்பதெல்லாம் விதியின் செயல். நம் அறிவிற்கோ, மனத்திற்கோ அங்கே பங்கு இல்லை. அறிவிற்கு சக்தி என்பதே கிடையாது. அறிவை நம்பியிருப்பவர்கள் மூடர்கள். விதி அறிவையும் விட மேலானது. விதி விதி தான். விதியோடு மனிதனின் அறிவால் சரிக்கு சமமாக போட்டி போடவே முடியாது. யாராவது அது முடியும்

என்று சொன்னால் அவர்கள் மூடர்கள். விதி ஒரு மனிதனை எப்படியெப்படியெல்லாமோ இழுத்துச் செல்லும். நாளை எப்படிக் கொண்டு செல்லும் என்று மதியால் உறுதியாகச் சொல்ல முடியாது. அது தான் விதிக்கும் மதிக்கும் உள்ள வித்தியாசம்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. ஆனால், விதிக்கு வல்லவன் எவனுமில்லை. நீ இந்த உலகத்திலேயே மிகச் சிறந்த புத்திசாலி என்றாலும் விதி உன்னை ஏமாற்றி விடும். அதுவும் நொடிப்பொழுதில் ! நீண்டகாலத் திட்டம் அதற்குத் தேவையில்லை. நீ யாராக இருந்தாலும் விதிக்கு முன் தூசு.

வாழ்க்கையில் எதுவாக இருந்தாலும் பரிசுத்தமாகக் கிடைக்கா விட்டாலும் அசுத்தமில்லாது கிடைத்தாலே போதுமானது. வாழ்க்கை நன்றாகத்தான் இருக்கும். மனம் தான் திருப்தியடைய வேண்டும்.

இந்த மனதிற்கு எதையும் இரகசியமாக வைத்துக் கொள்ளத் தெரியாது. வெளியில் சொல்லத் துடிக்கும். ஆனால், தன் குற்றத்தை மட்டும் மறைக்கும். நம்மை பொய்யன், புரட்டன் என்று பெயர் வாங்க வைக்கும். எனவே, நாம் குற்றங்கள் எதுவும் செய்யாது இருந்தால் அதற்கு வாய்ப்பு இல்லை.

கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா
என்று கேட்டால், அதற்குப் பதில் போகலாம் என்பது தான்.

அதில் தவறில்லை. ஆனால், பாதகம் எதுவும் அதனால் விளையக் கூடாது.

அன்பு பாசமாக பரிணமிக்கும் பொழுது மனம் சொல்வதையெல்லாம் மனிதன் செய்கிறான். மனிதனை மனிதனாக வாழ வைப்பதே இந்த மனம் தான்.

எந்தச் செயல் உன் மனதை மகிழ்வுடன் வைத்திருக்குமோ அந்தச் செயலை செய். ஆனால் மற்றவர்க்கு இடையூறு இல்லாமலிருக்க வேண்டும்.

மனது சுயநலவாதியாக இரு என்று சொல்லியபிறகு நாம் சுயநலவாதியாக இருக்கலாம். அதில் தவறில்லை. வாழ்க்கை என்பது யாதெனில் மனம் சொல்வதையெல்லாம் செய்து கொண்டு போவது தான் வாழ்க்கை.

பிறர் யாராக இருந்தாலும் அவர்கள் நலமுடன் வாழ வேண்டும். இப்படிப்பட்ட மனம் கொண்டவரே மனிதர். மற்றவர் மனிதரில்லை.

மனோதர்மம் என்கிறார்கள், பிறகு தர்மம் என்கிறார்கள். இரண்டும் ஒன்றா என்று கேட்டால் அதற்குப் பதில் இல்லை என்பதுதான். மனோதர்மம் என்பது முழுக்க முழுக்க நம் காரியங்களைப் பற்றியது. நம்மைப் பற்றிய காரியங்களில் நம் மனம் என்ன சொல்கிறதோ அதை நாம் தாராளமாகச் செய்யலாம். இந்த மனம் எதைச் சொன்னாலும் சரிதான், அதில் தவறில்லை. ஆனால், எந்தக் காரியமானாலும் அது

பிறர் தொடர்புடையது என்றால் நம் மனம் விரும்புகிறதோ இல்லையோ, பிறருக்காக ஒன்றைச் செய்கிறோமில்லையா அது தர்மம் ஆகிவிடும்.

ஏற்கனவே கண்ட ஒரு காட்சியை திரும்பவும் காண நம் இரு கண்களால் முடியாது. காரணம் இறைவன் அதை திரும்பவும் நடத்துவதில்லை. அதே போன்ற நிகழ்வை நடத்தினாலும் முன்பு நடத்தியது போலவே, அதாவது நூற்றுக்கு நூறு அதேபோல நடத்துவதில்லை. சற்றாவது மாறியிருக்கும், நிகழ்வு மாறாவிட்டாலும் கூட. ஆனால், அவை எல்லாவற்றையும் திரும்பவும் காண நம் மனக்கண்ணால் முடியும். அதுதான் மனதின் சக்தி.

பெரும்பாலானவர்களின் மனம் எப்படி இருக்கிறது என்றால், நாம் வேண்டாம் ஆனால் நம் பணம் வேண்டும். பிற பலன்கள் நம்மால் ஆகும் என்றால் அந்தப் பலன்கள் வேண்டும் என்ற நிலையில்தான் உள்ளது.

எப்பொழுது மனம் இறைவன் விதித்த விதியை புரிந்து கொள்கிறதோ அப்பொழுது அது வாழ்க்கையில் நடக்கும் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறது.

நம் மனம் உல்லாசப் பயணம் செல்வது போல் எங்கெங்கெல்லாமோ சென்று விடும். எங்கு செல்கிறோம் என்று அதற்கே தெரியாது. திடீரென்று நம்மிடம் திரும்பி வரும். அது நம்மிடம் திரும்பி வந்தவுடன் நாம் சுயநினைவை அடைகிறோம். அதுவரை நமக்கும் நாம் எங்கிருக்கிறோம் எந்த சூழ்நிலையில் இருக்கிறோம் என்று தெரியாது.

இறைவன் நமக்கு அளித்த அருமையான பரிசு நம் மனம். அது ரோஜா மலரினும் மென்மையானது. மனதில் தோன்றும் இனிமையான எண்ணங்கள் மலைத்தேனைப் போன்றது. இந்த மனதை இனிமையான எண்ணங்களில் ஊற வைப்பது ரோஜா மலரை மலைத்தேனில் ஊற வைப்பதைப் போன்றது. அதனால் கிடைப்பது மன அமைதி எனும் குல்கந்து, இந்த குல்கந்தை உண்டால் நாம் அடையப் போவது முக்தி எனும் பேரின்பம்.

மனம் கெட்டால் உடல் கெடும் என்பதும், உடல் கெட்டால் மனம் கெடும் என்பதும் உண்மையே. மனம் ஆன்மாவிற்கு அடுத்த நிலையில் உள்ளதால் மனசாந்தி ஆத்ம சாந்தியைக் குறிக்கிறது. எனவே, எதெல்லாம் மனதிற்கு சாந்தியைக் கொடுக்கிறதோ அதெல்லாம் நாம் செய்யலாம். அதுவே மனோதர்மம்.

நாம் அறிந்த பிறரை நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒருவகையினர் நண்பன் என்றும், இன்னொரு வகையினர் நண்பர் என்றும், பிரிதொரு வகையினர் தெரிந்தவர் என்றும், வேறொரு வகையினர் தெரிந்தவன் என்றும் பரிணாமம் அடைகின்றனர். நம்மீது எதற்குமே பொறாமைப்படாதவர் நண்பனாகவோ அல்லது நண்பராகவோ மற்றவர் தெரிந்தவராகவோ அல்லது தெரிந்தவனாகவோ இருப்பர். ஒரு மனிதர் இதில் நமக்கு எந்த வகையைச் சேர்ந்தவர் என்பதை நம் மனதிடம் கேட்டால் அது பதில் சொல்லும்.

வாழ்க்கை என்பது ஒரு பொழுதுபோக்கு. எந்த வகையிலாவது தர்மத்திற்கு உட்பட்டு அதை மகிழ்வோடு கழித்துவிட வேண்டும். இங்கே தர்மம் என்பது பொது தர்மத்தைக் குறிக்கும். நம்

மகிழ்ச்சி பொதுதர்மத்திற்கு உட்பட்டு இல்லாது போனாலும் கண்டிப்பாக நம் மனோ தர்மத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். கூடுமானவரை பிறரோ பிற ஜீவன்களோ பாதிக்கப்படக்கூடாது.

நாம் யாரைப் பற்றியாவது நம் மனதில் எண்ணும் பொழுது நமது எண்ண அலைகளாவது இந்த பிரபஞ்சத்தில் பரவுகிறது. சிறிது நேரத்தில் நாம் யாரைப் பற்றி எண்ணுகிறோமோ அவரை சென்றடைகிறது. அப்பொழுது அவருக்கும் நம்மைப் பற்றிய எண்ணம் உண்டாகிறது. நம் எண்ணம் எந்த உணர்வைப் பிரதிபலிக்கிறதோ அதே உணர்வு அவருக்கும் உண்டாகிறது. எனவே, பிறரைப் பற்றி நாம் எண்ணும் பொழுது நல்ல உணர்வுகளுடன் எண்ண வேண்டும்.

நாம் நீதிநெறியுடன் வாழ்ந்தால் இறைவனையே நீர் யார்? என்று கேட்கலாம். அந்த அளவுக்கு மனத்துணிச்சல் நமக்கு உண்டாகும்.

நாம் மனத் தெளிவுடன் இருந்தால் நம்மைக் குழப்ப முயல்கிறவர்களை நாம் குழப்பி விட முடியும்.

நாம் ஒரு வேலையைச் செய்து அந்த வேலை நம் மனத்தை உறுத்தவில்லையென்றால் நாம் செய்தது சரி என்று பொருள்.

வாழ்க்கையின் ஒரு காலக்கட்டத்தில் உறவுகள் வேண்டாம் என்று நம் மனம் சொல்லும். அப்பொழுது நாம் உறவுகள் இல்லாமல் இருப்பது நல்லது.

இந்த புத்தி இருக்கிறதே அது நம் மனம் சொல்வதற்கெல்லாம் ஆடாது. அது சொல்ல வேண்டியதைச் சொல்லி தன் கடமையைச் செய்யும். ஆனால், இந்த மனத்திற்கோ புத்தியை ஆளுமை செய்யும் சக்தி உண்டு. அதனால் மனம் புத்தியை ஆளுமை செய்யும். இந்த புத்தி மனத்திடம் நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன், அதற்கு மேல் எக்கேடு கெட்டாவது போ என்று சொல்லிவிட்டு மனம் சொல்வதைச் செய்ய ஒத்துழைக்கும். ஆனால் அது ஒத்துழைத்தாலும் வேண்டா வெறுப்பாக ஒத்துழைப்பதால் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அந்தத் தவறுகளின் மூலமாக மனிதனுக்கு இடர்கள் வரும். எனவே இந்த புத்தி ஒன்றைச் சொன்னால் அதை மனம் கேட்க வேண்டும். இல்லையென்றால் புத்தியின் முழு ஒத்துழைப்பு மனத்திற்கு கிடைக்காது.

அவரவர் மனத்தை நலமுடன் வைத்துக் கொண்டாலே போதும். மனநல வைத்தியருக்கு வேலை இருக்காது. உடல் நலத்தைப் பற்றி குசலம் விசாரிக்கிறவர்கள் மனநலத்தைப் பற்றி விசாரிக்க மாட்டார்கள்.

ஒரு பொய் சொல்லும் பொழுது மனம் உறுத்தவே இல்லையென்றால் அது பொய்யில்லை.

ஒருவனுக்கு என்ன இடர் வந்தாலும் மனத் துன்பம் மட்டும் வரக்கூடாது.

நம்மை மதிக்காதவர் யாராக இருந்தாலும் அவர்கள் நமக்குத் தேவையில்லை. ஒருவேளை தவிர்க்க முடியாதபடி

தேவைப்பட்டால் அவர்களை நம்மை மதிக்க வைத்து பிறகு நம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். அதன்பிறகு அவர்களது உறவு நீடிப்பின் தேவையை முடிவு செய்வது நம் மனம். நம் மனத்தின் தீர்ப்பு இறுதியானது.

ஏதோ ஒரு சூழ்நிலையில் உங்கள் மனம் ஆர்ப்பரித்துக் கொண்டோ, மகிழ்வாகவோ, துக்கமாகவோ, வருத்தமாகவோ அல்லது அமைதியாகவோ இருக்கும். அந்தச் சூழ்நிலை தானாக மாறினாலோ அல்லது அதை நம்மால் மாற்ற முடிந்து நாம் மாற்றினாலோ இந்த மனத்தின் நிலையும் மாறும்.

எதை இழந்தாலும் அதை உன் மனது ஏற்றுக் கொண்டாலோ அல்லது எதற்குமே உன் கண்கள் கண்ணீர் வடிக்கவில்லை என்றாலோ நீ பக்குவமடைந்து விட்டாய் என்று பொருள்.

யாராவது உன்னை ஒரு கேள்வி கேட்டு அதற்குப் பதில் சொல்ல உன் மனம் விரும்பவில்லை என்றால் நீ எந்தப் பதிலும் சொல்லாமல் இருக்கலாம். அவர் யாராக இருந்தாலும் சரிதான், தவறில்லை.

நம் மனம் ஒன்றைச் சொல்லும், அறிவு ஒன்றைச் சொல்லும், நம் மனமும் அறிவும் ஒன்றையே சொன்னால் அது நல்லதாகத்தான் இருக்கும். இந்த மனமும் அறிவும் சேர்ந்து ஒன்றை செய்யச் சொன்னால் அதைச் செய்யலாம். ஆனால் அறிவிற்கு உத்தரவு போடும் அதிகாரம் மனதிற்கு உண்டு.

நம் மனமும் அறிவும், நகமும் சதையும் போல். பெரும்பாலும் அறிவு சொல்வதை மனம் ஏற்றுக் கொள்ளும். சில சமயம் ஏற்றுக் கொள்ளாது. தன்னிச்சையாக தான் விரும்பியதைச் செய்ய அறிவை கட்டாயப்படுத்தும். அதுபோல் அறிவும் மனம் சொன்னபடியெல்லாம் நடந்தாலும் சில சமயம் முரண்டு பிடித்து மனதை கட்டாயப்படுத்தி தான் சொல்வதை கேட்க வைக்கும்.

மனம் ஆழ்மனம், வெளிமனம் என இருவகைப்படும். நம் வாக்கு உண்மையெனில் அது ஒன்று நம் அறிவும் மனமும் சேர்ந்து சொல்வதாக இருக்கும். அல்லது நமது ஆழ்மனம் சொல்வதாக இருக்கும். பொய் சொல் என்று நம் அறிவு சொன்னாலும் நம் ஆழ்மனம் அதை ஏற்றுக் கொள்ளாதபோது நம் வாய் பொய் சொல்லாது. அப்படியிருந்தும் நம் நாவிலிருந்து பொய் வருகிறது என்றால் அது நம் வெளி மனம் செய்யும் வேடிக்கையும் விளையாட்டுமாகத்தான் இருக்கும். அது நம் ஆழ்மனதின் வெளிப்பாடு இல்லை. இது சத்தியம்.

மனம் தன்னைத் தானே எதிலும் திருப்திப்படுத்திக் கொண்டாலொழிய என்றும் வேறு எந்த வகையிலும் ஒருவனுக்கு திருப்தி என்பது எதிலும் கிடைக்காது.

நம் மனம் பிடித்தவர், பிடிக்காதவர் இருபாலரையும் மறக்காது. நாம் ஒருவரை நேசித்தால் நம் மனம் மகிழ்வது மட்டுமல்லாது அமைதியும் அடைகிறது.

கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை, எல்லாவற்றிற்கும் கவலைப்பட்டு தீர்த்தாகிவிட்டது என்ற எண்ணம் மனதில்

உண்டானால் பிறகு மனம் எதற்கும் கவலைப்படாது. எதுவாக இருந்தாலும் மெல்ல மெல்ல நம் மனம் உண்மை நிலையை ஏற்றுக் கொள்கிறது.

மனம் ஆச்சாரத்தை கடைபிடி என்றால் கடைபிடிக்கலாம். வேண்டாம் விட்டுவிடு என்றால் விட்டுவிடலாம். அதில் தவறில்லை.

நம் மனம் நம் வாழ்க்கையில் நடந்தேறிய துக்க சம்பவங்களிலெல்லாம் இருந்து விடுதலையாகி இன்பமாக இருக்க வேண்டுமென்றால் அது சொல்வதெல்லாவற்றையும் கேட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். எஞ்சியுள்ள வாழ்நாள் அப்பொழுதுதான் இன்பமாக இருக்கும். அப்படி நடந்துகொள்வதில் தவறேதுமில்லை.

மனம் ரஞ்சிதமானது. எல்லா சுகபோகங்களையும் கொடுக்கக் கூடியது. கற்பனையிலேயே எல்லா சுகங்களையும் அனுபவிக்க வல்லது. இதை அறியாதவர் வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாதவர். மனம் மகிழ்வுடன் இருந்தால் நாமும் மகிழ்வுடன் வாழ்வோம்.

நம் மனம் எது சொன்னாலும் அது இறைவன் சொல்வது. அது சொல்வது போல் நாம் நடந்து கொள்ளலாம். அதில் தவறில்லை. இன்பம் என்பது வேறொன்றுமில்லை. அது நம் மனத்தின் பரிணாம வளர்ச்சி. ஒன்றை நம் மனம் இன்பமானது என்றால் அது இன்பமானது தான். இல்லையென்றால் இல்லை தான். இது சத்தியம்.

நம் ஆழ்மனம் உறங்காத பொழுது நமக்கு உறக்கம் வருவதில்லை.

வாழ்க்கையில் ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு சாஸ்திரம் என்பதே கிடையாது. நம் மனம் சொல்வதுதான் சாஸ்திரம்.

ஒரு மனிதனின் மனதில் இயற்கையாக ஏற்படும் அன்பிற்கு ஈடு இணை வேறு ஏதும் இல்லை. அடிப்படை ஆதாரம் ஏதாவது இருந்தாலொழிய மனத்தை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்து கொண்டிருக்க முடியாது.

நம் வாழ்வில் எந்தப் பகுதியாக இருந்தாலும் சரிதான், நம் மனம் சொல்வதுதான் இறுதித் தீர்ப்பு. அதற்கு மறுபரிசீலனை என்பதே கிடையாது. இது சத்தியம். மனநிம்மதிக்கு இணையான சுகம் வேறு எதுவுமே இல்லை. நம் வாழ்வே நம் மனத்தில் அடங்கிவிட்டது.

எதுவாக இருந்தாலும் அது இறைவனின் செயல்தான். நம் செயல் எதுவுமே இல்லை. அதில் எங்கே இருக்கிறது பாவமும் புண்ணியமும். ஆண்டவன் கணக்கில் பாவமும் கிடையாது, புண்ணியமும் கிடையாது. காரணம் இரண்டையும் செய்யத் தூண்டுவதே அவர்தான். பிறகு எங்கே இருக்கிறது பாவமும் புண்ணியமும். இரண்டுமே இறைவனால் தூண்டப்படுவது என்பதால் இரண்டுமே இல்லை. நம் மனமே கடவுள். இது சத்தியம்.

இறைவனாகப்பட்டவனின் துளிதான் நம்முள் இருக்கும் ஆன்மா. இறைவன் நம்முள் மட்டுமில்லை பிறந்து, வளர்ந்து, முதிர்ந்து, இல்லாமல் போகும் மரம், செடி, கொடி எல்லாவற்றிலும் ஆன்மா வடிவில் இருக்கிறார். நம்முள் இருக்கும் ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் தொடர்பு எப்படி, எதன்மூலம் உண்டாகிறது என்றால் நம் மனத்தின் மூலம் உண்டாகிறது. நம் ஆன்மாவும் இறைவனும் பேசிக் கொள்வதே நம் மனத்தின் மூலம் தான். எனவே, இறைவனின் விருப்பம் அறிந்து அதற்கு உத்தரவு போடும் அதிகாரத்தை இறைவன் நம் மனத்திற்கு அளித்திருக்கிறார். நம் மனம் விரும்புவது எல்லாமே இறைவன் விரும்புவதுதான்.

புராணங்கள் வெறும் கதைகளாக இருக்கலாம். ஆனால் அவை மனித குலத்திற்கு விட்டுச் சென்றுள்ள பாடங்கள் ஏராளம். அப்பாடங்கள் என்றைக்கும் பயனுள்ளவை. நாம் தான் முடிந்த அளவாவது அவைகளைப் பின்பற்ற வேண்டும். முடியுமா முடியாதா என்பதை நம் மனம் சொல்லும். எதுவாக இருந்தாலும் நம் மனம் சொல்வதே இறுதியானது.

நாம் முட்டாளாக இருக்கலாம். அதில் தவறில்லை. அது விதியின் வேலையாக இருக்கும். ஆனால் கின்னஸ் புத்தகத்தில் பதியும் அளவுக்கு முட்டாளாக இருக்கக் கூடாது. அது கண்டிப்பாக நம் மூளையின் வேலைதான்.

ஒரு பன்றிக்குட்டி யானையை விரட்டும். பன்றி கூட இல்லை, பன்றிக்குட்டி. பன்றிக்குட்டிக்கே யானையைக் கண்டால் அவ்வளவு இழப்பமாகத் தெரியும். காரணம் யானை பொதுவாக அமைதியாக இருக்கும். இந்த யானை புத்திசாலி யானையாக

இருந்தால் தன் துதிக்கையால் அந்த பன்றிக்குட்டியைப் பிடித்து தலைக்கு மேல் தூக்கி ஓங்கி தரையில் அடித்து தன் பலத்தைக் காட்டும். அந்த யானைக்குப் புத்தி சிறிது மட்டம் என்றால் அந்த பன்றிக்குட்டி அதை விரட்டும் பொழுது ஓடும். எனவே, ஓரளவிற்காவது புத்திசாலியாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

பொதுவாக எதற்கும் பொய் சொல்லக் கூடாது. எதற்காவது எப்பொழுதாவது பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் ஒன்று போல் பொய் சொல்ல வேண்டும். ஆளாளுக்கு ஒரு விதமாய் பொய் சொல்லக்கூடாது.

யாராவது உன்னை ஏமாளி என்று எண்ணிவிட்டால் ஏமாளி எப்படி இருப்பான் என்பதை மட்டும் அவருக்குக் காண்பிக்கத் தவறி விடாதே. இல்லையென்றால் நீ இந்த உலகில் நிம்மதியாக வாழ முடியாது.

உன் தொழில் தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் எதுவும் உன் மூளையில் உதித்தால் அதைச் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லும் விதத்தில் சரியான காலத்தில் சொல்ல வேண்டும். கண்ட இடத்தில் கண்டவர்களிடமெல்லாம் சொன்னாயானால் அந்த விவரங்களையெல்லாம் உன் சகாக்கள் உன்னிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டு அதைச் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி உனக்கு வரவேண்டிய பெயரையும் புகழையும் அவர்கள் தட்டிச் சென்று விடுவார்கள்.

நீ என்னதான் உன் எதிரியிடம் சமாதானமாய் போனாலும் உனக்குச் செய்ய நினைத்த கெடுதல்களை அவன் மறைமுகமாகவாவது செய்து கொண்டேதான் இருப்பான். சாணக்கியன் தனது அர்த்தசாஸ்திரத்தில் ஒரு இடத்தில் கூட எதிரியை மன்னித்து விட்டுவிடச் சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மரத்தை வெட்டக்கூடாது. கிளையையும் வெட்டக்கூடாது. கொப்புகளை வேண்டுமானால் வெட்டலாம். வேண்டாத உறவுக்காரர்களை வெட்டிவிடுவதும் அப்படித்தான். ஒட்டி இருந்தால் நம் தோப்புக்கே ஆபத்து என்றால் மரத்தையே வெட்டி விடுவதில் தவறில்லை.

பொய் சொல்லக்கூடாது, தற்காப்புக்காக பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் வாயால் சொல்லலாம். எழுத்தால் சொல்லக்கூடாது. காரணம் பொய் சொல்லி ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் நான் சொல்லவில்லையே என்று இன்னொரு பொய் சொல்லி தப்பிக்கலாம். எழுத்தால் ஒரு பொய்யைச் சொல்லி விட்டால் தப்பிக்க முடியாது.

தெரிந்தே மிகவும் ஆபத்தான செயல்களில் ஈடுபடக்கூடாது. வெற்றி கிடைத்தால் பெருங்கொண்ட லாபமும், தோல்வியில் முடிந்தால் எழுந்து நிற்கக்கூட முடியாத அளவிற்கு நட்டங்களும், இடர்பாடுகளும் ஏற்படும். இடர்களைத் தேடிச் செல்பவன் முட்டாள். தானாக வரும் இடர்களை எதிர்கொண்டு சமாளித்து செயல்பட்டு வெற்றியடைபவன் புத்திசாலியும், திறமைசாலியுமாவான்.

பிறர் யாரையும் நீ ஏமாளி, இழித்தவாயன் என்று மட்டும் நினைக்க விட்டுவிடாதே. நீயும் பிறரை அப்படி நினைக்கக் கூடாது. யாராக இருந்தாலும் சரியாகவும், விரைவிலும் எடை போட்டு மனத்தின் ஒரு ஓரத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மனத்தில் தேவையில்லாத ஆசைகள் எதுவும் உதயமானால் அந்த நொடியிலேயே அவைகளைக் கொன்றுவிட வேண்டும். இதுதான் புத்திசாலித்தனம்.

எங்கு சென்றாலும் சட்ட திட்டங்கள் பேசுவார்கள். அவர்களை வெற்றி கொள்ள வேண்டுமென்றால் அவர்களுக்குத் தெரிந்திருப்பதைவிட மேலான சட்டதிட்டங்கள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

பொறாமை குணத்தை அழுக்காறு எனும் தீ என்று வள்ளுவர் குறள் ஒன்றில் சொல்கிறார். பொறாமை தீயைப் போன்றது. அது எல்லாவற்றையும் அழித்து விடும். ஆக ஒருவனுக்கு எத்தனை நற்குணங்கள் இருந்தாலும் பொறாமை என்ற ஒரு தீயகுணம் இருந்தாலே பிற எல்லா நற்குணங்களையும் அழித்து விடுகிறது. அவன் இந்த உலகுக்கு பயனற்றவன். எனவே அவன் நாடத் தக்கவன் இல்லை. அவனை நாடாதிருப்பது அறிவுடைமை.

வெறுமனே பொறாமைப் படுகிறவனை மன்னித்துவிடலாம். உன்மீது பொறாமைப்பட்டு கெடுதல் செய்கிறவனை எக்காரணம் கொண்டும் மன்னிக்கக்கூடாது. வெறுமனே பொறாமைப் படுகிறவன் மீதும் எப்பொழுதும் ஒரு கண் வைத்துக்

கொண்டுதான் இருக்க வேண்டும். காரணம் என்றைக்காவது உனக்குக் கெடுதல் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால் அவனும் உனக்குக் கெடுதல் செய்ய தயங்கமாட்டான். ஒருவன் பொறாமைக்காரன், துரோகி என்று உறுதி செய்தபின் எக்காரணம் கொண்டும் அவனை அருகில் நெருங்கவிடக் கூடாது. பிறர் யாராக இருந்தாலும் உன்னிடத்தில் உண்மையுடன் இல்லையென்றால் நீ அவரிடத்தில் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டிய தேவையில்லை.

அடுத்தவர் செய்யும் தப்பை மன்னித்துக் கொண்டே போவதில் அர்த்தமில்லை. ஒரு காலகட்டத்தில் அவரை மன்னிக்காது உன்னிடமிருந்து விரட்டி விடுவதுதான் நல்லது. அப்பொழுது அவன் உனது எதிரி ஆவான். பாதகமில்லை, ஏற்றுக்கொள்.

சரியில்லா ஒரு நபருக்கு எந்த உரிமையிலும் பங்கு கொடுக்காதே. உனக்கு பணச்செலவு ஆனாலும் தயங்காது அதை ஏற்றுக்கொண்டு முழு உரிமையையும் நீயே தக்க வைத்துக்கொள்.

தர்மத்தில் அக்கிரம தர்மம் என்ற ஒன்று உண்டு. சில நேரங்களில் எதிரியை வெல்ல நாம் இதைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலையில் இருப்போம். அது போன்ற நிலைகளில் இதை நாம் தாராளமாகக் கடைபிடிக்கலாம். அதில் தவறில்லை.

சடங்கு என்ற பெயரில் பணமிருப்பவன் ஒன்றைச் செய்யலாம். பணமில்லாதவனும் அதைச் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பிறர் பொறாமைப்படும் அளவிற்கு வியக்கும் அளவிற்கு ஆடம்பரமாக வாழ்கிறவன் முட்டாள்.

ஒரு முட்டாளுக்கு எவ்வளவு புத்திமதி சொன்னாலும் மூளையில் ஏறாது. எனவே, ஒருவன் முட்டாள் என்று உறுதியாகத் தெரிந்தபின் அவனுக்கு புத்திமதி சொல்வதை நிறுத்திவிட வேண்டும். இல்லையென்றால் நாம்தான் முட்டாள்.

வெறி நாயைப் போல் எரிந்து விழுந்துதான் ஒரு மனிதரை சரிப்படுத்த முடியும் என்றால் அதற்கு தயங்கக் கூடாது. தவிர்க்கப் பார்க்கலாம். முடியாவிட்டால் செயல்படுத்த வேண்டியதுதான். காரணம், அந்த மனிதனை அப்படித்தான் சரிப்படுத்தமுடியும்.

விதி அதன் வேலையை செவ்வனே செய்யும். நாம் நமது வேலையை செவ்வனே செய்ய வேண்டும். பெரும் வெற்றி கிடைக்காவிட்டாலும் பாதுகாப்புடன் வாழ்ந்து தோல்வியைத் தழுவாமல் இருப்பதே சிறந்தது. அதுவே வெற்றி தான். விதி உதவாவிட்டால் போய்விட்டுப் போகிறது. நம் வாழ்க்கையை நாமே நாறடித்துக் கொள்ளக் கூடாது. அதுதான் அறிவுடைமை.

நம்மை யாரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடாது. பிறரால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நாம் குழப்ப வாதிகளாகத்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் பிறர் நம்மை எளிதில் ஏமாற்றி விடுவார்கள்.

வாழ்க்கைப் பாடங்களை நாம் நமது வாழ்க்கை அனுபவத்திலிருந்து மட்டுமல்லாமல் பிறரது வாழ்க்கை அனுபவத்திலிருந்தும் கூட கற்றுக் கொள்ள வேண்டும். காரணம் நம்மால் எல்லா அனுபவங்களையும் பெற்றிருக்க முடியாது.

நாம் ஏதாவது ஒரு காரிய நிமித்தமாக யாரையாவது அணுக வேண்டியதிருந்தால் அந்த நபரிடம் அவருக்குப் பிடிக்காத நபர் நமக்கு வேண்டப்பட்டவராக இருந்தால் மறந்தும் அவருக்குப் பிடிக்காத நமக்கு வேண்டப்பட்ட நபரைப் பற்றி பேசி விடக்கூடாது. அப்படிச் செய்தால் நாம் என்ன காரியத்திற்காக அந்த நபரிடம் சென்றோமோ அந்த காரியம் வெற்றியடையாது போக வாய்ப்பிருக்கிறது.

நமக்கு யாராவது பெரிய மனிதரைத் தெரியும் என்றால் அதை இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் நமக்கு வேண்டாதவர்கள்கூட நமக்குத் தெரியாமல் அவர்களுக்கு ஏதாவது அந்தப் பெரிய மனிதர் மூலம் பலன் கிடைக்க வேண்டுமென்றால் நம் பெயரைப் பயன்படுத்திக் கொள்வர். அதனால் எப்பொழுதாவது அந்தப் பெரிய மனிதர் மூலம் நமக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமென்றால் அது முடியாமல் கூட போகலாம்.

தற்காப்பு என்று வரும்பொழுது மதியை ஒரு மிகச்சிறந்த போர் வீரனைப் போல் எப்பொழுதும் எச்சரிக்கையுடன் வைத்திருக்க வேண்டும். விதிக்கு சிறிது கூட இடம் கொடுக்கக் கூடாது. இல்லையென்றால் விதி விளையாடி விடும். விதி விளையாடினால் பாதிப்பு அதிகமாக இருக்கும்.

சிலர் இருக்கிறார்கள், அவர்களிடம் நாம் கோணலாக நடந்துகொண்டால்தான் அவர்கள் நம்மிடம் நேராக நடந்து கொள்வார்கள். அப்படிப்பட்ட நபர்களிடம் நாம் கோணலாக நடந்து கொள்வதில் தவறில்லை. அவர்களிடம் நாம் கோணலாக நடந்து கொண்டால் அவர்கள் நேர்வழியில் செல்வர் என்பதால் அது தவறில்லை.

உன் மனதில் உள்ள எல்லாவற்றையும் பிறரிடம் நீ சொன்னாயானால் நீ ஒரு முட்டாள். நாம் மிகவும் இரகசியமானவர்களாகத்தான் இருக்க வேண்டும். பிறருக்கு நம்மைப் பற்றிய விவரங்கள் எதுவும் நாம் சொல்லக்கூடாது. குறிப்பாக நமது பலவீனங்கள் பற்றி சொல்லவே கூடாது. காரணம், நமது பலத்தை அறிந்து கொண்டாலும் பலவீனத்தை அறிந்து கொண்டாலும் பிறர் அதை அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத்தான் முயல்வர்.

பெரும்பாலான வழக்குகளில் குற்றவாளிகள்தான் நிரபராதிகளை குறை சொல்கிறார்கள். அதாவது, செய்வதும் செய்துவிட்டு பாதிக்கப்பட்டவனை குறையும் சொல்கிறார்கள். அப்படிப் பட்ட நிலையில் குற்றவாளிகளின் குரல்வளையைப் பிடித்தாலொழிய அவர்கள் வழிக்கு வருவதில்லை.

உண்மை இல்லையென்றால் உறவுக்காரன் கூட உலகத்தில் வாழும் எத்தனையோ மனிதர்களில் ஒருவன் தான். உறவென்று சொல்லிக்கொண்டு ஒட்ட விடாதே.

யார் உனக்கு என்ன துரோகம் செய்தாலும் அதை மனதில் வைத்துக் கொள்ளாதே. ஆனால், பொறுமையாக இருந்து தக்க தருணத்தில் அவர்கள் செய்த துரோகத்தை அவர்களுக்கு உணர்த்தாமல் மட்டும் விட்டுவிடாதே. எல்லாரும் நன்றாக இருக்க வேண்டும். அதுதான் மனிதப் பண்பு.

உனக்கு வேண்டுமானால் இமயமலை உச்சியில் வீடுகட்ட வேண்டும் என்று ஆசை இருக்கலாம். இமய மலை அதற்கு

இடம்கொடுத்தால்தானே அது முடியும். இல்லையென்றால் முடியாது. எனவே, ஆசைப்படுவது உன் நிலை அறிந்து ஆசைப்படு. வாழ்க்கையை பாதுகாப்பாக நடத்திவிட வேண்டும். எதற்காவது வீணாக ஆசைப்பட்டு சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது.

நம் வாழ்க்கையில் என்ன கிடைக்க வேண்டுமோ அது நமக்குக் கிடைக்கும். எப்பொழுது கிடைக்க வேண்டுமோ அப்பொழுது கிடைக்கும். சிறிதுகூட அதிகமாகவோ குறைவாகவோ கிடைக்காது. நொடிப்பொழுது கூட முன்பாகவோ தாமதமாகவோ கிடைக்காது. நமது பொறுப்பு நமது முயற்சியும் உழைப்பும்தான். அதுவே நமது மூலதனம். கிடைப்பது லாபம் அல்லது நட்டம். லாபத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள். நட்டத்தை பொறுமையுடன் பொறுத்துக் கொள்.

நமது தனித்தன்மையை நாமே அழித்துக் கொண்டால் பிறர் யாரும் அதை காப்பாற்றப் போவதில்லை.

மனிதத் தன்மையுடன் இருப்பவரை ஏமாளி என்று நினைப்பவர்கள் முட்டாள்கள். அறிவுள்ளோர் அப்படி எண்ண மாட்டார்கள்.

நீ எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் ஒரு உண்மையை எப்பொழுது புரிந்து கொள்ள வேண்டுமோ அப்பொழுதுதான் அது புரிய வரும்.

உனக்கு ஏதாவது பிரச்சினை என்றால் அது பன்றியின் விட்டை நாறும் அளவு நாற்றமெடுக்கும் வரை வாழாவிருக்கக்கூடாது. ஆரம்பத்திலேயே உரிய பெரியவர்களிடம் பிரச்சினையைச் சொல்லி தீர்வு காண வேண்டும். இல்லையென்றால் பெரியவர்களால் கூட தீர்வு காண முடியாத அளவுக்கு பிரச்சினைகள் வளர்ச்சியடைந்து விடும்.

உனக்கு சதி செய்கிறவன் உன்னிடம் சொல்லிக் கொண்டு செய்யமாட்டான். உன் வீட்டில் தகதகவென்று எரியும் பொழுதுதான் உனக்கே தெரியவரும். அப்பொழுது கேட்டால், எனக்கெல்லாம் ஒன்றும் தெரியாதே என்று மிகவும் பணிவோடு பதில் சொல்லிவிடுவான். அவனை எதுவும் செய்ய உன்னால் முடியாது. அவன் மூட்டிய தீயிலிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்வதே பெரும்பாடாகி விடும். எனவே, உனக்குச் சதி செய்கிறவர் யாராக இருந்தாலும் உன்கிட்டே அண்டவிடக் கூடாது. அவனை உன் எதிரி என்று எல்லோருக்கும் நாகரீகமாக வெளிப்படுத்திவிடு.

தம் பிள்ளைகள் சராசரியானவர்களாக இருக்கும் பொழுது அவர்கள் உச்சிவானில் விண்மீன்களைப் போல் மின்ன வேண்டும் என்று எண்ணுவது தவறு. ஒருவேளை இறைவன் உயர்த்தினால் அதற்காக மகிழ்ச்சி அடையலாம்.

வாழ்க்கையில் சில சமயங்களில் நாம் நூற்றுக்குநூறு சுயநலவாதியாக இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் நாம் நூற்றுக்குநூறு சுயநலவாதியாக இருந்துதான் ஆக வேண்டும். இல்லையென்றால் நாம் முட்டாளாகிவிடவும் கூடும்.

அறிவுள்ளவன் எவனும் தன்னைப் பற்றி உயர்வாகவோ அல்லது தாழ்வாகவோ மதிப்பிட மாட்டான். தனது வலிமை, பலவீனம் இரண்டையும் எடைபோட்டு சரியான கணிப்பை மனத்தில் தக்க வைத்துக் கொண்டு அதற்கேற்றாற்போல் செயல்படுவான்.

மூடத்தனமாக எதிலும் நண்டுப்பிடியாக இருந்தால் ஆபத்து தான் மிஞ்சும். விருச்சிகம் (தேள்) தப்பிக்கும். கடகத்தால் (நண்டு) தப்பிக்க முடியாது.

உத்தமனைத் தேடி அலையாதே. அயோக்கியனாக இருந்தாலும் நல்ல வேலைக்காரனாக இருந்தால் அவனை வைத்து கூடுமானவரை நல்லமுறையில் சிக்கனமாக செய்ய வேண்டிய வேலையை செய்து முடி.

ஒரு முட்டாளை ஒரு அறிவாளி காப்பாற்றினால் ஒரு கொழுப்பெடுத்தவனை இறைவன் காப்பாற்றலாம். ஒரு கொழுப்பெடுத்த முட்டாளை யார் காப்பாற்றுவார்? யாராலும் முடியாது. இறைவன் கூட யோசிப்பார். எனவே கொழுப்பெடுத்த முட்டாளாக இருக்காதே.

நம்மிடம் உண்மையில்லாது நடந்து கொள்பவர்களிடம் நாமும் உண்மையில்லாது நடந்து கொள்ளலாம். அதில் தவறில்லை. அது தற்காப்பு நடவடிக்கை.

ஒரு முட்டாளை துணைக்கு அழைத்துக் கொண்டு எங்கும் செல்லக் கூடாது. காரணம், அந்த முட்டாளால் நமக்கு

ஆபத்தோ, பொருள் நட்டமோ ஏற்படலாம். அவனையும் காப்பாற்றும் நிலை நமக்கு ஏற்படும்.

நமக்கு பல விவரங்களும் தெரியாது போனால் இந்த உலகம் நம்மை வெகு எளிதாக ஏமாற்றி விடும். நாம் அறியாமையின் சின்னமாக இருக்கக் கூடாது.

எதிரியே இல்லாத மனிதன் கிடையாது. நம்முடைய எதிரிகளிலேயே மிக மிக மோசமான எதிரி நம்மீது பொறாமைப் படுகிறவன்தான். எக்காரணம் கொண்டும் அவனிடம் நெருக்கம் கூடாது. பெரும்பாலும் அவன்தான் நமது மறைமுக எதிரியாகவும் இருப்பான். நேரிடையான எதிரியை விட மறைமுகமான எதிரி மிகவும் ஆபத்தானவன். அவனை வெளிக் கொணர்வதுதான் புத்திசாலித்தனம்.

விட்டுக் கொடுக்கும் உறவு நல்லதுதான் அதற்காக எல்லாவற்றிலும் விட்டுக் கொடுப்பது அறிவீனம்.

பிறர் யாராக இருந்தாலும் அவர்க்கு உரிய மதிப்பு மரியாதையை நாம் கொடுத்தாக வேண்டும். ஆனால், அவர்க்கு நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை. எந்தச் சூழ்நிலையிலும் பயப்படுவது போல நடிப்பது கூட தவறுதான்.

நாம் சிங்கமாக இருக்கலாம். ஆனால் நம்மைச் சுற்றி குள்ளநரிகள் இருக்கும்பொழுது நாம் எச்சரிக்கையுடன் இருக்கத்தான் வேண்டும்.

கோழிமுட்டைக்குள் யானைக்குட்டி இருக்கிறது என்பார்கள் சமர்த்தர்கள். அவர்களுக்கு சப்பைக் கட்டு கட்டுகிறவர்கள், ஆமாம் யானைக்குட்டியுடன், குதிரைக்குட்டியும் இருக்கிறது என்பார்கள். அதையும் ஒரு விஞ்ஞானியிடம் சொல்வார்கள். அதுவும் அதைக் கேட்பவர் ஒரு விஞ்ஞானி என்பதைத் தெரிந்து கொண்டே செல்வார்கள். அதுதான் உலகம். அவர்களை மடக்க இந்த விஞ்ஞானி எதுவுமே செய்ய வேண்டியதில்லை. அவர்களை உற்றுநோக்கி ஒரு ஏளனப் புன்னகையுடன் அமைதியாக நீங்கள் அந்த முட்டையை அடைகாத்தீர்களாக்கும்? என்று ஒரு கேள்வியைக் கேட்டாலே போதும். அடங்கி விடுவார்கள்.

யாரையுமே உன்னை ஏமாளி என்றோ, முட்டாள் என்றோ நினைக்க விட்டுவிடாதே. ஏமாளி எப்படி இருப்பான், முட்டாள் எப்படி இருப்பான் என்பதை காண்பித்து விடு. அதாவது அவர்களின் எண்ணம் தவறு என்பதை அவர்களுக்கு உணர்த்தி விடு. இது ஆணவம் இல்லை. உண்மை நிலையை நிலைப்படுத்துதலே ஆகும்.

எதற்குமே நம்மீது பொறாமைப் படாதவர் பெரும்பாலும் இருவர் தான் இருக்க முடியும். அவர் நம் தாய் தந்தையர். உற்ற நண்பன் கூட எப்பொழுதாவது எதற்காவது நம்மீது பொறாமைப்படலாம். அவனிடம் நம்மீது அன்பு இருக்கும் என்பதால் அவன் கெடுதல் செய்ய மாட்டான். பிறர் யாராக இருந்தாலும் அவர் நமக்கு கெடுதல் செய்வர்.

நாம் எதிலும் நேர்மையுடன்தான் செயல்பட வேண்டும். ஆனால் அடுத்தவர் ஏமாளி என்ற எண்ணத்தில் நம் நெற்றியில் நாமம் போட முயன்றால் அதை அனுமதிக்கக் கூடாது.

நாம் எப்பொழுதாவது எதற்காவது முட்டாளாக இருந்திருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் எப்பொழுதுமே எதற்காவது முட்டாளாக இருப்பது தான் தவறு.

சண்டை என்று வந்தால் பிறர் நம்மை குறை சொல்லும் நிலையில் நாம் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் சிரமமின்றி நம்மால் பிறரை வெல்ல முடியும்.

நம்மிடம் சமர்த்தாக பேசுகிறவர்களிடம் நாம் பத்து மடங்கு சமர்த்தாகப் பேச வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அடங்குவார்கள்.

எப்பொழுதோ செய்ய வேண்டிய ஏதாவது ஒன்றை செய்ய மறக்கலாம். அதில் தவறில்லை. காரணம் மறதி மனித இயல்பு. ஆனால் எப்பொழுதுமே மறந்து விட்டு அடுத்தவர் அதை சுட்டிக் காட்ட விட்டுவிடக்கூடாது. அப்படி விட்டுவிட்டால் உனக்கு அறிவோ, பொறுப்போ இல்லை என்றுதான் பொருள்.

எதை வெளியில் சொன்னால் கேவலம் என்று உன் மனம் நினைக்கிறதோ அதை வெளியில் சொல்லாதே.

ஒருவன் உன்னிடம் தெரிந்து எவ்வளவு சாப்பிடுகிறான், தெரியாமல் எவ்வளவு சாப்பிடுகிறான் என்பதை நீ தெரிந்து

வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் எப்பொழுதாவது அவனை மடக்க வேண்டிய கட்டாயம் உனக்கு ஏற்பட்டால் அவனை நீ எளிதாக மடக்க முடியும்.

நாம் எப்பொழுதுமே இளித்தவாயனாக இருக்க வேண்டும் என்றுதான் பிறர் விரும்புவர். நாமும் அதைத் தெரிந்து கொண்டு நாம் இளித்தவாயனாக இருப்பது போல் நடித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஏமாறக் கூடாது.

பிறர் உன்னுடன் உறவாடும்பொழுது ஏதாவது இரகசிய திட்டம் அவர்களது மனதில் வைத்திருப்பார்கள். அது போல் நீயும் இருப்பதில் தவறில்லை.

நான் முட்டாளாகவேதான் இருப்பேன், இது சத்தியம் என்ற நிலையில் நாம் இருக்கக்கூடாது. நம் முட்டாள்தனம் தெரியவரும் பொழுது திருத்திக் கொள்ள வேண்டும்.

பிறர் உன் உறவுக்காரராக இல்லாது இருந்து அவர் உன்னிடம் தாறுமாறாக தொடர்ந்து நடந்து கொண்டால் அதை முதலில் உறுதிப்படுத்திக் கொள். உன்னைப் பொறுத்தவரையில் இம்மியும் தவறாக நடந்து கொள்ளாதே. அவரது நடத்தையை முதலில் மறைமுகமாக அமைதியாக சுட்டிக்காட்டு. தொடர்ந்து அப்படியே நடந்து கொண்டால் அடுத்து நேரிடையாகவே சுட்டிக்காட்டு. பிறகும் அவர் மாறாது இருந்தால் அவர் உன்னை விட நிலையில் உயர்ந்த இடத்தில் இருந்தால் நீ அமைதியாக விலகிச் சென்று விடு. அப்படி விலகிச் செல்ல முடியாத நிலையில் அவர் உன்னை விட்டு விலகிச் செல்ல இறைவனிடம் வேண்டிக்கொள். உன் நிலைக்கு சமமானவராகவோ

கீழானவராகவோ இருந்தால் சரியான பாடம் புகட்டாமல் மட்டும் விட்டு விடாதே. அவர் உறவுக்காரராக இருக்கும் நிலையில் அவரது உறவை முறித்துக்கொள்ள தயங்காதே. சக மனிதர்களை உருப்படியாக மேய்ப்பதே வாழ்க்கை.

விதியின் போக்கை அனுசரித்து தன்னுடைய ஆசைகளை தியாகம் செய்கிறவன் புத்திசாலி.

பெரும்பாலும் நமக்கு அக்கம் பக்கத்தில் இருப்பவன்தான் நம்மீது பொறாமை கொண்டு நமக்கு கெடுதல் செய்து கொண்டிருப்பான்.

கிடைக்கப் போவதை நம்பி கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை நழுவ விடுபவன் புத்திசாலி இல்லை.

கொடூர சிந்தனை உள்ளவனை அவனைவிடக் கொடூரமாக இருந்துதான் திருத்த முடியும். எப்படிப்பட்ட காளிப் பயலாக இருந்தாலும் அவன் மனத்தில் பயத்தை உண்டு பண்ணினால் அவனை அடக்கி விட முடியும்.

வாழ்க்கை பெரும்பாலும் நடிப்புதான். அது மனிதர்களுக்கு இடையில் நடக்கும் நாடகம். ஆனால் எல்லாரிடமும் நடித்துவிடக்கூடாது. மறந்தும் உன்னிடம் நடிக்காதவரிடம் நீ நடித்துவிடக்கூடாது. எப்படி பணம் மனிதர்களுக்கிடையிலுள்ள அன்பை முறிக்குமோ அதுபோல் அது மனிதர்களுக்கிடையில் உள்ள உறவை முறித்துவிடும்.

ஒரு நபரை எந்த வகையிலும் திருத்த முடியாது என்று சந்தேகத்திற்கு இடமில்லாது தெரிய வந்தால் அதன்பின் அந்த நபரை திருத்த முயற்சிக்காதே. இல்லையா, நீதான் முட்டாள்.

முட்டாளை எப்படியாவது சற்றேனும் புத்திசாலியாக ஆக்கிவிடலாம். ஆனால் கொழுப்பெடுத்த முட்டாளை எந்த வகையிலும் புத்திசாலி ஆக்க முடியாது.

மிக நீண்ட கால நண்பர் ஒருவர் பின்னாளில் எதற்காவது உன்னை மதிக்கவில்லையென்றால் அவரது நட்புத்தன்மை கேள்விக்குறியானது என்றாலும் கூட அதைக் கண்டும் காணாமல் விட்டுவிட வேண்டும்.

இப்பொழுது உள்ள உலகத்தில் பிறரை மதிக்கவில்லை என்றால்தான் நமக்கு மதிப்பே கிடைக்கிறது. அதற்காக நாம் பிறரை மதிக்காமல் இருக்கக்கூடாது. முதலில் மதிக்க வேண்டும். அந்தத் தன்மைக்கு மதிப்புக் கிடைக்கவில்லையென்றால் அவர்களை நம்மை மதிக்க வைக்க வேண்டும்.

ஒருவன் உன்னிடம் ஒரு பொய் சொன்னால் அது பொய் என்று நீ உடனே கண்டுபிடித்து விட வேண்டும். நீ ஆயிரம் பொய் அவனிடம் சொன்னாலும் கூட ஒன்றைக்கூட அது பொய் என்று அவனால் கண்டுபிடிக்க முடியாதபடி இருக்க வேண்டும். அந்த அளவிற்கு நீ புத்திசாலியாக இருக்க வேண்டும்.

உனக்குப் பிடிக்காத ஒருவரை எடுத்த எடுப்பில் தூக்கி எறிந்து விடக்கூடாது. அவர் இனிமேல் வேண்டவே வேண்டாம் என்றால் தான் அப்படிச் செய்ய வேண்டும்.

தன்னையும் கடவுளையும் மட்டும் நம்புகிறவன் புத்திசாலி. கடவுள் நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், எடைபோடாது பிறரை நம்புகிறவன் முட்டாள்.

மனிதர்கள் நமக்கு தொண்ணூறு வயது ஆகியிருந்தாலும் நமக்கு எதுவுமே தெரியாது என்று எண்ணிக்கொண்டு நம்மிடம் எதையாவது சொல்வார்கள். நாம் அவர்கள் எதைப்பற்றிச் சொன்னார்களோ அதன் சரித்திரத்தையே சொன்னால் பிறகு வாயைத் திறக்கவே மாட்டார்கள். இதுதான் உலகம். அந்த அளவிற்கு நாம் அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாம் சாதாரணமாக எப்படி இருக்க வேண்டும் என்றால், நம் முக பாவத்தை வைத்தோ, குரலின் தொனியை வைத்தோ, உடல் அசைவுகளை வைத்தோ, பிறர் யாரும் எதையுமே புரிந்து கொள்ள முடியாதபடி இருக்க வேண்டும். நாம் பிறருக்கு புரியாத புதிராகத்தான் இருக்க வேண்டும். அது புத்திசாலித்தனம், அதில் தவறில்லை.

பிறர் அவர்கள் சொல்லும் பொய்யை நாம் நம்ப வேண்டும் என்று விரும்புவார்கள். நாமும் அதை நம்புவது போல் நடித்து நாம் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

முகக் கண்ணாடி முன் நின்று கொண்டு நாம் புன்னகைத்தால் அதில் தெரியும் பிம்பமும் புன்னகைக்கும். நாம் முறைத்தால்

அதுவும் முறைக்கும். பெரும்பாலான மனிதர்களும் அப்படித்தான். சிலர் நாம் புன்னகைத்தாலும் முறைப்பார்கள். நாம் அவர்களுக்கு மேல் ஒரு படி அதிகமாக முறைத்தால் தான் அவர்களை சரி செய்ய முடியும். இல்லையென்றால் முடியாது. எனவே பொதுவாக முறைப்பவர்களிடம் புன்னகைப்பவன் மூடன்.

வாழ்க்கையில் மகிழ்வுடன் இருப்பதற்காகத்தான் மனிதன் செல்வம் சேர்க்கிறான். ஆனால் அது இல்லாமலே கூட அவனால் மகிழ்வாக இருக்க முடியும். எப்படி என்று அவனவன் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

கோணலான கம்பி மெல்லியதாக இருந்தால் கையால் நிமிர்த்த முடியும். சற்று தடியதாக இருந்தால் சுத்தியில் அடித்து நிமிர்த்த முடியும். இன்னும் தடிமமாக கடப்பாரை கனத்திற்கு இருந்தால் நெருப்பில் பழுக்கக் காயவைத்து சம்மட்டியால் அடித்து நிமிர்த்த முடியும். அப்படியில்லாது அந்தக் கம்பி மெல்லியதாக இருந்தாலும் கூட சுருள் சுருளாக இருந்தால் அதை எந்த முறையிலும் நிமிர்த்த முடியாது. அதை உருக்கி நம் விருப்பப்படி மீண்டும் நேர் செய்து கொண்டால்தான் உண்டு. மனிதர்களும் அப்படித்தான். அவர்கள் சுருள் கம்பியைப் போன்ற குணமுள்ளவர்களாக இருந்தால் உருக்கி உன் விருப்பப்படி மாற்றும் வீண் வேலையைச் செய்யாதே. அவர்களை உன் வாழ்க்கையிலிருந்தே தூக்கி எறிந்து விடு.

மனிதர்களோடு பழகத் தெரியாதவன் வீட்டை விட்டு வெளியேறத் தகுதியல்லாதவன். சுக வாழ்க்கையின் இரகசியம்

நம் வாயில் அடங்கி விட்டது. நமது புத்திசாலித்ததனம் வெளிப்படுவது நமது வாயில் தான்.

உறவை விடவும் கூடாது, இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்ளவும் கூடாது. உறவுகளிடமிருந்து ஒதுங்கும் காலம் வரும்பொழுது, உறவுகளை ஒதுக்கும் காலம் வரும்பொழுது உறவுகளிடமிருந்து ஒதுங்கவோ உறவுகளை ஒதுக்கவோ தயங்கக்கூடாது. இந்த விசயத்தில் மனதை மதி மேலாண்மை செய்ய வேண்டும்.

நமக்கு நல்லவன் என்ற பட்டத்துடன் ஏமாளி என்ற பட்டமும் கிடைத்தால் நாம் முட்டாள் என்று பொருள். நல்லவன் ஏமாளி இல்லை என்ற பட்டம் கிடைத்தால்தான் நாம் புத்திசாலி என்று பொருள்.

பிறர் மனம் வேதனையடையும் என்பதற்காக நாம் காலமெல்லாம் மன வேதனை அடைந்து கொண்டிருக்க முடியாது. அப்படி இருப்பது மடமை. அந்த பிறர் யாராக இருந்தாலும் நம்மிடமிருந்து அவர்களைக் களைந்தெறிய நாம் சிறிதும் தயங்கக் கூடாது. முற்றிலும் சுயநலமாக இல்லாது பொதுநலமும் இதில் கலந்திருப்பது உத்தமம்.

மனிதனின் மூளை கோணல் கோணலாக வேலை செய்யும். அதற்கு மனமும் துணை போகும். அதனால் அவதிப்படுவான். இறுதியில் விதியின் மீது, இறைவனின் மீது பழியைப் போடுவான். அது உண்மைதான். ஆனால், அவன் அவதிப்படுவதற்கு அவனது மூளையும் காரணம் என்பதை உணர மாட்டான்.

வயது எத்தனையாக இருந்தாலும் சரிதான். ஒருவன் தனது குடும்பக் கடமைகளையெல்லாம் முடித்துவிட்ட பின்பு இறைவனை வணங்கும் பொழுது, “இறைவா உன் கருணையால் நான் என் குடும்பக் கடமைகள் எல்லாவற்றையும் முடித்துவிட்டேன். உனக்கு நன்றி. நீ என்னை உன்னிடத்தில் அழைத்துக் கொள்ளும்பொழுது தெரிந்தோ, தெரியாமலோ நானும் எனது முன்னோர்களும் ஏதாவது பாவங்கள் செய்திருந்தால் அவைகளை மன்னித்து என்னைக் கருணை கூர்ந்து நொடிப்பொழுதில் உன்னிடத்தில் அழைத்துக் கொள், நீ குடியிருக்கும் என் உடலை நானே சுத்தம் செய்து கவனித்துக் கொள்ளும் நிலையில் நான் இருக்கும் பொழுதே” என்ற இதைத் தவிர வேறு எதுவும் கேட்கக் கூடாது. அதற்கு மேல் எது கேட்டாலும் அவன் உலகமகா முட்டாள். சத்தியம்.

நாம் புத்திசாலித்தனமாக இருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டு அதிகப் பிரசங்கித்தனமாக இருக்கக் கூடாது.

நம் வாழ்க்கையில் நடப்பது எல்லாமே இறைவனின் விருப்பம்தான். புத்திக்கு அங்கு எந்தப் பங்கும் இல்லை. தனக்குப் பங்குண்டு என்று புத்தி நினைத்தால் அது அதன் அறிவீனம். புத்தி இல்லாதவன் தான் புத்தியைப் பற்றி பேசுவான். புத்தியுள்ளவன் புத்தியைப் பற்றிப் பேச மாட்டான். காரணம் என்ன தெரியுமா? இந்த புத்தி நம் உடம்பிற்குக் கூட அடிமை. அதனால் எதுவுமே செய்ய முடியாது. இது சத்தியம்.

நாம் பிறந்தது முதல் இறைவனடி சேரும் வரை யார் யார் எல்லாம் நம் வாழ்க்கையில் குறுக்கிடுகிறார்கள். இதெல்லாம்

இறைவனின் ஏற்பாடு. நம் புத்திக்கு அங்கு வேலை இல்லை. புத்தி என்று ஒன்று இருக்கிறது என்றால் அது மாயை.

இறைவன் சொர்க்கம், நரகம் இரண்டையுமே இந்த உலகத்தில் தான் வைத்திருக்கிறார். நாம் சொர்க்கம் என்று நினைத்தால் சொர்க்கம், நரகம் என்று நினைத்தால் நரகம், அவ்வளவு தான். எல்லாம் நம் மனத்தின் பரிணாமத்தில் அடங்கி விட்டது. இதில் புத்திசாலி என்றோ முட்டாள் என்றோ யாருமே கிடையாது. இறைவனுக்கு முன் நாம் எல்லாம் காற்றில் பறக்கும் தூசி. முதலில் நாம் என்ற அகந்தை அழிந்தாலே நமக்கு விமோச்சனம் உண்டு. இது சத்தியம்.

அறிந்தவர் யாராவது நம்மிடம் வருவர். நம்மைப் பற்றிய கேள்வி ஏதாவது கேட்பர். நாம் அதற்குப் பதில் சொல்வோம். நாம் பதில் சொல்லி முடித்த நிமிடமே நம் பதிலிலிருந்தே இன்னொரு கேள்வியைக் கேட்பார்கள். அதற்கும் பதில் சொல்வோம். அடுத்த நொடியே வேறொரு கேள்வி கேட்பார்கள். இப்படியே இந்த கேள்வி பதில் படலம் கால் மணி நேரமோ அரைமணி நேரமோ தொடரும். அடுத்து கேள்வி கேட்க ஒன்றுமில்லை என்ற நிலை அவர்களுக்கு வந்து, நாம் ஏதாவது அவர்களை கேள்வி கேட்க முயன்றால், சற்றும் தாமதியாமல் ஏதாவது காரணத்தைச் சொல்லி நம்மிடமிருந்து நகர்ந்து விடுவர். நம்மைப்பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டு அவர்களைப் பற்றி எதுவுமே சொல்லாமல் சென்று விடுவர். அவர்கள் புத்திசாலிகள், நாம் முட்டாள்கள்.

# 4. குடும்பம், பணம்

'உறவுச் சுமை' என்று ஒன்று இருந்தால் தொப்பென்று கீழே போடாமல் மெல்ல இறக்கி வைத்துவிட்டு நம் வழியில் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு மனிதனுக்கு அறுபது வயதிற்கு மேல் குடும்ப பாரம் இருக்கக்கூடாது. அந்த வயதிற்கு மேல் பிள்ளைகள் குடும்பத்தை சுமக்கத் தயாராகிவிட வேண்டும். அறுபது வயதிற்கு மேற்பட்ட மனிதனுக்கு இறைவழிபாடும், குடும்பம், சொந்தபந்தம், நண்பர்கள், அறிந்தவர், தெரிந்தவர் முடிந்தால் அறியாதவர்களுக்குக் கூட ஏதாவது ஒருவகையில் வழிகாட்டியாக இருக்கும் வேலைகள் இருக்க வேண்டும்.

பெண்ணாகப் பட்டவளுக்கு அறிவு, அடக்கம், ஒழுக்கம், அன்பு, வீரம் இது அனைத்தும் வேண்டும். ஒவ்வொன்றும் சூழ்நிலைக்குத் தக்கபடி அவளுக்கு உதவும். அவள் கடமைகளைச் செய்யத் தேவைப்படும். ஆனால், எல்லாம் இருந்தும் இந்த அடக்கம் மட்டும் இல்லையென்றால் அவள் பெண்ணில்லை.

தன் பிள்ளைகளுக்காக நாம் தியாகம் செய்யலாம், தவறில்லை. ஆனால் அதற்குப் பலன் இருக்க வேண்டும். அந்தப் பலனும் கூட நமக்காக இல்லை, பிள்ளைகளுக்காகத்தான்.

பிறரிடத்தில், பிறர்முன், தன் கணவனை தன் கணவன் குடும்பத்தாரை ஏளனமாகப் பேசும், ஏளனமாக நடத்தும் மனைவி நல்ல மனைவி இல்லை. மதிப்பவள் போல் நாடகமாடுபவளும் நல்லவள் இல்லை.

விதிக்கு அப்பாற்பட்டு ஒருவனின் முன்னேற்றம் திருமணத்திற்கு முன்பு தாயின் கையிலும், அதற்குப் பின்பு தாரத்தின் கையிலும் இருக்கிறது. இறுதிவரை கணவனைப் புரிந்து கொள்ளத் தெரியாதவள் அடி முட்டாள். ஒரு குடும்பத் தலைவி முதல் தரமான முட்டாளாக இருக்கக் கூடாது.

திருமணம் ஆன உடனே தன் கணவனுடன் தனிக் குடித்தனம் சென்றுவிட வேண்டும் என்று எண்ணி அதற்காக செயல்படுபவள் ஈனப் பிறவி. அவளை கண்டிக்கவில்லை என்றால் அவளைப் பெற்றவர்களும் ஈனர்கள்தான்.

வெறுமனே சமைத்துப் போட்டுக் கொண்டிருப்பது மட்டும் ஒரு மனைவியின் கடமை இல்லை. அதற்கு மேல் கடமைகள் எவ்வளவோ உள்ளன. குறிப்பாக கணவன் முகத்தில் மகிழ்ச்சியை நிலைக்கச் செய்யத் தெரியாதவள் புத்திசாலி மனைவி இல்லை. வீடு எப்பொழுதும் சாவு விழுந்த வீடுபோல் இருக்கக் கூடாது. சற்றேனும் கலகலப்பாக இருக்க வேண்டும். இதில் வீட்டுப் பெண்களுக்கு பெருமளவு பங்கு உள்ளது.

பிள்ளைகள் தங்களது பெற்றோர்கள் காலத்திற்குப் பிறகு அவர்கள் மூலம் உண்டான சொந்தங்களில் உருப்படியான சொந்தங்களிடம் மட்டும் உறவை நீடித்துக் கொண்டு பிற சொந்தங்களிடம் உண்டான உறவை சற்றும் யோசியாமல் விட்டுவிடலாம். இதில் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை, தவறில்லை.

தன் குறையை உணராது எதற்கெடுத்தாலும் பெற்றோரை குறை சொல்லும் பிள்ளை புத்திசாலி இல்லை.

தன் பிள்ளைகளுக்குச் சொத்து சேர்ப்பது ஒரு தகப்பனின் கடமைகளில் சேர்ந்தது இல்லை.

பெண்கள் தங்கள் சகோதர, சகோதரிகளிடத்தில் அளவு கடந்த பாசத்தைப் பொழிவார்கள். தங்களது சொந்த குடும்ப நலனைக் கூட மறந்துவிட்டு அவர்களுக்கு எதுவும் செய்யத் தயாராக இருப்பார்கள். பின்னால் ஏமாற்றப்பட்ட பிறகும் கூட தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்ள அவர்கள் மனம் மறுக்கும். ஒரு குடும்பத்தலைவன் இதை கருத்தில் கொள்ள வேண்டும்.

காலமெல்லாம் குடும்பத்திற்காக மாடாய் உழைக்கும் குடும்பத் தலைவனுக்கு நிம்மதியை கொடுக்கத் தெரியாத பெண்டு பிள்ளைகள், நன்றிகெட்டவர்கள், முட்டாள்கள், சுயநலவாதிகள்.

சிறு குழந்தைகள் இல்லையென்றால் மனித உறவுகள் நாற்றமெடுத்த உறவுகள்

பெண்கள் எந்த வகையிலும் தாங்கள் நினைத்தை சாதித்துக் கொள்வார்கள். அவர்களது செயல்கள் ஒட்டுமொத்த குடும்ப நலனுக்குக் குந்தகம் விளைவிக்காது என்றால் கண்டும் காணாமல் இருந்து விடலாம். இல்லையென்றால் தக்க நேரத்தில் உரிய வகையில் கண்டித்து வைப்பதே ஒரு குடும்பத் தலைவனின் தலையாய கடமை.

பசு மிகவும் சாதுவான பிராணி. அதுகூட மடுவில் பால் வற்றிவிட்டால் கன்றை காலால் உதைத்து விரட்டிவிடும். வயதான பிறகும்கூட பணத்திற்கு பெற்றோரை அண்டும் பிள்ளைகள் அந்த கன்றைப் போன்றவர்கள்தான்.

சில பெண்களுக்கு கணவன் போனபிறகுதான் கணவனின் அருமையே தெரியும். முன்கூட்டியே உணர மாட்டார்கள்.

பெண்கள் அழிவது அவர்களின் தேவையில்லாத ஆசைகளால் தான். பெரும்பாலான பெண்களால் தேவையில்லாத ஆசைகளை அடக்க முடியாது. அவர்கள் ஆசைக்கு அடிமைப்பட்டவர்கள். தங்கள் ஆசைகள் எல்லாவற்றையும் கணவன் நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்ப்பர். ஒருவேளை ஏதாவது காரணத்திற்காக அவர்களின் ஆசைகளை கணவனால் நிறைவேற்ற முடியவில்லையென்றால் காரணத்தை அலசி ஆராய்ந்து பொறுமை காக்க மாட்டார்கள். கணவனை குறை சொல்வர். பிறகு அந்த ஆசைகளை தனது பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பர். அவர்களாலும் ஒருவேளை முடியாது போனால் அவர்களுக்கு கோபம் வரும். பிள்ளைகள் தங்களது ஆசைகளை நிறைவேற்ற முடியாததற்கு தங்கள் மருமகள்கள்தான் காரணம் என்று முடிவு செய்து அந்தக் கோபம் மருமகள்கள் மீது பாயும். பெரும்பாலான குடும்பங்களில் மாமியார் மருமகள் சண்டைகளுக்கு இதுவே மூலகாரணம். பிறகாரணங்களும் உண்டு.

தன் பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக வளர்வதில் கூடுதலான கவனம் செலுத்துபவன் புத்திசாலி. கணவனை விட மனைவிக்கே இதில் அதிகம் கடமை உள்ளது. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்று பெரியோர் சொன்னது முக்காலும் உண்மை. தலைப்பிள்ளை தறுதலைப்பிள்ளையாகப் போய்விட்ட ஒரு குடும்பம் முன்னேறுவது கடினம்.

காலையில் பிழைப்பிற்காக வெளியில் செல்லும் கணவன் முகமலர்ச்சியுடன் செல்வதிலும், வெளியுலகில் பல இன்னல்களுக்கிடையில் மாடாய் உழைத்து வீடு திரும்பும் கணவன் வீடு திரும்பியதும் முகம் மலர்ச்சியடைவதிலும் கவனம் செலுத்தாத மனைவி ஒரு நல்ல மனைவி இல்லை.

பெற்றோரை ஏமாற்றும் பிள்ளை தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான்.

சந்தைக்குப் போனால் சந்தை முடிவதற்குள் வேண்டிய பொருளை வாங்கிவிட வேண்டும். சந்தையே முடிந்து விட்டால் எந்தப் பொருளும் வாங்க முடியாது. நம் வாழ்க்கை முடிவதற்குள் நாம் செய்ய வேண்டிய கடமைகளும் அப்படித்தான்.

ஒரு தரமான குடும்பத் தலைவன் தகுந்த காரணத்திற்காக ஒருவரிடமுள்ள உறவை முறிக்கின்றான் என்றால் ஒரு நல்ல குடும்பத் தலைவி அந்த உறவை மீண்டும் ஒட்ட வைக்க முயற்சிக்க கூடாது.

கணவனின் முகக்குறி அறிந்து நடந்து கொள்ளத் தெரியாத மனையாள் ஒரு முட்டாள். தன் கணவனை சதா குறைசொல்லிக்கொண்டிருக்கும் ஒரு இல்லாள் நல்ல மனைவி இல்லை. அவளது குடும்பம் முன்னேறாது. தன் கணவனுக்கு எப்பொழுதும் ஒரு கேடயம் போல் செயல்படுபவளே உத்தம மனைவி.

ஒரு நல்ல மனைவி தன் பிறந்த வீட்டு உறவினர்களை தன் குடும்பத்துடன் ஒட்டுவதும், தன் கணவன் வீட்டு உறவினர்களை தன் குடும்பத்துடன் ஒட்டாது வெட்டுவதுமான ஈனச் செயலை செய்யமாட்டாள்.

ஒரு இல்லாள் தான் வாழ்க்கைப்பட்ட வீட்டில் தான் பிறந்த குடும்பத்துப் பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தால் அவள் புத்திசாலி இல்லை.

இல்லாள் ஒருத்தி தன் கணவனை எல்லா வகையிலும் பலப்படுத்துவதில்தான் குறியாக இருக்க வேண்டும். குறிப்பாக பொருளாதார ரீதியாக பலப்படுத்த வேண்டும். சிக்கனம் தெரியாத இல்லாள் ஏமாளி, முட்டாள்.

மாமன் மைத்துனர்களால் திவாலாவான குடும்பங்கள் எத்தனையோ உண்டு. நாம் திவாலாகி விடாத அளவிற்கு வேண்டுமானால் உதவி செய்யலாம்.

மனைவியாகப்பட்டவள் தன் கணவரின் சொல்பேச்சு கேட்க வேண்டும். அதைவிடச் சிறந்த பதிபக்தி வேறொன்றுமில்லை. மனைவியாகப்பட்டவள் எப்படி இருக்க வேண்டும் என்றால் கணவன் அவளிடம் நான் பிறர்முன் உன்னை அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவது போல் அழு என்று சொன்னால் அவள் அப்படியே அணுகூட பிசகாது செய்ய வேண்டும். அப்படி இருக்க வேண்டும் மனைவி.

பிள்ளைகள் வாலிப வயதை எட்டிவிட்டால் குடும்பத்தை தாங்க தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களா என்று முதலில்

கண்காணிக்க வேண்டியவள் தாய்தான். அதை விடுத்து கணவனைக் குறை சொல்லிக் கொண்டிருப்பவள் முட்டாள்.

பெற்றவர்கள் பிள்ளைகளுக்காக ஒரு சிரமத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடாது. இல்லையென்றால் பிள்ளையைப் பெற்றிருக்கக்கூடாது. பிள்ளைகளும் பெற்றோரின் சிரமங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அதுவும் வெகுவிரைவில், ஆனால் எதற்கும் கவலைப்படக்கூடாது. பெற்றோரின் சிரமங்களைக் குறைக்கத் தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

குடும்பத் தலைவன் மகிழ்வான மனநிலையில் இருந்தால் தான் அவனால் குடும்பத்திற்காக உழைக்க முடியும், குடும்பத்தில் எல்லோரும் மகிழ்வாக இருக்க முடியும், என்பதை குடும்பத் தலைவி மறக்கக் கூடாது. இல்லை எனில் அவள் அடிமுட்டாள்.

உள்ளூர நம்குடும்பத்தில் எவ்வளவு பலவீனம் இருந்தாலும் அது வெளியில் தெரியக்கூடாது. குடும்பத்தலைவனும் தலைவியும் இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக குடும்பத் தலைவி இந்த நிலையில் மிகவும் புத்திசாலியாக இருக்க வேண்டும்.

மனைவி மக்களின் செயல்களுக்கெல்லாம் தரம் பிரியாது தலையசைத்துக் கொண்டே போனால் ஒரு குடும்பத் தலைவன் குடும்பத் தலைவனாக இருப்பதற்கு தகுதியற்றவனாகி விடுவான்.

பெற்றோர் சொல் கேளாத பிள்ளைகளுக்கு விதி உதவினாலொழிய வாழ்க்கையில் கடைத்தேற வேறு வழியில்லை.

வாழ்க்கையில் உண்மையில் மகிழ்ச்சி இல்லாத தம்பதிகள் பிறர் முன் மகிழ்ச்சியுடன் இருப்பதுபோல் நடிக்கவாவது செய்ய வேண்டும். வெறுப்பை பிறர்முன் கொட்டக்கூடாது. குறிப்பாக பெண்கள் இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். காரணம் பெண்களுக்கு உணர்வு முந்தும், ஆண்களுக்கு அறிவு முந்தும்.

ஒரு குடும்பத் தலைவனுக்கு எது அழகு என்றால் சதிகாரர்களை தன்னிடம் மட்டும் அல்லாது தன் சந்ததிகளிடமும் ஒட்டவிடாது செய்வது அழகு.

பெண்கள் தான் பிறந்த வீட்டுக் குற்றத்தை மட்டும் எந்தக் காலத்திலும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்களின் ஆசாபாசங்களினால் சந்ததிகளின் முன்னேற்றம் பாதிக்கப்படக் கூடாது. ஒரு குடும்பத் தலைவன் இதில் கவனமாக இருக்க வேண்டும்.

குடும்பங்களில் மகிழ்ச்சி பெண்கள் வாயைத் திறப்பதில் (பேசுவதில்) இருக்கிறது. எந்நேரமும் முகத்தை உம்... என்று வைத்துக் கொண்டிருக்கும் பெண் பெண்ணில்லை. அதுபோல் எந்நேரமும் சிடுசிடுவென்று இருக்கும் ஆணும் ஆண் இல்லை. பெரும்பாலான பெண்கள் தங்கள் வாழ்க்கையை தொலைப்பது அவர்களின் வாயால்தான். நளினமாய் பேசத் தெரியாத பெண்ணால் யாருடைய அன்பையும் பெற முடியாது.

மனைவியை, மாமியாரை, மாமனாரை மதிக்காத ஆணின் வாழ்க்கை நன்றாக இருக்காது. அதுபோல் கணவனை, மாமியாரை, மாமனாரை மதிக்காது எதிர்த்துப் பேசும் பெண்ணின் வாழ்க்கையும் நன்றாக இருக்காது. கணவனிடம் உண்மையிலே மதிப்பு மரியாதை எதுவும் செலுத்தாமல் பிறர்முன் கணவனுக்குக் கீழ்ப்படிந்த பத்தினி போல் நடிப்பவள் நல்ல மனைவி அல்ல. இந்த விதி பிள்ளைகளுக்கும் பொருந்தும்.

பெரும்பாலான பெண்கள் ஒன்றுமில்லாத காரணத்திற்காக கூட கணவனிடம் நம்பிக்கை இழக்கும்போது சுயார்ஜிதமாக எல்லாம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதுதான் அவர்கள் செய்யும் மாபெரும் முட்டாள்தனம். பாசம், ரோசம் ஆகிய இரண்டின் பரிணாமம் பெண்கள், அத்துடன் தியாகமும் அறிவும் சேர்ந்தால் அவர்களது வாழ்க்கை சிறக்கும். இல்லையென்றால் சிறக்காது.

பெண்கள் கோலம் போடுவார்கள். எத்தனை புள்ளி வைத்து என்ன கோலம் போடுகிறார்கள் என்பது அவர்கள் கோலம் போட்டு முடித்த பின்பு தான் தெரியவரும். அதுபோல்தான் அவர்கள் குடும்பங்களில் செய்யும் திருவிளையாடல்களும் இருக்கும். அவ்வளவு விகடமானவர்கள் பெண்கள்.

குடும்பத் தலைவன் என்ற முறையில் தன் மனைவியை பாதுகாக்கும் கடமையும், தண்டிக்கும் உரிமையும், அதிகாரமும் ஒரு கணவனுக்கு உண்டு.

இரண்டு குவளைகளில் நஞ்சை நிரப்பி, ஒன்றை மாமியார் கையிலும், ஒன்றை மருமகள் கையிலும் கொடுத்து, இந்த நஞ்சை உங்களுக்குப் பிரியமானவர்களுக்குக் கொடுங்கள் என்று சொன்னால், அந்த நஞ்சை மாமியார் மருமகள் வாயிலும் மருமகள் மாமியார் வாயிலும் ஊற்றுவர். இதுதான் பெரும்பாலான குடும்பங்களில் காலாகாலமாக இருந்துவரும் நிலைமை. குடும்பங்களில் அமைதி நிலவுவதும், புயல், கொந்தளிப்பு முதலியவை ஏற்படுவதும் பெரும்பாலும் பெண்களால்தான். குடும்பத்திற்காக தியாகங்கள் செய்வது பெரும்பாலும் பெண்களை விட ஆண்களே.

பத்தினி யார் என்றால் தன் கணவனைப் பற்றி தானும் குறை சொல்லாமல் பிறரையும் குறை சொல்ல விடாமல் வாழ்பவளே பத்தினி.

சதா ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ளும் தம்பதியரை என்ன முயன்றும் திருத்த முடியாத நிலையில் அவர்களைப் பிரித்தால் அது புண்ணியம். இதற்கு மாறாக ஒற்றுமையுடன் வாழும் தம்பதிகளை பிரித்தால் அது பாவம். பெண்களுக்கு குடும்பத்தின் உண்மையான மகிழ்ச்சி எது என்பது தெரியாது. அரிதாக சில தெரிந்த பெண்கள் இருப்பர். அவர்களே பெண்கள்.

தன் கணவன் எத்தனை குற்றவாளியாக இருந்தாலும் கூட கணவனின் குறைகளைப் பிறர் அறியாது பார்த்துக் கொள்பவள்தான் உத்தமமான மனைவி. அது அல்லாது அவளே பிறரிடத்திலும், தன் பிள்ளைகளிடத்தும் தன்

கணவனைப் பற்றி குறைகள் கூறி பிறருக்கும், தன் சொந்தப் பிள்ளைகளுக்கும் தன் கணவனின் மீது உள்ள பாசத்தை மதிப்பு, மரியாதைகளைக் கெடுப்பவள் நல்ல மனைவி இல்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட வாழ்க்கை வாழ்பவர்களால் குடும்பத்தில் ஒற்றுமையாக இருக்க முடியாது.

தங்களை வளர்த்த கூலிக்காகவாவது தள்ளாத வயதில் தங்கள் பெற்றோர்களை பிள்ளைகள் பராமரிக்க வேண்டும். அப்படிச் செய்யாத பிள்ளைக்கு நற்கதி கிடைக்காது, இது சத்தியம், சத்தியத்திலும் சத்தியம். பெற்றோரைக் கேள்வி கேட்க எந்தப் பிள்ளைக்கும் அதிகாரம் இல்லை. அப்படி கேள்வி கேட்கும் பிள்ளை முட்டாள்.

வாழ்க்கையில் பெண்களின் குறிக்கோள் பணத்திலும் சுகத்திலும் அடங்கிப்போய் விட்டது. ஆனால், ஆண்களின் வாழ்க்கை அதற்கும் மேலாக கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடியது. எனவே, பெண்களை விட ஆண்களே பொறுப்பானவர்கள். ஒரு குடும்பத்தில் உண்மையில் பெண்களைவிட ஆண்கள் தியாகிகள். இது சத்தியம்.

எந்தக் குடும்பமாக இருந்தாலும் அந்தக் குடும்பத்தின் தலைவி உருப்படியான ஆளாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அந்தக் குடும்பம் உருப்படாது, இது சத்தியம். மனிதன் மகிழ்வுடன் வாழ குடும்பம் ஒரு கருவி, அவ்வளவு தான். குடும்பமே எல்லாம் இல்லை.

பெரும்பாலான குடும்பங்கள் நொடித்துப் போவது அதற்கு வேண்டும், இதற்கு வேண்டும் என்று தேவையில்லாத பொருள்களை வாங்கி வீட்டில் குவிப்பதால்தான். பெண்கள் அதில் கெட்டிக்காரர்கள். காரணம், அவர்களால் ஆசையை அடக்க முடியாது.

பெரும்பாலான குடும்பப் பெண்கள் தங்களது குடும்பத் தலைவனை பெருமைக்குரியவனாக தங்கள் மனதில் வைத்திருப்பது இல்லை. ஏறுக்குமாறான எண்ணங்களுடன் தான் இருப்பார்கள். இது ஒன்றே அந்தக் குடும்ப முன்னேற்றத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கும். கனிவும், திறமையும் உள்ள குடும்பத்தலைவன் தேவ, அரக்கத் தத்துவத்தைப் பயன்படுத்தி அவர்களை மேய்க்கலாம்.

தனக்கு நாற்பது வயது வரை தந்தை புத்திமதி சொல்லும் அளவுக்கு பிள்ளை இருக்கக் கூடாது. இன்றைய உலகத்து பிள்ளைகள் அப்படித்தான் இருக்கிறார்கள். இது வருந்தத்தக்க ஒரு நிலை.

பெரும்பாலான மனிதர்கள் பணம் ஒன்றைத் தவிர வேறு எதற்கும் மதிப்புக் கொடுப்பதில்லை. பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகமில்லை. ஆனால், அது முற்றிலும் உண்மையில்லை. பணம் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றுதான். ஆனால், இந்த பணத்திற்காக ஒருவன் கேவலப்பட்ட வாழ்க்கை வாழக் கூடாது. இன்னொருவனை கேவலப்படுத்தவும் கூடாது.

பிச்சைக்காரர் கூட இப்பொழுதெல்லாம் 'அன்னக்காவடிக்கு பிச்சை போடுங்கள் தாயே' என்று கூவிக்கொண்டு தெருவில் வருவதில்லை. கடைவீதியில் நின்ற இடத்தில் இருந்தே பணமாகப் பிச்சை கேட்கிறார். காரணம், அண்ணப் பிச்சை போட இப்பொழுது ஆட்கள் குறைந்து விட்டார்கள். அதோடு, பணமாகப் பிச்சை வாங்கினால் அந்தப் பணத்தால் அவர் என்ன வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் அல்லவா அதனால். மனிதனிடத்தில் பணத்திற்கு அவ்வளவு மதிப்பு இருக்கிறது.

அடிமையாக இல்லாது இருந்து பொருளாதார சுதந்திரத்துடன் இருப்பதே எல்லாவித சுதந்திரத்திலும் மேலான சுதந்திரம்.

ஓடி ஓடி உழைக்கணும், ஊருக்கெல்லாம் கொடுக்கணும் என்ற பாடல் தர்ம தேவனின் பாடல். மனிதன் ஓடி ஓடி உழைக்கத் தேவையில்லை, உழைத்தாலே போதும். அவனவன் உழைத்து அவனவன் குடும்பத்திற்குக் கொடுத்தாலே போதும். வீடும், ஊரும், நாடும், உலகமும் வளமாக இருக்கும்.

அநீதியான வழிகளில் பணம் ஈட்டுபவன் பிச்சைக்காரன். அநீதிகள் செய்தாவது பணம் சம்பாதிப்பதை கெட்டிக்காரத்தனம் என்று பெரும்பாலோர் எண்ணுகிறார்கள். அவர்கள் முட்டாள்கள். எந்தத் தொழில் உனக்கு உணவையும் உயர்வையும் கொடுக்குமோ அந்தத் தொழிலைச் செய்

குறுக்கு வழியில் நேர்மையான குறுக்கு வழி என்று ஒன்று உண்டு. நேர்மையற்ற குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதைக்

காட்டிலும் நேர்மையான குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பது மேலானதுதான். ஆனால், இந்த நேர்மையான குறுக்கு வழியும் கூட உன் பெயரையும், மதிப்பையும் பாழ்படுத்தி விடும். எனவே, குறுக்குவழி குறுக்குவழிதான். அது நேர்மையான குறுக்கு வழியாக இருந்தாலும் சரி, நேர்மையில்லாத குறுக்கு வழியாக இருந்தாலும் சரிதான். எல்லாம் ஒரே பலனைத்தான் கொடுக்கும்.

நேர்மையான வழியில் உழைத்து சம்பாதித்து பணம் திரட்டியவனையும், நேர்மையில்லாத வழியில் உழைக்காது சம்பாதித்து பணம் திரட்டியவனையும் இந்த உலகம் மதிக்கிறது. நேர்மையான வழியில் உழைத்து சம்பாதிக்க முடியாதவனையும் நேர்மையில்லாத வழியில் கூட சம்பாதிக்க முடியாதவனையும் இந்த உலகம் மதிப்பதில்லை. ஆக, இந்த உலகம் நம்மை மதிக்க வேண்டும் என்றால் நம்மிடம் பணம் இருக்க வேண்டும். அதற்காக நாம் நேர்மையில்லாத வழியில் பணம் சம்பாதிக்கக் கூடாது. அது பாவம்.

நேர்மையான முறையில் வாழ்ந்து பொருளில்லாதவன் இந்த உலகத்திற்கு முன் ஒரு ஏமாளி, பிழைக்கத் தெரியாதவன், எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் அவர்களுக்கு அவன் முட்டாள். கேவலப்பட்ட முறையிலாவது நிறைய பொருளீட்ட வேண்டும் என்று தான் இந்த உலகத்தில் பெரும்பான்மையினர் நினைக்கின்றனர்.

நேர்மையான முறையில் வாழ்க்கையை நடத்திச் செல்கிறவர்கள்தான் தலைநிமிர்ந்து ஏறு நடைபோடத்

தகுதியுள்ளவர்கள். நேர்மைக்கு மாறாக வாழ்கிறவர்கள் தலைகுனிந்து நடக்க வேண்டும். உலகம் இதற்கு நேர்மாறாக இருப்பது வியப்பாக இருக்கிறது. இந்த மாற்றத்தை உண்டுபண்ணியிருப்பது பணம். பணம் மட்டும் வாழ்க்கை இல்லை.

கேவலமான முறையில் பொருளீட்டி வாழ்கிறவனை நேர்மையான முறையில் பொருளீட்டி வாழ்கிறவன் கேவலமாக நினைக்கிறான். நேர்மையான முறையில் பொருளீட்டி வாழ்கிறவனை கேவலமான முறையில் பொருளீட்டி வாழ்கிறவன் கேவலமாக நினைக்கிறான்.

யாராக இருந்தாலும் ஒருவரிடத்தில் போய் அடிக்கடி உதவி கேட்க கூடாது. உன்னை மதிக்காததுடன் கேவலமாகவும் நினைப்பார்கள்.

உனக்கு ஒரு பொருள் தேவையென்றால் அது தேவைதானா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அதை வாங்கு. காரணம் பணத்தை வீணாக்கக் கூடாது. சிக்கனம் சோறு போடும். ஊதாரித்தனம் உதவாது.

மனிதர்களை தீயவர்கள் ஆக்குவதில் பணம் பெரும் பங்கு வகிக்கிறது.

பெண்கள் சிக்கனமாக இருந்த காலமெல்லாம் போய்விட்டது. இப்பொழுது ஆண்கள்தான் சிக்கனமானவர்கள். பெண்கள் ஊதாரிகள். எனவேதான் பல குடும்பங்களில் பல பிரச்சினைகள்

நிலவி வருகிறது. குடும்ப நிம்மதி என்பது பெரும்பாலும் இல்லாது போய்விட்டது. எதுவாக இருந்தாலும் பணம் வேண்டும். பணத்தில் எல்லாம் அடங்கிவிட்டது.

பணம் படைத்தவனுக்கு எல்லாம் உண்டு. ஏழைக்கு எதுவுமே இல்லை. அவனுக்கு அவனே துணை. வீரமும் விவேகமும் ஒன்று சேரும்பொழுது பணத்தாலும் அதிகாரத்தாலும் எதுவும் செய்ய முடியாது.

பணம் நம் உடம்பில் ஓடும் இரத்தத்திற்கு சமம். உடம்பினுள் இரத்தம் குறைந்தால் உடல்நலம் குறையும். உயிருக்கே கூட ஆபத்து வரலாம். பையில் பணம் குறைந்தால் வாழ்வு நலம் குறையும். வாழ்க்கையே கூட மரிக்கலாம். எனவே, நம் உடம்பில் போதுமான இரத்தமும் பையில் தேவையான பணமும் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

தவறுக்கு மேல் தவறுகள் செய்து ஊரைக் கொள்ளையடித்து நிறையப் பணம் சம்பாதித்து வைத்திருப்போரை கெட்டிக்காரன் என்று போற்றுவதும், அப்படிச் சம்பாதிக்க நிறைய வாய்ப்புகள் இருந்தும் நேர்மையாக கடமையாற்றி சம்பாதித்துக் கொள்ளாதவரை பிழைக்க தெரியாத ஆள் என்று தூற்றுவதுமான பேடித்தனமான உலகம் இது.

பணத்தால் மனத்திற்கு நிம்மதி இல்லை என்றால் அந்தப் பணத்தைத் தூக்கி குப்பையில் போட்டுவிடலாம்.

# 5. உலகவியல்

வாழ்க்கையில் சிறிதளவேனும் சுயநலவாதியாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த உலகம் நம்மைத் தின்று விடும்.

பொதுவாக நாம் பொய் சொல்லக்கூடாது. ஆனால், யாராவது நம்மிடம் ஒரு பொய் சொன்னால் நாம் அவர்களிடம் இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட பொய்களோ சொல்லலாம். அதில் தவறில்லை. காரணம், நமக்கும் பொய் சொல்லத் தெரியும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டுமல்லவா, அதற்காக.

நாம் புகழின் உச்சிக்கு செல்கிறோமோ இல்லையோ அது வேறு. எதிலும் கேவலப்படக்கூடாது. அதில் கவனமாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு பல சம்பிரதாயங்கள் செத்துப் போய்விட்டன. பணமும், பொருளும், புகழும் தான் முன்நிலைப்படுத்தப் படுகிறது.

நமது பலத்தைக் காட்டிலும் நமது பலவீனம் மிகவும் ஆபத்தானது. எனவே, நமது பலவீனத்தைப் பலவீனப் படுத்துவதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நம்மிடம் யாராவது, எதற்காவது, எப்பொழுதாவது தோற்றுவிட்டால் அவர்கள் மனதில் அந்தத் தோற்ற எண்ணம் வாழ்நாள் முழுதும் இருந்துகொண்டே இருக்கும். நாம் நம்

வாழ்நாள் முழுதும் அவர்களுடன் வாழ வேண்டிய கட்டாயம் இருந்தால் நாம் நம் வாழ்நாள் முழுதும் அவர்களிடம் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.

ஒருவன் உடன்வந்து அயோக்கியத்தனம் செய்வது வேறு. ஒரு அயோக்கியன் உடன் வருவது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. இருவரில் யார் நம்முடன் வந்தாலும் நாம் கவனமாக இருக்க வேண்டும். இருவருமே உடன் வந்தால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். காரணம், இனம் சற்று மாறுபட்டிருந்தாலும் இனம் இனத்தோடு சேர்ந்து கொள்ளும்.

பிறர் யாரும் உன்னை மதிப்பது போல் நடிக்கக்கூடாது. உண்மையிலேயே மதிக்க வேண்டும். அப்படி யாராவது உன்னை மதிப்பது போல் நடிக்கிறார்கள் என்றால் உன்னிடத்தில் அவர்களுக்கு பயமில்லை என்று பொருள். ஒருவனுக்கு நம்மிடத்தில் அச்சம் இல்லை என்றால் நமக்கு எதிராக அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான். நம்மிடம் அச்சமில்லாதவன் மனதில் நாம் அச்சத்தை உண்டு பண்ண வேண்டும். இல்லையென்றால் நாம் வாழ முடியாது.

பெரும்பாலான மனிதர் பிறரிடம் பொய் பேசுவர். ஆனால், பிறர் யாரும் அவரிடம் பொய் பேசுவதை விரும்பமாட்டார். நாம் பிறரிடம் உண்மைதான் பேச வேண்டும். ஆனால் பொய் பேசுபவரிடன் நாமும் பொய் பேசலாம். அதில் தவறில்லை.

நீ ஆட்சி செய்யும் நிலையில் இருக்கும்பொழுது ஆளுமை செய்யத் தவறிவிடாதே, இல்லையென்றால் உனக்குக் கீழ் உள்ளவர்கள் உன்னை ஆளுமை செய்வார்கள்.

தர்மத்தை வெல்ல எவராலும் முடியாது. அது வேண்டுமானால் ஏதாவது காரணத்திற்காக செயல்படாமல் இருக்கலாம். ஆனால், அது செயல்பட ஆரம்பித்துவிட்டால் அதை வெல்ல இந்த உலகில் வேறு எந்த சக்தியும் இல்லை. தர்மம் நிரந்தரமாகக் கூட செயல்படாமல் இருக்கலாம். அதற்கும் ஏதாவது காரணம் இருக்கும்.

அடுத்தவர் தகுதியானவரோ தகுதி இல்லாதவரோ, யாராக இருந்தாலும் உறவைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்தால் எல்லாவிதமான நட்டங்களையும் நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

உனது பலவீனத்தை எப்பொழுதுமே தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளதான் அடுத்தவன் முயற்சிப்பான். எனவே, உனது பலவீனம் என்ன என்பதை முதலில் நீ அறிந்து கொண்டு கூடுமானவரை அது வெளியில் யாருக்கும் தெரியாது பார்த்துக் கொள்.

உழைத்துப் பிழைப்பவன் முன்னால் ஏமாற்றிப் பிழைப்பவன் எத்தனை பெரிய கோடீஸ்வரனாக இருந்தாலும் பிச்சைக்காரன்.

இறையுணர்வு, அன்பு, ஒழுக்கம் இம்மூன்றும்தான் மனிதனை மனிதனாக வாழ வைக்கிறது.

எந்த இடமாக இருந்தாலும் நமது மதிப்பு மரியாதையை நாம்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி இருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய மதிப்பு மரியாதை ஒரு இடத்தில் கிடைக்க வில்லையென்றால் அது எந்த இடமாக இருந்தாலும் அந்த இடத்தில் நமது மதிப்பு மரியாதையை நிலைநிறுத்தி

விட்டுத்தான் வரவேண்டும். தேவையில்லாது அந்த இடத்தில் இருக்கவும் கூடாது.

உடம்பிற்கு ஏதாவது கோளாறு என்றால் மருத்துவரிடம் சென்று உடம்பைக் காண்பிக்காது தச்சு வேலை செய்கிறவரிடம் உடம்பைக் காண்பிக்க வேண்டும் என்று சொல்கிற நபர்களும் இந்த உலகில் இருக்கிறார்கள். இதை முட்டாள்தான் சொல்வான் என்றில்லை. பெரிய மனிதர் என்று சொல்லக்கூடிய நிலையில் உள்ளவர்களும் இப்படி இருக்கிறார்கள். முட்டாளிடம் உள்ளதைச் சொன்னால் புரியும் பொழுது ஏற்றுக் கொள்வான். அவனல்லாத மற்றவரிடம் சொன்னால் புரிந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் தாங்கள் முட்டாளேதான் என்பதை ஆணித்தரமாக இந்த உலகிற்கு அடித்துச் சொல்கிறவர்கள்.

அரசிடம் அகப்பட்டுக் கொள்ளாத திருடன் அகப்பட்டுக் கொண்ட திருடனைப் பார்த்து ‘ஹி ஹி ஹீ. . .’ என்பான். அகப்பட்டுக் கொண்ட திருடனுக்கு இது கேவலமாக இருக்கும். திருடனாகவே இல்லாது இருந்தால் இதற்கெல்லாம் இடமில்லை அல்லவா? எனவேதான் உத்தமனாக வாழ வேண்டும்.

பிறர் உன்னிடம் வஞ்சக எண்ணத்துடனேயே உறவாடிக் கொண்டிருப்பது பல ஆண்டுகள் கழித்துக்கூட உனக்குத் தெரிய வரும். அந்த அளவிற்குச் சிறந்த நடிகர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள்.

உன்னை பிறர் யாரும் கண்காணிக்கும்படி விட்டுவிடாதே. அவர் உன் தகுதிக்கு மேலானவர் என்றால் உன்னிடத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை என்று பொருள். உன் தகுதிக்குக்

கீழானவர்கள் என்றால் அவருக்கு உன்னிடத்தில் மதிப்பும் அச்சமும் இல்லை என்று பொருள்.

பொய் பேசத் தெரியாவதன் உத்தமன். மற்றவர்க்கு அப்பாவி.

ஒருவரிடம் நாம் பக்குவமாக, கனிவாக, தன்மையாக பேசுவதாலும், நடந்து கொள்வதாலும் நாம் முட்டாள்களாகி விட மாட்டோம். பிறரிடம் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், நாம் அப்படி இருந்தால் நாம் முட்டாள் என்று முட்டாள்கள் நினைக்கிறார்கள்.

நாம் எந்த தவறும் செய்யாது சரியான வழிமுறைகளை எதிலும் கையாண்டால் பாராளும் சக்கரவர்த்தியால் கூட நம்மை எதுவும் செய்ய முடியாது. அதே நேரம், நாம் ஒரு சிறு தவறு செய்து விட்டாலும் ஒரு சுண்டெலியால் கூட நம்மை வெல்ல முடியும்.

பொய் சொல்லக்கூடாது. ஒருவேளை எப்பொழுதாவது எதற்காவது பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் நல்லவிதமான பொய்தான் சொல்ல வேண்டும். தீய பொய் சொல்லக்கூடாது. காரணம், பின்னாளில் எப்பொழுதாவது அது நம் வாழ்வில் நடக்கும். பொய்யே சொல்லாதவன் ஒருவன் பொய் சொன்னால் அதற்கு உண்மையின் சக்தி வந்துவிடும்.

பிறர் யாராக இருந்தாலும் உன்னிடத்தில் மதிப்பு மரியாதை இருக்க வேண்டும், பாசம் இருக்க வேண்டும், உன் தகுதிக்கு தகுந்த பயமும் அவர்கள் மனத்தில் இருக்க வேண்டும். அப்படியென்றால் நீ சரியான வழியில் அவர்களை நடத்திச் செல்கிறாய் என்று பொருள். ஒருவேளை நீ இருக்கும் வகையில் இருந்து, அவர்கள் இல்லையென்றால் திருத்தியமைக்க உனக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

நம்மைப் பற்றி நன்றாகத் தெரிந்தவன்தான் நம்மை சிரமமின்றி ஏமாற்றுவான்.

ஒரு செயலை செய்யச் சொல்கிறவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்று ஒரு வரியில் சொல்லி விடுவார்கள். ஆனால், அவர்கள் சொன்ன அந்த அதை செய்வதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று செயல்படுத்துகிறவர்களுக்குத்தான் தெரியும்.

வாழ்க்கையை நேர்வழியில்தான் நடத்திச் செல்ல வேண்டும். குறுக்கு வழியில் செல்லக் கூடாது. ஒருவேளை எப்பொழுதாவது எதற்காவது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களால் குறுக்கு வழியைக் கையாள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் ஆபத்தில்லாத குறுக்கு வழியை வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். ஆபத்தான குறுக்கு வழியை ஏற்றுக் கொள்ளவே கூடாது.

அடுத்தவரை மதிக்கத் தெரிந்தாலே உனது வாழ்க்கை பாதுகாப்பானதாக அமைந்து விடும். நீ அடுத்தவரை மதித்து அவர் உன்னை மதிக்கவில்லை என்றால் அவரை எப்படி உன்னை மதிக்க வைக்க வேண்டும் என்ற கலை உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். அந்தக் கலையை தேவைப்படும்போதெல்லாம் பயன்படுத்தத் தயங்கக்கூடாது. உனது தனித்தன்மையை எப்பொழுதும் இழந்து விடக்கூடாது.

எந்த வேலையாக இருந்தாலும் நமது சொந்த பாதுகாப்பையும் நம்முடன் சேர்த்து நமக்குத் துணைநிற்பவர்களின் பாதுகாப்பையும் எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது.

வீரத்துடன் விவேகம் சேரும்பொழுது அற்புதங்கள் உருவாகிறது.

பணம் மனிதனை அது ஒன்றைத் தவிர வேறு சிந்தனை எதுவும் இல்லாது செய்துவிடும் வல்லமை படைத்தது.

நமக்கு எவ்வளவு இன்னல்கள் இருந்தாலும், நம் வாழ்க்கை முறை எவ்வளவு சீர்கெட்டிருந்தாலும், நம் நாவிலிருந்து நல்ல வார்த்தை வர வேண்டும். இந்த உலகம் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் ஏசும். அது அதன் குணம். போற்றுதல் என்பது அரிதாக அதுவும் இறைவன் அருளால் கிடைக்கும். எனவே, இந்த உலகத்தை பொருட்படுத்தாமல் நாம் நம் கடமைகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும்.

முன்பெல்லாம் குயிலை மயில் என்று தவறாகச் சொல்லி விடுபவர்கள், தவறை உணரும்பொழுது குயிலை குயில் என்று ஒத்துக்கொள்வார்கள். வேண்டுமென்றே ஏதாவது உள்நோக்கத்தோடு குயிலை மயில் என்று சொல்பவர்கள்தான் கடைசிவரை குயிலை மயில் என்பார்கள். இப்பொழுதெல்லாம் அப்படி இல்லை. குயிலை மயில் என்று தவறாகச் சொல்லி விடுபவர்கள் கூட அது மயில் இல்லை குயில்தான் என்று உணர்ந்தாலும் கூட கடைசிவரை குயிலை மயில் என்றுதான் சொல்கிறார்கள். காரணம் முதலில் அவர்கள் குயிலை மயில் என்று சொல்லிவிட்டதுதான். நாம் விடாப்பிடியாக சண்டை போட்டாலொழிய அவர்கள் வழிக்கு வருவதில்லை. ஆனால் சண்டை போட்டால், அவர்கள் எதிரியாகிவிடுவார்கள். அதற்காக நாம் எக்காலத்திலும் குயிலை மயில் என்று ஒத்துக் கொள்ளக்கூடாது. குயில் குயில்தான், மயில் மயில்தான்.

வாரிசுகளுக்கு சொத்துக்கள் சேர்த்து வைக்காவிட்டாலும் பாவங்கள் சேர்த்து வைக்கக்கூடாது.

மிருகங்கள் கூட தன்னை படமெடுக்கிறார்கள் என்று தெரிந்தால் புகைப்படக் கருவிக்கு முன் வந்து நின்று புன்னகைக்கின்றன.

உனக்கு என்று இயற்கையாகவே இருக்கும் பலத்தை எந்த சூழ்நிலையிலும் இழக்கக் கூடாது. அது ஆபத்தை விளைவிக்கும்.

உலகத்தோடொட்டொழுகாதார் பல கற்றும் கல்லார் அறிவில்லாதார் என்ற வள்ளுவரின் கருத்து உண்மைதான். அதற்காக இந்த உலகமே கொள்ளை அடித்தாலும் அந்த இழிச் செயலை நாம் செய்யக்கூடாது.

நம் இல்லத்து நல்ல காரியங்களுக்கு தகுதியுள்ளவர்களை மட்டும்தான் அழைக்க வேண்டும். உரிமை இருந்தும் தகுதி இல்லாதவர்களையோ, அல்லது உரிமை இல்லாவிட்டாலும் அழைக்கத் தகுதி இல்லாதவர்களையோ வேறு எந்தக் காரணத்திற்காகவும் அழைக்கக்கூடாது. அது ஆபத்தை விளைவிக்கும்.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர், இரண்டாயிரம் காலத்துப் பயிர் என்று சொல்வதெல்லாம் வெறுமனே பேச்சுக்காகச் சொல்லப்படுவது. இப்பொழுது அது வியாபாரம் ஆகிவிட்டது என்பதுதான் உண்மை.

ஒரு பொதுநலவாதி இன்னொரு பொதுநலவாதிக்கு உதவி செய்வான். இது உறுதி. ஒரு பொதுநலவாதி ஒரு சுயநலவாதிக்கு தேவையை முன்னிட்டு உதவி செய்யலாம், உறுதியில்லை. ஒரு சுயநலவாதி ஒரு பொதுநலவாதிக்கு தேவையை முன்னிட்டு உதவி செய்யலாம், உறுதியில்லை. ஒரு சுயநலவாதி இன்னொரு சுயநலவாதிக்கு உதவி செய்ய மாட்டான். இது உறுதி.

கொள்ளை அடிப்பவனை இன்னொருவன் கொள்ளையடிப்பான். அது பாவமா என்றால் பாவம்தான். காரணம், கொள்ளையடிப்பதே பாவம். கொள்ளையடிக்கப் பட்டவன் ஒரு யோக்கியனாக இருந்தால் என்ன அயோக்கியனாக இருந்தால் என்ன? கொள்ளை அடிக்கப்படும் பொழுது அவன் மனதும் நோகிறது அல்லவா, அதனால் பாவம்.

தீயை தொட்டால் சுடும். நஞ்சை குடித்தால் உயிர் போகும். சிலர் இருக்கிறார்கள். தீயை தொட்டுப் பார்த்துதான் அது சுடும் என்பதை ஒத்துக் கொள்வேன் என்பார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். நஞ்சைக் குடித்துப் பார்த்துதான் அது உயிரை மாய்க்கும் என்பதை ஒத்துக் கொள்வேன் என்பார்கள். நாம் இந்த இரண்டாம் தரத்து ஆளாக மட்டும் இருக்கக்கூடாது. பெரியவர்கள், கற்றுணர்ந்தவர்கள், அனுபவசாலிகள் ஒன்றைச் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளும் தன்மை நமக்கு வேண்டும். சிலவற்றைச் சோதித்துப் பர்க்கலாம். இன்னும் சிலவற்றை சோதித்துப் பார்க்கக்கூடாது. அவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அல்வா இனிக்கத்தான் செய்யும். சர்க்கரை நோய் வந்தபின்பு தான் அதன் கொடுமை புரியும். அதுபோல்தான் தவறுகளும். செய்யும்பொழுது மகிழ்ச்சியாக இருக்கும். அதற்குரிய தண்டனை பெறும்பொழுது தான் அதன் கொடுமை புரியும்.

பெண்கள் சுயநலம் நிறைந்தவர்கள். தங்கள் நலனுக்காக மனதைக் கல்லாக்கிக் கொணடு எவ்வழியேனும் நினைத்ததை சாதித்து விடுவார்கள்.

சிலர் இருக்கிறார்கள், சொல்லப்போனால் பலர் என்று கூட சொல்லலாம். அவர்கள் நாயை பன்றி என்பார்கள். பன்றியை குதிரை என்பார்கள். அதன் பின்னணியில் அவர்களுக்கு பலன் ஏதாவது இருக்கும். தாம் கெட்டிக்காரத்தனமாய் பேசுவதாக அவர்களுக்கு நினைப்பு. ஆனால், அவர்கள் அடிமுட்டாள்கள். நாயை நாய் என்றும் பன்றியை பன்றி என்றும் குதிரையை குதிரை என்றும் சொல்பவர்கள் முன் அவர்கள் எப்பொழுதும் தோற்றுப் போவார்கள்.

இறைவன் செய்த மிகப்பெரிய குற்றம் மனிதர்களை படைத்தது தான். ஆடு, மாடு, கோழி, குருவியுடன் நின்றிருக்க வேண்டும். உலகம் நன்றாக இருந்திருக்கும்.

வசதி வாய்ப்புகளுக்காக வம்பு வழக்குகளில் அகப்பட்டுக் கொள்ளும் வாழ்க்கையை விட அமைதியான சீரான வாழ்க்கையே சிறந்தது.

சில மனிதர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ, ஆசை மட்டும் பெரிதாக இருக்கும். இமயமலையே அவர்களின் ஆசைக்கு முன் மிகமிகச் சிறியது.

நீ லண்டனில் வசிக்கிறாய் என்றால் லண்டனே உன்னுடையது தான் என்று உன் சொந்த பந்தங்கள், அறிந்தவர், தெரிந்தவர் எல்லாரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களின் வேலை ஏதாவது லண்டனில் இருந்தால் அவர்களுக்காக நீ அதை வெற்றிகரமாகச் செய்து முடிப்பாய் என்றும் எதிர்பார்ப்பார்கள்.

நீ அரசாங்கத்தில் பணிபுரிந்தால் அரசாங்கமே உன்னுடையது தான் என்று பிறர் நினைப்பர். அவர்களுக்கு அரசிடம் ஏதாவது

வேலை இருந்தால் அதை உன்மூலம் செய்து முடித்துக் கொள்ளலாம் என்றும் நினைப்பர்.

ஆண்களை விட பெண்களுக்கு குறுக்குப் புத்தி அதிகம். அதை அவர்கள் கெட்டிக்காரத்தனம் என்று சொல்லிக் கொள்வார்கள். திருட்டு புத்தியையும் உருட்டு புத்தியையும் பெற்றவரிடமும், உற்றவரிடமும் காண்பிக்கக் கூடாது. தேவைப்பட்டால் நம்மை தற்காத்துக் கொள்ள மற்றவரிடம் காண்பிக்கலாம்.

மனிதர்களுக்கு இடையில் பிரச்சினைகள் எப்பொழுது வரும், எதற்காக வரும், எப்படி வரும் என்று சொல்லமுடியாது. ஆனால், பெரும்பாலான பிரச்சனைகள் பொறாமையின் காரணமாக வரும், பெண்களால் வரும்.

மனிதர்கள் அவர்களுக்குத் தெரிந்த வழிகளில் வாய்த்த வாய்ப்புகளுக்குத் தக்கபடி வாழ்கிறார்கள். வேறு எப்படியும் வாழ முடியாது.

நாடு, அரசு என்பது சாதாரணமானது இல்லை. அது எல்லாவற்றிலும் மேலானது. அரசில் அங்கமாக இருக்கும் சில பன்றிகள் நரகல் தின்பதுதான் சாதாரண மக்களுக்குத் தெரியும். ஆனால், தெளிந்த ஒரு குடிமகனுக்கு நாடு, அரசைப் பற்றி எல்லாம் தெரியும். அவனை எதுவும் தெரியாதவன் என்று நினைப்பவன் யாராக இருந்தாலும் அவன் முட்டாள்.

சுயநலம் கலக்காத பொதுநலம் என்பது கிடையாது. ஒரு சில நேரம் தேவைப்பட்டால் நாம் சுயநலவாதியாக இருக்கலாம். ஆனால், தொடர்ந்து சுயநலவாதியாக இருக்கக்கூடாது.

தன் கடமை என்னவென்றே தெரியாது தவறுகள் செய்யும் ஒருவனுக்கு தன் கடமைகளை முடிந்த அளவு நல்லவிதமாகச் செய்யும் ஒருவனைக் குறைகூற எந்தத் தகுதியும் இல்லை.

ஒரு நாளுக்கு பத்து கொலைகள் செய்கிறவனாக இருந்தாலும் ஒரு தந்தை தன் பிள்ளைக்கு நல்லதைத்தான் சொல்வான். தந்தை சொல் மிக்கதொரு மந்திரமில்லை என்பது உண்மையே. தந்தையின் அறிவுரைகளைக் கேட்காது இருந்துவிட்டு பின்னாளில் தான் சிரமப்படும் பொழுது தந்தையைக் குறைசொல்ல எந்த பிள்ளைக்கும் தகுதி இல்லை.

பிறர் எத்தனை முறை தவறுகள் செய்தாலும் அவைகளை நாம் பொறுத்துக் கொண்டு செல்லும் பொழுது ஞாயமாக நாம் சிறுகோபம் எப்போதாவது கொண்டாலும் அதைத் தவறு என்றுதான் பிறர் சொல்வர். அதுதான் உலகம்.

வேண்டியவன் தப்புத் தவறு செய்தால் அரசு மன்னிக்கும். வேண்டாதவன் செய்தால் தண்டிக்கும். வேண்டியவனை மன்னித்தால் தனக்கே ஆபத்து என்றால் அவனை பலிகடாவாக்கும். இதுதான் அரசின் குணங்கள்.

நல்லுறவுகளை பராமரிப்பதில் ஒட்டுப்புல்லைப் போல் இருக்க வேண்டும். நாயுருவியைப் போல் இருக்கக்கூடாது. உண்மை இல்லாதவர்கள், ஒழுக்கம் இல்லாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் உறவை தொடரக்கூடாது.

சாதாரண மனிதன் எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் சுயநலத்தைக் கருத்தில் கொண்டு முடிவெடுக்கிறான். அசாதரண மனிதனே எல்லார் நலத்தையும் கருத்தில் கொண்டு முடிவெடுக்கிறான்.

ஒருவர் நமக்கு பொய், பித்தலாட்டம், ஆசை காரணமாக அறிந்தும் செய்யும் கெடுதல்களைக் கூட ஏற்று மன்னித்து விடலாம். ஆனால், ஒரு கெடுதல் துரோகத்தால் ஏற்பட்டது என்றால் அதை மன்னிக்கவே கூடாது. காரணம், துரோகம் என்பது பொறாமை என்னும் வித்தின் விருச்சம். யாராக இருந்தாலும் துரோகம் செய்கிறவர்கள் மனிதரில்லை.

பிறர் அவர்கள் தொடர்பான தகவல்களை மிக மிக இரகசியமாக வைத்திருப்பார்கள். இறுதிவரை எதுவுமே நமக்குத் தெரிய வராது. ஆனால், நாம் அதுபோல் இருந்தால் அதை ஒரு பெரிய குறையாக எல்லாரிடத்திலும் வலிய வலிய சென்று சொல்வார்கள். இது தான் உலகம்.

நாய் ஒரு நன்றியுள்ள மிருகம். மனிதரிடத்தில் மிகவும் நட்பாகப் பழகும். நன்றியின் சின்னமான நாயே இன்னொரு நாயுடன் சண்டை போடும். ஏனடா நாய் அடித்துக் கொள்வது போல் அடித்துக் கொள்கிறாய் என்பார்கள். அப்படி நன்றி, நட்பின் சின்னமாகப் பட்ட நாயே ஒன்றுக்கொன்று அடித்துக்கொள்ளும் பொழுது மனிதர்கள் சண்டை அடித்துக் கொள்வதில் ஒன்றும் வியப்பில்லை. நன்றிகெட்ட தனமாக இல்லாமல் இருந்தால் அதுவே போதுமானது.

உறவுகளை உரசிப்பார்க்க கூடாது. பலவீனமாக இருந்தால் உடைந்து போகும். பலமாக இருந்தால் பலவீனப்படும்.

சிலந்தி வலை பின்னுவது போல் மனிதர்களின் விதியை இறைவன் பின்னி வைத்திருக்கிறார். எப்படி சிலந்தி வலையில் ஏதாவது ஓரிரு கன்னி அறுந்துவிட்டால் வலை பலவீனப்பட்டு சிலந்தியின் நலன் பாதிக்கப்படுகிறதோ அதுபோல் நம்மைச் சார்ந்தவர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டால், ஏதாவது ஒருவகையில் நமது வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. எனவே, மனிதர்கள் ஒருவருக்கொருவர் தங்களது உறவுகளை பலப்படுத்திக் கொள்வதில்தான் கவனத்தைச் செலுத்த வேண்டும். பலவீனப்படுத்திக் கொள்வது முட்டாள்தனம்.

மாணவ, மாணவியர் தங்கள் பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர், பேராசிரியர் முதலியோர் சொல்வதைக் கேட்காமல், அவர்கள் கிடக்கிறார்கள், அவர்களுக்கென்ன வேலை என்ற எண்ணத்துடன் ஏனோ தானோ என்று தங்கள் பள்ளி, கல்லூரி வாழ்க்கையை கடத்தினார்கள் என்றால் அவர்களால் சிறப்பாக தேர்வில் வெற்றியடைய முடியாது. ஒருவேளை வெற்றி பெற்றால் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருக்கமுடியாது. அதுபோல்தான் ஒரு குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் குடும்பத்துப் பெரியவர்கள் சொல்வதைக் கேட்காமல் ஏனோதானோவென்று வாழ்ந்தால் அவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைய முடியாது. ஒருவேளை வெற்றி பெற்றிருந்தால் அந்த வெற்றி போற்றுதற்குரியதாக இருக்காது.

ஒருவரது கருத்து எப்பொழுது தத்துவமாகிறது என்றால் பெரும்பாலானவர்களால் அது ஏற்றுக் கொள்ளப்படும் பொழுது தத்துவமாகிறது.

அக்காலத்தில் லஞ்சம் வாங்கினால் கேவலம். இக்காலத்தில் லஞ்சம் வாங்கவில்லையென்றால் கேவலம். ஆனால், பிடிப்பட்டால் எக்காலத்திலும் கேவலம்.

சில பெற்றோர்கள் தங்கள் பெண் திருமணமாகி சம்பந்தப்புரம் சென்ற பிறகும்கூட தங்கள் மடியிலேயே அமர்ந்து அல்வா சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். தங்களின் மாப்பிள்ளைக்கு அவரது பிறந்த குடும்பத்துக் கடமைகள் இருக்கிறது என்பதைப் பற்றி சிறிது கூட எண்ணிப் பார்ப்பதில்லை. அப்படிப்பட்ட பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு குடும்பங்களில் மாப்பிள்ளை தேடக்கூடாது. அனாதை ஆசிரமங்கள் சென்றுதான் மாப்பிள்ளை தேட வேண்டும்.

பிறர் வாழ்த்துவது நம்மை வாழ வைக்கும். தூற்றுவது நம்மை சாகடிக்கும். எனவே, பிறர் தூற்றுக்கு ஆளாகாதே.

கீழ்தட்டிலுள்ள ஒரு அரசுப் பணியாளன் லஞ்சம் வாங்குகிறான் என்றால் அவனுக்கு வருமானம் போதாமல், குடும்ப அடிப்படைத் தேவைக்காக வேறு வழியில்லாது வாங்குகிறான். அவனை மன்னித்து விடலாம். ஆனால், மேல்தட்டிலுள்ள ஒரு அரசுப் பணியாளன் வாங்குகிறான் என்றால் அவன் தெருவில் போகும் பன்றியை விடக் கேவலமானவன். லஞ்சம் வாங்கிப் பிழைப்பது நரகல் தின்பதற்குச் சமம். ஊழல் செய்வது அதைவிடக் கேவலமானது.

நாம் எப்பொழுதாவது யாருக்காவது தக்க தருணத்தில் ஏதாவது உதவி செய்திருந்தோமானால் அதன் ஞாபகம் அவர்களுக்கு வரும் பொழுதெல்லாம் நம்மை மனதார வாழ்த்துவார்கள். சந்தேகத்திற்கு இடமில்லாது அந்த வாழ்த்துக்கள் நமக்கு பலனளிக்கும்.

நாம் எப்படிப்பட்ட மோசமான நிலையில் இருந்தாலும் பிறர் அதைப் பற்றி கவலைப்படமாட்டார். அந்த நமது மோசமான

நிலையிலும் கூட நம்மிடமிருந்து ஏதாவது பலன் அடையத் தான் முயற்சி செய்வர்.

திருடன் அடுத்தவன் மூளை நன்றாக இருந்தால் அதைக்கூட திருட முயற்சிப்பான்.

களிமண்ணில் பிள்ளையார் பிடித்தால் பிள்ளையார் வருவார். பேய் பிடித்தால் பேய் வரும். மனிதன் இந்தக் களிமண்ணைப் போன்றவன்தான். நாம் என்ன பிடிக்கின்றோமோ அதுவாக அவன் மாறுகின்றான்.

நீ உலக மகா வீரனாக இருக்கலாம். உன்னிடம் திருட்டுத்தனம் புகுந்து கொண்டால் உன் வீரம் எல்லாரிடத்திலும் மண்டியிட்டு விடும்.

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் உன்னை திருமணம் செய்து கொள்ள ஆட்கள் வரிசையில் நிற்க வேண்டும். அந்த அளவிற்கு இளமையிலேயே வாழ்க்கையில் நீ உன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

நீ எதற்குமே பயப்படாத ஆளாக இருக்கலாம். ஆனால், உன் மீது பிறர் படும் பொறாமைக்கு பயப்படு. வாழ்நாளில் இந்த உலகை வெகுவிரைவில் புரிந்து கொள்ள வேண்டும். தாமதிக்க தாமதிக்க ஒருவனுக்கு துன்பங்கள் தான் மிஞ்சும்.

சக மனிதன் நம்பிக்கைக்கு பாத்திரமானவனாக இல்லாது இருந்திருந்த காரணத்தினால்தான் மனிதன் பூட்டையும் திறவுகோலையும் கண்டுபிடித்திருந்திருக்கின்றான்.

இல்லையென்றால் அவைகளை கண்டுபிடிக்கத் தேவை இருந்திருக்காது.

நேர்மையான வழிகளில் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் நம் மனத்தில் தீச்சுடராக இறுதிவரை எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.
எவ்வளவு பெரிய தீயையும் அணைத்து விடலாம். ஆனால், ஒருவன் மனத்திலுள்ள பொறாமைத் தீயை மட்டும் அணைக்கவே முடியாது.

பணம் தன்னை மதிப்பவரிடத்தில்தான் தங்கும். பிறரிடத்தில் தங்காது. நம் மடியில் உள்ள பணத்திற்கு பிறர் கணக்குப் போடுவர். அதுதான் உலகம்.

பிறரை மேய்க்க வேண்டுமென்றால் நமக்கு மனோதத்துவம் தெரிந்திருக்க வேண்டும்.

என்ன காரணத்திற்காக சம்பிரதாயங்கள் உருவாக்கப்பட்டதோ, அந்த காரணமே இல்லாமல் போகும் பொழுது அந்த சம்பிரதாயங்களைச் செய்ய வேண்டியதில்லை.

நாம் விழித்திருக்கும்பொழுது நமக்கு ஏற்படும் உணர்வுகளுக்கேற்ப நம் உடலில் எந்தவிதமான மாற்றங்கள் ஏற்படுகிறதோ, அதேபோன்ற மாற்றங்கள் நாம் உறங்கும் பொழுது நாம் எந்த மாதிரி கனவுகள் காண்கிறோமோ அப்பொழுதும் ஏற்படுகிறது.

தன்னையும் பிறரையும் மகிழ்வுடன் வைத்துக் கொள்ள தெரியாதவன் ஒரு முட்டாள்.

சிங்கம் என்றால் உறுமிக் கொண்டாவது இருக்க வேண்டும். இல்லையென்றால் சுண்டெலி பார்த்துக் கேட்கும் சிங்கத்தை, “ஏய்.... சிங்கம்.... என்ன?.....” என்று.

ஒருவன் என்ன தொழில் செய்கிறானோ அந்தத் தொழிலின் பெயரால் அடையாளம் கண்டுகொள்ளப்படுவான். வைத்தியம் செய்தால் வைத்தியன், வியாபாரம் செய்தால் வியாபாரி, பிறரை ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவன் ஏமாற்றுக்காரன்.

பொறாமை மனித குணங்களில் மிகமிக ஈனத்தனமாக குணம். கோபம், காமம் கூட பொறாமைக்கு அடுத்த நிலையில் தான் வரும். பொறாமைப்படுகிறவன் தன்னையும் அழித்துக் கொண்டு யார்மீது பொறாமைப் படுகிறானோ அவனையும் அழிக்கிறான்.

மனிதனாகப் பிறந்தவனுக்கு ஐந்து வகையான கடமைகள் உண்டு. அவை, தான் பிறந்த குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகள், அடுத்து தனது குடும்பத்திற்குண்டான கடமைகள், அதற்கடுத்து தனது உற்றார் உறவினர்க்குண்டான கடமைகள். அதற்கும் அடுத்து தன் நண்பர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர் களுக்குண்டான கடமைகள். இறுதியாக தான் சார்ந்த சமுதாயத்திற்குண்டான கடமைகள். ஒரு நல்ல குடிமகனாக இருந்தாலே நமது சமுதாயக் கடமைகள் பூர்த்தியாகிறது.

இன்னொருவர் சக்கரவர்த்தியாக இருந்தாலும் அவர் நமக்குச் சமமானவர்தான். எந்த வகையில் என்று கேட்டால் மனிதர் என்ற வகையில்.

நாம் நடக்கும்பொழுது ஒழுங்காக நடக்காமல் தாறுமாறாக நடந்தால் கால் இடறினாலும் கீழே விழாமல் சமாளித்துக்

கொள்ளலாம். ஆனால் ஓடும்பொழுது தாறுமாறாக ஓடினால் சமாளிக்கமுடியாது, விழுந்து விடுவோம். அதனால் நடந்தாலும், ஓடினாலும் அதை ஒழுங்காகச் செய்ய வேண்டும். அதற்கு மனதில் தெளிவு வேண்டும். வாழ்க்கையும் அப்படித்தான்.

திருடன் என்றைக்கும் திருடன்தான். அவன் யோக்கியனாகப் போவதில்லை. அரிதாக ஆனாலும் அவனை பிறர் நம்பத் தயங்குவர்.

மது, மாது, சூது இந்த மூன்று பழக்கங்களில் ஒருவனிடத்தில் எது இருந்தாலும் அவன் வாழ்க்கை முடிந்து விட்டது என்றுதான் பொருள்.

பிறருக்கு வேண்டுமானால் நாம் முட்டாளாகத் தெரியலாம். ஆனால் நமக்கு நாம் முட்டாள் இல்லை.

பெரும்பாலானோர் ஆளைப்பார், முகத்தைப் பார், நாம் இருக்கும் இடத்தைப் பார் என்ற அளவில்தான் இருக்கிறார்கள். நம் மனத்தைப் பார் என்றிருப்பவர் மிகச் சிலரே.

நூறு மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால் யாராவது ஒன்றிரண்டு பேர்கள்தான் தேவகுணம் படைத்த நாயின் குண இயல்புகளுடன் இருப்பார்கள். மீதிப்பேர் அனைவரும் அரக்க குணம் படைத்த பன்றியின் குண இயல்புகளுடன்தான் இருப்பர். நாம் எப்பொழுதும் தேவகுணம் படைத்தவர்களை நம் காரியங்களுக்குத் தேடிக் கொண்டிருக்க முடியாது. இந்த அரக்கர்களை வைத்துத்தான் செயலாற்ற வேண்டியிருக்கும். ஆளுமை குணம் நம்மிடம் இருந்தால் போதுமானது. எல்லாரையும் மேய்க்கலாம். கனிவும் கலந்திருக்க வேண்டும்.

மனிதர்களுக்கிடையில் இருக்கும் உறவு ஒரு கண்ணாடிப் பாத்திரத்தைப் போன்றது. அது உடைந்து போகாத வகையில் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். ஏதாவது காரணத்திற்காக அதை உடைத்து விட்டால் பிறகு என்னதான் திறமையாக அதை ஒட்டினாலும் அது உடைவதற்கு முன்பு இருந்த பலம் அந்த உறவுக்கு இல்லை.

இமயமலையை ஏறிக் கடக்க முடியும். ஆனால் அதைத் தாண்டிக் கடக்க முடியாது. பலபேர் வாழ்க்கையில் தாண்ட முயற்சிக்கிறார்கள்.

உப்பில்லா பண்டம் குப்பையிலே. உப்பு கூடிய பண்டமும் குப்பையில்தான்.

நாம் மட்டும் புத்திசாலியாக இருந்தால் பயனில்லை. நம்மை சேர்ந்தவர்களும் புத்திசாலியாக இருக்க வேண்டும்.

பறந்து பறந்து தேடும் ஒரு காக்கைக்கு கிடைக்கும் உணவு உட்கார்ந்திருக்கும் ஒரு கழுகுக்குக் கிடைக்காது. நம் வாழ்க்கையும் அப்படித்தான்.

கண்ணாடி முன் நின்று சிரித்தால் கண்ணாடியில் தெரியும் பிம்பம் சிரிக்கும். முறைத்தால் அதுவும் முறைக்கும். மனிதனும் அப்படித்தான்.

பிறர் ஆயுதம் தாங்கிய போர் வீரனுக்கு பயப்படுவதில்லை. அவன் கையிலுள்ள ஆயதத்திற்குத்தான் பயப்படுவர்.

பணத்தால் அன்பையும் விலைக்கு வாங்க முடியும். ஆனால், அன்பிற்கு அது தெரியக்கூடாது. தெரிந்தால் அது விலைக்கு வராது.

பெரும்பாலும் பெண்கள் மறுபிறவியிலும் பெண்ணாகப் பிறக்கவே விரும்புகிறார்கள். இது உண்மை.

அவன் காரே வைத்திருப்பான், நீ ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினால் அதற்கு உன் மீது அவன் பொறாமைப் படுவான். நாம் காரே வைத்திருக்கிறோமே என்று எண்ண மாட்டான். அதுதான் உலகம்.

மனிதனின் உடம்பில் ஓடும் இரத்தம் பொதுவாக சிவப்பு நிறமுடையது. ஆனால், இது அவனது உணர்வுக்குத் தகுந்தாற் போல் நிறம் மாறும் தன்மையுடையது. எப்படியெனில், மனிதன் பாச உணர்வை வெளிப்படுத்தும் பொழுது பச்சையாகவும், நல்ல எண்ணங்களை வெளிப்படுத்தும் பொழுது மஞ்சளாகவும், மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பொழுது வெளிர் சிவப்பாகவும், அமைதியை வெளிப்படுத்தும் பொழுது நீலமாகவும், கபடத்தை வெளிப்படுத்தும் பொழுது கருநீலமாகவும், வஞ்சத்தை வெளிப்படுத்தும் பொழுது கருஞ்சிவப்பாகவும், துக்கத்தை வெளிப்படுத்தும் பொழுது கருப்பாகவும், பற்றற்ற தன்மையை வெளிப்படுத்தும் பொழுது சாம்பல்நிறமாகவும் மாறுகிறது. சினத்தை வெளிப்படுத்துபவரின் இரத்தம் மட்டுமே எப்பொழுதும் சிவப்பாக இருக்கிறது. ஒரு புதுமை என்னவெனில் பணம் படைத்தவன் உடம்பில் ஓடும் இரத்தம் வெள்ளை நிறம். இது எல்லோர்க்கும் தெரியவராது. முதிர்ந்த அனுபவசாலிகளுக்கு மட்டுமே தெரியவரும். நன்றி கெட்டவனின் உட்ம்பில் ஓடும் இரத்தம் வானவில்லின் நிறத்தைப் போன்றது, அப்படி ஜொலிக்கும்.

தன் கடமையிலிருந்து நழுவுபவர் யாராக இருந்தாலும் அவர் கண்டனத்திற்குரியவர்.

நாம் அக்கிரமங்கள் செய்யாது இருந்தாலே போதும், நம் பிள்ளைகள் நன்றாக இருப்பார்கள்.

பிறரைப் பற்றி மட்டமாகவே நினைத்துக் கொண்டிருப்பவனால் பிறரை சரியாக எடை போட முடியாது. பிறரையே கண்காணித்துக் கொண்டிருப்பவன் தன் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

வாழ்க்கை ஒரு வியாபாரம். லாபம், சுகம், பணம் இவைதான் அதில் ஈடுபடுவோரின் குறிக்கோள். பாசம் இரண்டாவது இடத்தைத்தான் பெறுகிறது.

பிறர் புத்திசாலியாக இருக்கலாம். அவர் புத்திசாலி என்பதற்காக நாம் முட்டாள்கள் இல்லை.

நம் மூளை சிந்திக்கிறது. மனம் கற்பனை செய்கிறது. இந்த மூளையும் மனமும் ஒருங்கிணைந்து செயல்படும்பொழுது அற்புதமான காவியங்களும், ஓவியங்களும், கவிதைகளும், பிற கலைகளும் மனிதனால் படைக்கப்படுகிறது.

இந்த உலகில் பெரும்பாலானோர் சுயநலவாதிகள். சுயநலவாதியாக இருக்க வேண்டிய இடத்தில் நாமும் சுயநலவாதியாக இருக்கத்தான் வேண்டும்.

நாம் பிறர் கண்ணிலும் வாயிலும் இருக்கக்கூடாது. கண்ணிலிருந்தால் அவர்களது பொறாமைக்கு ஆட்படுவோம்.

வாயிலிருந்தால் அவர்களது சாபத்துக்கு ஆட்படுவோம். இரண்டுமே நம் வாழ்க்கைக்கு ஏற்றதல்ல.

இந்த உலகம் ஒரு பெரிய நாடகமேடை. ஆண்கள் எல்லோரும் நடிகர்கள். பெண்கள் எல்லோரும் நடிகைகள். நாமும் நடிக்க வேண்டிய இடத்தில் நடிக்கத்தான் வேண்டும்.

எந்த ஒரு விசயமாக இருந்தாலும் அது ஒருவருக்கு மேல் தெரிந்தால் இரகசியமல்ல.

நமது பலவீனம் நம்மை விரைந்து செயல்படச் செய்யும். பலம் எனக்கென்னவென்று வாழாவிருக்கும். நமது பலவீனத்தைச் சரியாக எடைபோட்டு விரைவை நிதானப்படுத்தி பலத்தை பிரயோகித்தால் நமக்கு பெருமளவு வெற்றி கிடைக்கும்.

பொதுவாக இரு நபர்களுக்கு இடையில் நல்ல உறவு நிலை இருந்தாலும், அது இல்லாது போனாலும், அந்த நிலையை தனக்குப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளத்தான் ஒரு மூன்றாவது நபர் முயற்சிப்பான்.

பெரும்பாலானோர் நல்லவர்களை முதலில் மதிப்பார்கள். நாளடைவில் மதிக்கமாட்டார்கள். காரணம், அவர்கள் நல்லவர்களாக இல்லாது இருப்பதே.

கோணல் புத்திக்காரர்கள் தங்கள் மூளையைத் தாங்களே நேராக்கிக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் பிறர் நேராக்குவர்.

ஒரு குடும்பத் தலைவன் முட்டாளாக இருந்தால் அந்தக் குடும்பம் அவதியுறும். ஒரு நிறுவனத் தலைவன் முட்டாளாக இருந்தால் அந்த நிறுவனம் நலியும். ஒரு நாட்டுத் தலைவன் முட்டாளாக இருந்தால் அந்த நாடே அல்லல்படும். ஆக, ஒரு தலைவன் எதற்குத் தலைமை வகித்தாலும் அவன் முட்டாளாக இருக்கக்கூடாது.

நாம் பிறரை நூற்றுக்கு நூறு நம்பினாலும் அந்த அளவுக்கு பிறர் நம்மை நம்பத் தயாராக இல்லை என்பதுதான் உண்மை.

தேக்கு மரம் வானளாவ உயர்ந்து வளர வேண்டுமானால் சரியான இடத்தில், சரியான சூழ்நிலையில் அது நடப்பட வேண்டும். அவ்வப்போது பராமரிப்பதுடன் தேவையில்லாத கொப்புகளையும், கிளைகளையும் களைந்து விட வேண்டும். மனிதனும் வாழ்க்கையில் உயர வேண்டும் என்றால் அப்படித்தான். சரியான இடத்தில் சரியான சூழ்நிலையில் தன்னை நட்டுக் கொண்டு அவ்வப்பொழுது தேவையில்லாத மனிதர்களை தன்னிடமிருந்து விலக்கி விடவும் வேண்டும். ஆனால், தான் உயர்வதற்கு உதவியாக இருந்தவர்களிடம் மட்டும் எக்காலத்திலும் நன்றியை மறவாது இருக்க வேண்டும். நன்றி மறப்பது ஈனச்செயல்.

மத சம்பிரதாயங்கள் கணக்கிலடங்காதவை. அவைகளை மேற்கொள்வதற்கே நமக்கு கணிசமான வருமானம் தேவைப் படுகிறது. அதனாலேயே பலர் தவறுகள் செய்கிறார்கள். இது மனோதர்மத்திற்குப் புறம்பானது. எனவே, மிகவும் முக்கியமானவைகளை மட்டும் தொடர்ந்து செய்து கொண்டு பிறவற்றை விட்டுவிடுவதில் தவறில்லை. அதனால் நம் நாகரீகமும் தொடரும், சமுதாயத்தில் குற்றங்களும் குறையும்.

நமக்குத் தொண்ணூறு வயது ஆனாலும் நாம் விரல் பால் குடிக்கும் பாப்பாவாக இருப்போம் என்று தான் இந்த உலகம் எண்ணிக் கொண்டிருக்கும்.

ஒரு கிலோ வெள்ளியை விற்று அந்தப் பணத்தில் ஒரு கிலோ தங்கம் வாங்கச் சொல்வார்கள். அவர்களுக்கு நினைப்பு தாம் சமர்த்தர்கள் என்று. நம்மைப் பொறுத்தவரை அவர்கள் முட்டாள்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அது முடியாது என்பதை தெரிந்து கொண்டே சொல்வார்கள். அப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்.

நாம் பெருந்தன்மையுடன் இருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டு இளித்தவாய்த்தனமாக இருக்கக்கூடாது.

நேர்மையாக உழைத்து அதில் ஈட்டும் வருவாயில் உண்டு அமைதியாக உறங்குவதில் இருக்கும் இன்பம் வேறு எதிலும் இல்லை.

உன்னால் வாழ்க்கையில் எது முடியுமோ அதைச் செய். அது தர்மத்துக்கு உட்பட்ட செயலாக இருக்க வேண்டும். பிறர் ஏச்சையும் தூற்றையும் பற்றி துளியும் கவலைப்படாதே. நாம் எதிலும் நேர்மையாக ஆசை கொள்வதில் தவறில்லை. பேராசை கொள்வதுதான் தவறு.

மனிதர்களுக்கு ஆசை என்ற வியாதி இருப்பது வணிகர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். அதை தூண்டிவிட்டு சரியான நேரத்தில் பணம் சம்பாதிப்பார்கள்.

நம் வாழ்வில் நடப்பதெல்லாம் காலத்தின் கட்டாயம். தேவையில்லாத ஆசை என்று ஏதாவது, மனதில் உண்டானால், அந்த நொடியே அதைக் கொன்று விட வேண்டும். வளர விடக்கூடாது.

பல நேரங்களில் நமது பலத்தைக் காட்டிலும் நமது பலவீனமே நம்மை முடிவெடுக்க வைக்கிறது.

யாராக இருந்தாலும் அவரிடம் நீ உண்மையுள்ளவனாக இருந்து அவர் உன்னிடம் உண்மையில்லாதவராக இருந்தால் அவர் உனக்குத் தேவையில்லை.

வாலிப வயதில் கிடைக்கும் நூற்றுக்கணக்கான நண்பர்கள் வயோதிக வயதில் இல்லாமல் போய்விடுவர்.

பெரும்பாலான மனிதர்கள் அக்கிரமங்கள், அநியாயங்கள், தில்லுமுல்லுகள் செய்கிறார்கள் என்றால் பெரும்பாலும் தன் பெண்டு பிள்ளைகளுக்காகத்தான் செய்கிறார்கள்.

உன் கடமைகளை நீ செய்து முடிக்க முடியாமல் போவதற்கு முன் அரைகுறை திருப்தியுடனாவது செய்து முடிப்பது நல்லது.

விஞ்ஞானிகள் மனிதர்களையும் பிற உயிரினங்களையும் மற்ற பொருள்களையும் ஆராய்ச்சி செய்வார்கள். ஆனால் ஞானிகள் தான் யார் என்று ஆராய்ச்சி செய்வார்கள்.

உத்தமன் எவனென்றால் எவனொருவன் அடுத்தவன் முன்னேற்றம் கண்டு பொறமை கொள்ளாது இருக்கிறானோ அவனே உத்தமன்.

உறவுகள் கசக்கும் முன் ஒதுங்கிவிட வேண்டும்.

ஆச்சாரங்கள் எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக் கொள். ஆனால் கடைப்பிடிக்க முடிந்தவற்றைக் கடைப்பிடி.

வேண்டாதவர் நம்மிடம் வந்தால் நமக்கு நட்டம். நம்மை விட்டுப் போனால் லாபம். வேண்டியவர் நம்மிடம் வந்தால் நமக்கு லாபம். நம்மை விட்டுப் போனால் நட்டம். சிலநேரம் மாறுபட்டும் இருக்கும்.

கோபமே வராத ஒருவனுக்குக் கோபம் வருகிறது என்றால், அவன் யார் மீது கோபம்கொள்கிறானோ அவன் தப்பு செய்திருக்கிறான் என்று பொருள்.

பெரும்பாலும் வாழ்க்கை வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது என்ற வகையில்தான் இருக்கும். விக்கிரமாதித்தன் சளைக்காதது போல் நாமும் சளைக்கக்கூடாது.

நடிப்பு அன்பாகி விட முடியாது. நடிப்பது வாழ்க்கையில்லை. நடிப்பது தான் வாழ்க்கை என்ற கொள்கையில் இருப்பவர்கள் நமக்குத் தேவையில்லை.

உற்றவனுக்கே ஒன்றில் அக்கறை இல்லையென்றால் மற்றவன் அதில் அக்கறை கொள்ள வேண்டிய தேவையில்லை.

தன்னைத் தானே மகிழ்வுடன் வைத்துக் கொள்ளத் தெரியாதவன் ஏமாளி.

தகுந்த காரணமின்றி சக மனிதனை மதிக்காதவன் மனிதனே இல்லை.

கழுதை முன்னால் போனால் கடிக்கும் பின்னால் போனால் உதைக்கும் என்பார்கள். யாராவது இந்தக் கழுதையைப் போல் முன்னுக்குப் போனால் கடிப்பதும் பின்னுக்குப் போனால் உதைப்பதுமாக இருந்தால் அவர் மனிதரில் சேர்த்தியில்லை.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பது சரிதான். அதற்காக எப்பொழுதுமே குற்றம் செய்து கொண்டிருக்கும் சுற்றம் தேவையில்லை.

எதற்காவது ஒன்றுமில்லாமல் போன உறவை புதுப்பித்துக் கொண்டிருக்காதே.

இறுதிவரை அவ்வப்பொழுது நம் வீரத்தை சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முடிவெடுக்க முடியாத விவகாரங்களை காலத்தின் தீர்ப்புக்கு விட்டுவிட வேண்டும்.
மனிதன் எப்பொழுது நேர்மையாளனாக இல்லையோ அப்பொழுதே அவன் தாழ்ந்தவனாகி விட்டான்.

வீடாக இருந்தாலும் நாடாக இருந்தாலும் பிரச்சினை எதுவாக இருந்தாலும் அது சுயநலவாதிகளால் உருவாக்கப்படுவது தான்.

எதற்குமே மனம் மகிழவில்லை என்றால் நீ ஞானியாகி விட்டாய் என்று பொருள்.

உனது தேவைகள் எவ்வளவோ இருக்கும். அதற்கெல்லாம் பிறர் ஈடு கொடுக்க வேண்டும் என்று நீ எதிர்பார்க்கக்கூடாது. அப்படி எதிர்பார்த்தால் நீ ஒரு முட்டாள்.

ஒருவர் எவ்வளவு அன்புக்குரியவராக இருந்தாலும் நம்மீது எதற்காவது பொறாமைப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் பொறாமை நமக்குக் கெடுதலும் செய்கிறது. ஆனால், அவர்கள் கெடுதல் செய்வதில்லை.

இனிவரும் காலங்களில் உறவு என்பது மாமன் மச்சானோடு நின்று விடும். அதற்குமேல் போகாது. அந்த மாமன் மச்சானும் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருப்பார்களா என்பது சந்தேகம்.

வாழ்க்கையில் ஓரளவிற்கு நன்றாக இருப்பவன், தான் பணத்திற்கு சிரமப்படுவதாகச் சொன்னால் இந்த உலகம் அதை நம்பாது. அவன் உண்மையிலேயே பணத்திற்கு சிரமப்படுகிறான் என்று தெரிந்தால் இந்த உலகம் அவனை மதிக்காது.

எவனொருவன் எதற்குமே ஆசைப்படாதவனாக இருக்கிறானோ அவனே ஞானி. பிறர் ஞானி என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் சாதாரண மனிதர்களே. பிறரால் அவர்கள் ஞானி என்று சொல்லப்பட்டாலும் அவர்கள் சாதாரணமானவர்களே.

கடலுக்குள் இரவு நேரத்தில் படகில் சென்று மீன் பிடித்து வந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றும் கரையர் இனத்து மக்களுக்கு முன் நாம் எம்மாத்திரம்? வாழ்க்கையின் இரகசியம் அவர்களின் வாழ்க்கையில் அடங்கிப் போய்விட்டது. அவர்கள் சமுத்திரராஜனின் தவப்புதல்வர்கள். அவர்களை ஏமாற்றுகிறவன் வாழ்க்கையில் விளங்கமாட்டான்.

மனதில் அமைதி வேண்டும். உடம்பில் வலு வேண்டும், கையில் பணம் வேண்டும், இது எல்லாம் இருந்தால் அதுவே மகிழ்வான வாழ்க்கை.

நமக்கு அக்கம் பக்கத்தில் இருப்பவன் நம் மீது பொறாமைப் பட்டால் அது நம்மைப் பாதிப்பது போல், எங்கோ வெகு தொலைவில் உள்ள ஒருவர் நம்மீது பெருமைப்பட்டாலும் அது நம்மைப் பாதிக்கும். ஒட்டுமொத்தமாக பொறாமை குணத்தை எல்லோரும் வெறுங்கள். அந்த குணம் உள்ளவனை பன்றியிலும் கேவலமாக நடத்துங்கள்.

நமக்கு வேண்டாதவன் நம்மீது பொறாமைப்பட்டால் அது நம்மைப் பாதிப்பது போல் நமக்கு வேண்டியவர் எப்பொழுதாவது நம்மீது பொறாமைப் பட்டால் அதுவும் நம்மைப் பாதிக்கும்.

அநாகரீகமானவனை நாகரீகமானவனாக ஆக்கலாம். ஆனால் நாகரீகமானவனை அநாகரீகமானவனாக ஆக்குவது முட்டாள்தனம்.

சென்ற தலைமுறை பெண்கள் குடும்பத்தாருக்கு ஆப்பம் சுட்டுக் கொடுத்தார்கள். இந்தத் தலைமுறை பெண்களுக்கு ஆப்பம் சுட தெரியும் என்றாலும் நேரம் இருக்காது. வரும் தலைமுறை பெண்களுக்கு ஆப்பம் சுடத் தெரியாது. அதற்கடுத்து வரும் தலைமுறை பெண்களுக்கு ஆப்பம் என்றால் என்னவென்றே தெரியாது. ஒரு தலைமுறைக்கு இன்னொரு தலைமுறை இப்படித் தேய்ந்து கொண்டே போகிறது, தெரிந்து கொள்ளுங்கள்.

உன்னை மனிதனாக மதிக்கிறவன் எவ்வளவு கீழான நிலையில் இருந்தாலும் அவன் உயர்ந்தவன். உன்னை மனிதனாக மதிக்காதவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் அவன் தாழ்ந்தவன்.

ஆறு நேர்கோடு போல் நேராக ஓடாது. வளைந்து நெளிந்து கோணலும் மாணலுமாகத்தான் ஓடும். அப்படித்தான் மனித வாழ்க்கையும். அது வற்றாத ஜீவநதி போல் வளமையாக இருந்தால் போதுமானது.

இறைவனாலும், இயற்கையினாலும் தான் மனிதனுக்கு நீடித்த மகிழ்ச்சி வாழ்க்கையில் கிடைக்கும். பெரும்பாலும் மனிதனுக்கு மனிதனால் கிடைக்காது. அப்படிக் கிடைத்தால் அது தற்காலிகமானதாக இருக்கும்.

வாயைத் திறந்தாலே பொய்யாகப் பேசும் ஆட்களிடம் எப்பொழுதாவது நாமும் பொய் பேச வேண்டியிருக்கும். அதில் தவறில்லை. தற்காப்புக்கு அது தேவைப்படும்.

சம்பிரதாயங்கள் என்ற பெயரில் என்னென்னமோ சடங்குகளையெல்லாம் மனிதன் செய்கிறான். அவன் எந்தச் சடங்கு செய்தாலும் அதில் தொடர்புடையவர்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி வேண்டும். அது இல்லாத போது அந்தச் சடங்குகளே தேவையில்லை.

இமயமலை நேராக வேகமாக வந்து உன்மீது மோதினால் அது நொறுங்க வேண்டும். வாழ்க்கையில் போராட்ட காலங்களில் அந்த அளவிற்கு நீ உறுதியானவனாக இருக்க வேண்டும்.

ஆசைக்கும் பாசத்திற்கும் அடிமைப்பட்டு வாழ்க்கையில் அவதிப்படுவது பெண்களின் இயற்கை குணம்.

ஒருவன் பொருளை வேறொருவன் பொருளுக்குடையவனுக்கு தெரியாது எடுத்துக் கொள்வது திருட்டு. தெரிந்தே எடுத்துக் கொள்வது அபகரிப்பு, தெரிந்தே பலாத்காரம் செய்து எடுத்துக் கொள்வது கொள்ளை. நமது பொருளை இன்னொருவன் எந்த வகையிலும் எடுத்துக்கொள்ளாது பார்த்துக் கொள்ள விழிப்புத்தன்மை, புத்திசாலித்தனம், வீரம் எல்லாம் நமக்கு வேண்டும்.

பெரும்பாலான மனிதர்கள் மகிழ்வுடன் வாழ்வது எப்படி என்று தெரியாத மனிதர்களே.

நிறைய பொய் பேசு. ஆனால் என்னிடம் மட்டும் பேசாதே என்று நம் பெண்டு பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கும் அளவிற்கு இந்த உலகம் மாறி வருகிறது.

வாழ்க்கை முழுதும் அல்வா சாப்பிட்டதுபோல் இருக்காது. இடையிடையே கடுக்காய் சாப்பிட்டது போலும் இருக்கும்.

திருமணம் நல்ல தம்பதிகளுக்கு சொர்க்கத்திலும் நல்ல தம்பதிகள் அல்லாதவர்களுக்கு நரகத்திலும் நிச்சயிக்கப் படுகிறது.

எவ்வப்பொழுது எந்த வேலையைச் செய்யத் தோன்றுகிறதோ அப்பொழுது அந்த வேலையைச் செய்து கொண்டு போகலாம். சாஸ்த்திரங்கள் பார்க்க வேண்டியதில்லை. ஆனால்,

வாழ்க்கையில் மிக முக்கியமான வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கும்பொழுது சாஸ்திரங்களைப் பார்த்துத்தான் ஆக வேண்டும்.

எவனொருவன் வாயிலிருந்து எதற்கெடுத்தாலும் பொய் வருகிறதோ அவன் வாழ்க்கையில் விளங்க மாட்டான்.

நமது வாழ்க்கையில் நமக்குத் திருப்தி வேண்டும். பிறர் யாரும் திருப்தியை நமக்குள் திணிக்க முடியாது.

நம் வாழ்க்கையில் நாம் அடையும் நற்பலன்கள் இரண்டு காரணங்களால் அமைகிறது. ஒன்று முற்பிறவிகளில் நாமே செய்த நற்செயல்களாலும், இன்னொன்று நம் முன்னோர்கள் செய்த நற்செயல்களாலும் அமைகிறது. நாமே முற்பிறவிகளில் செய்த நற்செயல்களால் நாம் அடையும் பலன்கள் பூர்வ புண்ணியப் பலன்கள் என்றும் நம் முன்னோர்கள் செய்த நற்செயல்களால் நாம் அடையும் பலன்கள் பூர்வ பாக்கியப் பலன்கள் என்றும் ஆகிறது.

நாம் புத்திசாலியாக இல்லையென்றால் பாதகமில்லை. ஆனால் முட்டாளாக இருக்கக்கூடாது.

வாழ்க்கையில் முன்னேறாது போனாலும் இருக்கும் நிலையிலிருந்து கீழோராய் போகாது இருந்தாலே போதும்.

ஒரு நபர் மீது ஏதாவது குறை சொல்ல வேண்டுமானால் அவர் மீது குறை சொல்ல முதலில் நமக்குத் தகுதி இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்குத் தகுதி இருந்தால் அவர்மீது குறைசொல்லலாம். இல்லையென்றால் சொல்லக் கூடாது.

நமக்கென்று சில இரகசியங்கள் இருக்கும். அவை நமக்கும் இறைவனுக்கும் மட்டும் தெரிய வேண்டியவை. பிறருக்கு தெரியக் கூடாது. அவைகளை மனம் விட்டு யாரிடமும் சொல்லக்கூடாது. ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடி பூட்டுகளைப் போட்டு அவைகளைப் பூட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அவைதான் நம்மோடு வாழ்ந்து நம்மோடு அழிந்து போகும் இரகசியங்கள். அந்த இரகசியங்கள் மனதிற்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய இரகசியங்களாக இருந்தால் அவர் பாக்கியசாலி.

வாழ்க்கையின் ஒரு காலக்கட்டத்தில் சில விசயங்களைப் பற்றிப் பேச நமக்கு ஆளே கிடைக்கமாட்டார்கள். நமக்கு நாமே பேசிக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்காது. அப்பொழுது இந்த உலகமே நமக்கு பைத்தியக்காரப்பட்டம் கட்டிவிடும்.

ஆண்பிள்ளை வேண்டுமென்று பத்து பெண் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் தம்பதிகளும், பெண்பிள்ளை வேண்டுமென்று பத்து ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் தம்பதிகளும் முட்டாள் தம்பதிகள்.

யாராவது நான் முட்டாளாகத்தான் இருப்பேன், இது சத்தியம் என்ற வகையில் வாழ்க்கையில் நடந்து கொண்டால் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை.

நாம் எவரிடமிருந்தும் அன்பு உள்பட எதையுமே எதிர்பார்க்காது இருந்தால் நமக்கு வாழ்க்கையில் ஏமாற்றம் என்பது இருக்காது.

மனிதன் ஒழுக்கமாக வாழ்ந்தால் எந்த ஆச்சாரமும் தேவையில்லை.

நாம் முன்னேறினால் அதைக் கண்டு பொறாமைப்படுகிறவர் உறவும், சிரமம் அடைந்தால் அதைக் கண்டு ஆனந்தப்படுபவர் உறவும் நமக்கு எப்போதுமே தேவையில்லை.

ஒருவனுக்கு இன்னொருவனின் பொறாமைக்கு இணையான துன்பம் கொடுக்கக் கூடியது வேறொன்றுமில்லை.

நெட்டையோ குட்டையோ எதையும் ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாம் கிடைக்கும். எல்லாவற்றையும் உற்று உற்றுப் பார்க்கிறவனுக்கு ஒன்றும் கிடைக்காது.

முன்னொரு காலத்தில் நமக்குப் பேருதவி செய்த ஒருவருக்குப் பின்னொரு நாளில் அவருக்குத் தேவைப்படும் பொழுது எந்த உதவியும் செய்ய முடியாத நிலையில் நாம் இருந்தால் அதைவிட மனத்திற்கு துன்பம் விளைவிக்கக் கூடியது வேறொன்றுமில்லை.

ஏதாவது உணவு தானியத்தை சல்லடையில் போட்டு சலித்தால் சல்லடையில் மிஞ்சுவது குப்பை கூழமாகத்தான் இருக்கும். அதே போல் தான் உறவுகளும். உறவுகளை மனதில் போட்டு சலித்தால் மிஞ்சுவது மனவேதனையாகத்தான் இருக்கும். எந்த உறவாவது மகிழ்ச்சியை அளித்தால் அந்த உறவை விட்டு விடாதே.

உறவுகள் சில நேரங்களில் கசக்கும். பிறகு நெல்லிக்காயை சாப்பிட்டுவிட்டு தண்ணீர் குடித்தால் இனிக்குமல்லவா அதுபோல் இனிக்கும். அதுதான் உறவு.

நாம் நல்லது செய்தால் அதற்குக்கூட நம்மீது சாபமிடுகிறவர்களும் உண்டு.

மனிதனுக்கு புதிது புதிதாக பிரச்சினைகள் வரும். அதனால் பழைய பிரச்சனைகள் அமுங்கிப் போகும்.

புத்திசாலி எப்பொழுதுமே புத்திசாலியாக இருப்பதில்லை. எப்பொழுதாவது முட்டாளாகவும் இருப்பான்.

குற்றம் செய்தாலும் ஒரு முட்டாளை மன்னிக்கலாம்.

தர்மம் சில நேரங்களில் கொடூரமாக நடந்து கொள்ளும். அக்கிரமங்கள் செய்தாவது தன் கடமையைச் செய்யும். அப்போது அது அக்கிரமதர்மம் என்று பரிணாமம் எடுக்கிறது.

அப்பழுக்கில்லாத முதியோர் எல்லாரும் தர்ம தேவதைக்குச் சமம்.

ஆண்டவன் சொர்க்கம், நரகம் இரண்டையுமே பெண்களிடம் வைத்திருக்கிறான்.

ஒருவனுக்கு இரத்தக் கொதிப்பு வருகிறதென்றால், மனக்கவலை வருகிறதென்றால், அதற்குப் பெரும்பாலும் வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகள்தான் காரணமாக இருப்பார்கள்.

யோகம் என்று ஒன்று இல்லாமல் எந்த மனிதனாலும் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

நமக்குத் தெரியாத ஒருவன் நம்மீது படும் பொறாமையை விட நமக்குத் தெரிந்த ஒருவன் நம்மீது படும் பொறாமை அதிகத் தீமையை நமக்கு விளைவிக்கும்.

வாழ்க்கையில் ஆடம்பரத்தை முற்றிலும் ஒழித்து விட வேண்டும். காரணம், ஆடம்பரத்தின் மூலம் நமக்குக் கிடைக்கப்போவது எதிரிகள்தான்.

வாழ்க்கையில் லாபத்தையோ அல்லது நட்டத்தையோ பற்றி கவலைப்படாதவன் ஒன்று மாவீரன் அல்லது ஞானி.

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற சமுதாய நிலை மாறி, பணம் படைத்தோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று ஆகிவிட்டது. அந்த அளவிற்கு சமுதாயம் மாறியிருக்கிறது.

இயல்பில் சுயநலவாதியாக இல்லாத ஒருவனை சுயநலவாதியாக ஆக்குவது பெரும்பாலும் பெண்களே.

ஐந்தறிவு உள்ள உயிரினங்களான ஆடு, மாடுகள் கூட தன் குட்டிக்குப் பால் கொடுக்கிறது. எனவே, ஆறறிவு படைத்த மனிதப் பெண் தன் பிள்ளைக்குப் பால் கொடுப்பதில் ஒன்றும் வியப்பில்லை. எது வியப்பில் ஆழ்த்துகிறது என்றால் மிருகங்களை விட உயர்வான சில பெண்கள் தன் பிள்ளை

பிறந்தவுடனே கூட தூக்கி குப்பைத் தொட்டியில் போட்டுச் செல்வதுதான் வியப்பளிக்கிறது. அப்படி எதற்காக அந்தப் பிள்ளையைப் பெற வேண்டும். அதாவது ஆறறிவு படைத்த மனிதப் பிறவியை விட ஐந்தறிவு, நான்கறிவு படைத்த பிற பிறவிகள்தான் உண்மையில் உயர்ந்த பிறவிகள்.

வயதில் பெரியவர்கள் ஒரு சிறுவன், சிறுமியிடம் கூட எதற்காவது யோசனை கேட்கலாம். அதில் தவறில்லை. சில நேரங்களில் அச்சிறார்கள் கூட அற்புதமான யோசனை சொல்வார்கள். ஆனால், சிறார்கள் முக்கியமான காரியங்களில் பெரியவர்களின் யோசனையைக் கேட்பது மிகவும் அவசியம்.

நமக்கு நேரம் சரியில்லை என்றால் வீதியில் போகும் பன்றிக்குட்டி கூட நம்மைப் பார்த்து கேலி செய்யும். நம் நேரம் சரியாகும் வரை நாம் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும்.

மனசாட்சிக்கு உட்பட்ட பொய் சத்தியம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அதைச் செய்யலாம். அதில் தவறில்லை. நைல்நதி உலகத்தில் உள்ள நதிகளில் மிகவும் நீளமானது. மொத்தம் 4500 மைல்களுக்கும் மேல் நீளமானது. நம் வாழ்க்கை அதைவிட நீளமானது. இந்த உலக வாழ்க்கைக்குப் பின்பும் வேறுலக வாழ்க்கை நமக்கு உண்டு. யுகம் யுகமாக நாம் வாழ்ந்து கொண்டே இருப்போம்.

மறுபிறவி என்பது வேறொன்றுமில்லை. இந்தப் பிறவியின் நீட்சிதான் மறுபிறவி. இப்பிறவியின் வினைப் பயனையும்,

நிறைவேறாத ஆசைகளையும் அனுபவிக்கும் காலம் தான் மறுபிறவி.

எல்லாக் குழந்தைகளையும் கொஞ்சுவதிலும், அடங்காத பெரியவர்களைத் திட்டுவதிலும் உள்ள மகிழ்ச்சி வேறு எதிலும் இல்லை.

நமக்கு வருகிற வெட்டி வேலைகள் பெரும்பாலும் தெரிந்தவர்களிடமிருந்துதான் வரும்.

எங்காவது சென்று வந்தபின் ஏன்டா அந்த இடத்திற்குச் சென்றோம் என்று மனம் எண்ணினால் பிறகு அந்த இடத்திற்குச் செல்லவே கூடாது.

ஒருவர் தனக்குத் தெரிந்த ஒன்றை இன்னொருவரிடம் பகிர்ந்து கொள்ளலாம். அந்த இன்னொருவர் ஆணாக இருந்தாலும் சரிதான், பெண்ணாக இருந்தாலும் சரிதான். அதில் தவறில்லை.

பாதுகாப்பான வாழ்க்கை மிகமிகத் தேவை. அதற்குப் பிறகுதான் மற்றவை எல்லாம்.

நாம் ஒருவரிடத்தில் காட்டும் அன்பு பெரிதில்லை. அந்த அன்பு அவருக்கு வாழ்வில் நல்வழி காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். மூடத்தமான அன்பு எதற்கும் உதவாது.

மனித நாகரிகம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது கையூட்டு (லஞ்சம்). அதை ஒழிப்பது என்பது கிட்டத்தட்ட முடியாத ஒரு வேலை.

தெய்வ வழிபாடு கூட சிக்கனமாகத் தான் செய்ய வேண்டும். இறைவழிபாடு மனிதன் அமைதியாக இருப்பதற்குண்டான வழிமுறைகளில் ஒன்று. அத்துடன் ஆத்ம திருப்தியும் கிடைக்கும்.

எதையும் ஒழித்து வைத்தால் சில நாட்களில் அது மறந்து போகும். எனவே எதையும் ஒழித்து வைக்காதீர்கள்.

சில பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை பெண்கள் என்று ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் ஆண்களாக மாறிவிடுவார்கள்.

பெரும்பாலான ஆண்கள் ஓட்டாண்டி ஆவதற்கு காரணமே பெண்கள்தான்.

பிறர் யாராக இருந்தாலும் நம் வாழ்வில் விளையாட சிறிதளவேனும் அனுமதிக்கக்கூடாது.

பெரும்பாலான மனிதர்கள் ஏமாளி போல் நடிக்கும் கெட்டிக்காரர்கள் தான்.

உண்மையான அன்பையும் பாசத்தையும் வேறு எதுவாலும் வெல்ல முடியாது.

உண்மையில் பெண்களை விட ஆண்களே பொறுமைசாலிகள்.

இன்ப உணர்வுகள் மனிதனை வாழ வைக்கும். துன்ப உணர்வுகள் சாகடிக்கும்.

தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையும் சுயமேன்மைப் போக்கும் ஒருவனின் வாழ்வைக் கெடுத்துவிடும். தன்னை அதிபுத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருப்பவன் அடிமுட்டாள்.

பெரும்பாலான ஆண்களின் உள்ளம் மிக மிக மென்மையானது. அதைக் கரடுமுரடாக ஆக்குவதே பெண்கள்தான்.

விரையச் செலவு என்பதே இல்லாது வாழ்க்கையில் எந்த மனிதனாலும் வாழ முடியாது.

பெரும்பாலும் ஆண்கள் பெண்களால் தான் குடிகாரர்கள் ஆகிறார்கள்.

மனோதர்மம் பொதுதர்மத்திற்கு உட்பட்டிருந்தால் நல்லது. முடியாது போனால் பாதகமில்லை.

மகிழ்ச்சி என்றால் என்ன என்று தெரிந்தால்தான் மகிழ்வுடன் வாழ முடியும்.

சுயநலம் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது யாருமே மக்கு இல்லை. எல்லோரும் கெட்டிக்காரர்கள்தான்.

மனிதன் கடைசிகாலத்தில் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இந்த உலகம் நம்மை அனாதைப் பிணமாக விட்டுவிடும். ஆனால், அதில் ஒன்றும் தவறில்லை. நமது உடம்பு நான்கு நாய்களுக்காவது உணவாகப் போகும் இல்லையா? அதுவே ஒரு தர்மம்தான்.

சொர்க்கம் வேறு எங்குமே இல்லை. இந்தப் பூமியில் தான் இருக்கிறது. அதை உணராதவர்கள் வேறு எங்கோ இருக்கிறது என்பார்கள்.

நல்லவனாக இருக்கலாம். ஆனால் மிகவும் நல்லவனாக இருக்கக்கூடாது. கெட்டவனாக இருக்கக் கூடாது. மிகவும் கெட்டவனாக இருக்கவே கூடாது.

தத்துவங்கள் எத்தனையோ. ஒரு குறிப்பிட்ட தத்துவம் ஒரு தனி மனிதனுக்கு ஒத்துவராமல் போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த தனிமனிதன் தனக்கே உண்டான தத்துவப்படி நடந்து கொள்ளலாம். அதில் தவறில்லை.

பெரும்பாலும் பெண்கள் எதையும் தாமதமின்றி விரைவில் அடைய விரும்புகிறார்கள். அவர்களுக்குத் தாமதம் ஏற்பட்டால் பொறுமை இருப்பதில்லை. எந்த உறவாக இருந்தாலும் அது வேதனை தரக்கூடிய உறவாக இருந்தால், அந்த உறவு நமக்குத் தேவையே இல்லை. ஆனாலும், நாம் அறுத்துக் கொண்டாலும் உறவு என்பது இருந்து கொண்டிருக்கும்.

ஆணுக்கோ பெண்ணிற்கோ யாராக இருந்தாலும் எதிர்பாலில் துணை என்று ஒருவர் வேண்டும். அந்தத் துணை நல்ல துணையாக இருக்க வேண்டும்.

நம் மனத்தில் ஆசை என்பது வந்துவிட்டால் பாசம் என்பது அங்கு இல்லாமல் போய்விடும்.

காலதேவன் என்று ஒருவர் இருக்கிறார். நம் வாழ்வில் நடப்பது எல்லாமே அவரின் விருப்பப்படி தான் நடக்கும். அவரின் விருப்பத்திற்கு மாறாக வேறு எதுவுமே நடக்காது. இது சத்தியம்.

பைத்தியத்திற்கு பைத்தியம் பிடித்தால் பைத்தியம் தெளிந்து விடும்.

எப்படி புத்திசாலிக்கு மூளை எப்படியெல்லாமோ வேலை செய்யுமோ அதுபோல் முட்டாளுக்கும் மூளை எப்படி எப்படியெல்லாமோ வேலை செய்யும்.

கொண்டு வந்தால் தாய், கொண்டு வந்தாலும் கொண்டு வராவிட்டாலும் தந்தை, சீர் கேட்பாள் சகோதரி, கொலையும் செய்வாள் பத்தினி, உயிர் காப்பான் தோழன் இதுதான் நவீன தூக்குத் தூக்கி தத்துவம்.

மனித வாழ்க்கை நாற வாழ்க்கை. இந்த நாற்றமெடுத்த வாழக்கை வாழ்வதற்காக மனிதனை இறைவன் படைத்திருக்கவே தேவையில்லை.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதுதான் எல்லா அறிஞர்களின் அறிவுரை. அது சரியா? மனிதனின் மனமே இறைவனாக இருக்கும் பொழுது அவன் ஏன் தன் மனம் போல் நடந்து கொள்ளக்கூடாது. இதற்குப் பதில், மனிதன் தன் மனம்போல் நடந்து கொள்ளலாம் என்பதுதான். வாழ்க்கையை உள்ளது உள்ளபடி நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் நம்மால் வாழ முடியாது. இது சத்தியம்.

வாழ்க்கையில் மகிழ்வுடன் வாழத் தெரிந்தவனால்தான் மகிழ்வுடன் வாழ முடியும். மற்றவனால் முடியாது. இன்ப உணர்வுகள் மனிதனை மகிழ்வுடன் வைத்திருக்கிறது.

பாவத்தை நோக்கி மனம் செல்லும் பொழுது அதற்கு என்ன விமோச்சனம்? இறையுணர்வா, தார்மீக உணர்வா, இல்லை சுய தர்மமா என்று கேட்டால், சந்தேகத்திற்கு இடமில்லாமல் சுய தர்மம்தான்.

நம் தலையெழுத்தை நாம்தான் நொந்துகொள்ள முடியும். வேறு யாரும் நொந்து கொள்ள முடியாது.

ஒருவன் செய்யும் தவறு இன்னொருவனால் எச்சரிக்கப் படும் வரை மன்னிக்கத்தகுந்தவை. எச்சரிக்கப்பட்ட பின்பும் செய்யப்படும் தவறுகள் மன்னிக்கத் தகுந்தவை இல்லை.

வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் எல்லாம் நாம் திரும்ப பெற முடியாதவை. அப்படி திரும்பப் பெற முடியாத நிகழ்வுகளைப் பற்றி நாம் துளியும் கவலைப்படக்கூடாது.

ஒரு பதவிக்கு உண்டான தகுதிகளை ஒருவன் இழக்கும்பொழுது அல்லது இழந்து கொண்டிருக்கும்பொழுது அந்தப் பதவிக்குண்டான உரிமையை, அதிகாரத்தை அவனால் செயல்படுத்த முடியாது.

உத்தமமாக வாழ்பவனுக்கு இறைவன் தண்டனை கொடுத்தால் அதைவிட அநீதி வேறு எதுவும் இல்லை. இறைவனே கதி என்று இருப்பவர்களுக்குக் கூட இறைவன் தண்டனை கொடுப்பான் என்றால் அதில் நியாயம் இல்லை.

மனிதனுக்கு முதலில் வேண்டியது பொறுமையும் அமைதியும் தான். மகிழ்ச்சி கூட அதற்கு அடுத்தபடி தான்.

மனிதனின் இயற்கைக் குணமே இன்னொரு மனிதனை ஆளுமை செய்ய முயல்வதுதான். புத்தியில்லாதவன் அடிமையாகிறான். விதியும் அதற்கு உதவும்.

வாழ்க்கையில் தனி மனிதன் மகிழ்வுடன் இருப்பதே ஒரு தனிக்கலை. இதை ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருக்க வேண்டும்.

தம்பி, விதி விதி தான். மதி மதி தான். விதியை மிஞ்ச மதியால் முடியாது. விதி இறைவனால் தீர்மானிக்கப்படுகிறது. அதனால்தான் இஸ்லாமிய மக்கள் எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று ஒரே வரியில் சொல்லி விட்டார்கள். புரிந்து கொள்.

தத்துவம் தத்துவமாக ஏதோ ஒரு புத்தகத்தில் இருக்கும். அது உண்மை. நடைமுறையில் இல்லாவிட்டாலும் அது பொய் இல்லை. தத்துவங்கள் உண்மைதான். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் எல்லா தத்துவங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்க முடியாது. அதே நேரத்தில் எப்பொழுதாவது இந்தத் தத்துவங்களை நாம் பயன்படுத்தினோம் என்றால் அவை நமக்கு வெற்றியைக் கொடுக்கும். காரணம் அவை உண்மை, பொய் இல்லை என்பதால்.

என்னை யாரும் நம்பாதீர்கள் என்று நாம் நேர்மையாகச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நம்மை யாரும் நம்பிக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் உண்மை.

நமக்கு எத்தனை வயது ஆனாலும் சிறுவர்களைப் போல் மனநிலையில் செயலாற்றினால் நம்மை கவலை கவ்விக் கொள்ளாது.

மனிதனை மிருகமாக ஆக்குவதே சக மனிதர்கள் தான். இல்லையென்றால் மனிதன் மனிதனாகவே இருப்பான்.

ஒரு உண்மையான நண்பனிடம் நம்மைப் பற்றிய எந்த விவரம் வேண்டுமானாலும் சொல்லலாம். வேறு யாரிடமும் எல்லாமும் சொல்லக் கூடாது. அது நல்லதில்லை.

எப்பொழுதாவது தெய்வத்தை நினைப்பதும், ஆழ்மனத்தில் தெய்வத்தை நினைப்பதும், எப்பொழுதுமே தெய்வத்தை நினைத்துக் கொண்டிருப்பதும் வெவ்வேறு.

எவனொருவன் பாவங்கள் அதிகம் செய்யவில்லையோ அவன் இறைவன் வைக்கும் தேர்வுகளில் தேர்ச்சியடைவான்.

யாரையாவது போற்றும் பொழுது போற்றி கொண்டு, தூற்றும் பொழுது தூற்றிக் கொண்டிருந்தால் அவர்கள் நம்மிடம் ஒழுங்காக இருப்பார்கள்.

இறைவனை உரிமையோடு ஒரு பக்தன் போற்றவும் செய்யலாம், தூற்றவும் செய்யலாம். நாமே ஏதாவது ஒரு பாவம் செய்துவிட்டால், ஏனப்பா என்னை இந்தப் பாவம் செய்ய வைத்தாய் என்று அவரை மனம் வருந்திக் கேட்கவும் செய்யலாம்.

நடிப்பு உறவாக முடியாது. உறவு நடிப்பாகும் பொழுது அது இல்லாமல் போகும்.

யாராவது மிகப்பெரிய புத்திசாலி போல் உன்னிடம் பேசினால் நீ ஒரு விஞ்ஞானி போல் பேசு. அவர் விஞ்ஞானி போல் பேசினால் நீ ஞானி போல் பேசு. பிறர் ஞானி போல் பேசினால் நீ இறைவனைப் போல் பேச வேண்டும். புத்திசாலியை விட மேலானவர் விஞ்ஞானி, விஞ்ஞானியை விட மேலானவர் ஞானி, ஞானியை விட மேலானவர் இறைவன்.

ஆசிரியர் மக்கு என்றால் அவரிடம் கல்வி பயிலும் மாணவனும் மக்கு. அவன் ஏகலைவனாக இருந்து தானாகத்தான் எதையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

வியாபாரியிடம் வியாபாரி போல்தான் பேச வேண்டும்.

நம்மிடம் திடீரென்று யாராவது வருவார்கள். வேலை செய்து கொண்டிருக்கும் நம் மூளை உடனே வேலை செய்யாது, நின்று போகும். அதுதான் அறிகுறி, அவர்கள் நல்ல எண்ணத்துடன் நம்மிடம் வரவில்லை என்பதற்கு.

மனோதத்துவம் தெரிந்திருந்து துணிச்சலும் இருந்தால்தான் அடுத்தவனை மேய்க்க முடியும்.

நெருப்பைக் குளிர்ந்த நீரிலும் அணைக்கலாம், சுடுநீரிலும் அணைக்கலாம். அதுபோல் நெருப்பாக இருக்கும் மனிதனை நாம் சாந்தமாக இருந்தும் அடக்கலாம், சூடாக இருந்தும் அடக்கலாம். எப்படி என்பதை சூழ்நிலை சொல்லும்.

முறையான கல்வி அறிவு இல்லாத ஒருவன் எவ்வளவு செல்வந்தனாக இருந்தாலும் தனக்கு முறையான கல்வி அறிவு இல்லையே என்ற ஏக்கம் உள்ளவனாகத்தான் இருக்கிறான். ஆனாலும் அவனது அனுபவ அறிவு முறையான கல்வி அறிவுள்ளவனின் அறிவைக் காட்டிலும் மேலானதும் தக்க நேரத்தில் உதவி செய்யக்கூடியதாகவும் இருக்கிறது.

வாழ்க்கையில் பிரச்சனைகள் பெரும்பாலும் பிறரை தவறாகப் புரிந்து கொள்வதில் உருவாவதுதான்.

# 6. மனசாந்தி

## காயத்ரி மந்திரங்கள்

***(நானே வடமொழி தெரிந்த ஒரு சிநேகிதியின் உதவியுடன் உருவாக்கியது. அனுபவத்தில், இவைகளை தினம் சொல்லி வந்தால் மனதிற்கு அமைதி கிடைக்கிறது. வாசகர்கள் பயனடைய இங்கே கொடுக்கப்பட்டுள்ளது)***

ஓம். . . ஏகதந்தாய வித்மஹே. . .
வக்ர துண்டாய தீமஹீ. . .
தந்நோ வாதாபி கணபதிம் ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம் தத் புருஷாய வித்மஹே. . .
மஹா வீர் சேனாய தீமஹீ. . .
தந்நோ சண்முக ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . சதாசிவாய வித்மஹே. . .
சஹஸ்ர அக்ஷய தீமஹீ. . .
தந்நோ மஹாலிங்க ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . சாந்த சொரூபாய வித்மஹே. . .
பக்த சஹாய தீமஹீ. . .
தந்நோ காமாக்யா ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . சர்வ வியாபின்யை வித்மஹே. . .
பாப நாசின்யை தீமஹீ. . .
தந்நோ ஆவுடை நாயகி ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . வாயுபுத்ராய வித்மஹே. . .
பராக்ரம அனுக்கிரஹாய தீமஹீ. . .
தந்நோ ஆஞ்சனேய ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . சர்வரோக நிவாரணாய வித்மஹே. . .
தேக ஆரோக்ய அனுக்கிரஹாய தீமஹீ. . .
தந்நோ மருந்தீஸ்வரோ ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . ஈசான்ய மூர்த்தி வித்மஹே. . .
ருண ரோகாதி தாரித்ரிய தீமஹீ. . .
தந்நோ ருணஹரேஸ்வரோ ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . ஸ்வயம் ப்ரஹாச வித்மஹே. . .
சர்வ ரக்ஷஹ தீமஹீ. . .
தந்நோ ஆதித்யா ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . மஹேஸ்வரோ சிரச வாசின்யை வித்மஹே...
பூர்ண சந்தோஷ் அனுக்கிரஹாயை தீமஹீ. . .
தந்நோ சந்த்ராய ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . பூமி புத்ராய வித்மஹே. . .
தேவ சேனா தீமஹீ. . .
தந்நோ அங்காரஹ ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . சுந்தர ரூபேன வித்மஹே. . .
சர்வ வித்யா அனுக்கிரஹாய தீமஹீ. . .
தந்நோ புதாயப் ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . ஸ்வர்ண தேஹாய வித்மஹே. . .
சர்வ மங்கள அனுக்கிரஹாய தீமஹீ. . .
தந்நோ பிரஹஸ்பதி ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . மங்கள ரூபாய வித்மஹே. . .
சகல சுகபோகாதிபதி தீமஹீ. . .
தந்நோ சுக்ர ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . ரவி புத்ராய வித்மஹே. . .
ஆயுஸ் காரஹாய தீமஹீ. . .
தந்நோ சனீஸ்வரோ ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . காலா ஸர்ப்பராஜாய வித்மஹே. . .
போக காரஹாய தீமஹீ. . .
தந்நோ ராகு ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . யுவ ஸர்ப்பராஜாய வித்மஹே. . .
ஞான காரஹாய தீமஹீ. . .
தந்நோ கேது ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . சத் புருஷாய வித்மஹே. . .
தர்ம சம்வர்த்தாய தீமஹீ. . .
தந்நோ சித்ரகுப்தாய ப்ரசோதயாத். . .
ஓம். . . மனோ. . . சாந்தி, சாந்தி, சாந்தி . . .

ஓம். . . . சிவாய நம . . . .
ஓம். . . . சிவாய நம . . . .
ஓம். . . . சிவாய நம . . . .
ஓம். . . . ஹரி ஓம் . . . .
ஓம் . . . .ஹரி ஓம் . . . .
ஓம் . . . .ஹரி ஓம் . . . .

சுபம்